• REGISTERED AT THE G. P. O. AS AW NESPRAPE

# ஈழகேசரி

தேசிய வார வெளியீடு

மலர் 19 | சுன்னாகம், விரோதி சித்திரை ௨௬ (காந்தி ஆண்டு 80) 8-5-'49, ஞாயிறு | இதழ் 39

**சினிமாப் பாட்டுப் புத்தகங்கள்**

40 விதமான வெவ்வேறு சினிமாப் படங்களின் பாட்டுப் புத்தகங்களில் வகைக்கு 25 வீதம் 1000 புத்தகங்களை ஒரேமுறையில் வாங்குவோருக்கு ரூபாய் 40/- விலையிட்டுக் கொடுக்கப்படும். ரூபாய் 10/- முற்பணமாக அனுப்பி வி. பி. பி. மூலமும் பெற்றுக்கொள்ளலாம்.

த. தம்பித்துரை
நியூஸ் ஏஜென்ட்
பத்திரிகைகள் கதைப்புத்தகங்கள் முதலியன விற்பனை செய்வோர்
கச்சேரியடி :: யாழ்ப்பாணம்
கிளை :- பெரியகடை :: யாழ்ப்பாணம்

# சீனத்தின் சோதனைகாலம்

## வல்லரசுகள் அசையுமா?

**சீனத்துக் கொம்யூனிஸ்டுகள் யாங்ஸி நதியைக் கடந்துவிட்டனர். எனவே, மோ-ஸி-ரங் தலைமையிற் சீனத்தில் முன்னேறிவரும் கொம்யூனிஸ்டுகளின் யுத்தமானது ஒரு புதிய கோணத்தை நாடிச் செல்லுகின்றது.**

இரு கட்சியினருக்குமிடையே சமாதானம் ஏற்படக்கூடுமெனக் கருதப்பட்டபோதிலும் படைப்பலந்தான் ஈற்றில் வெற்றியை ஈட்டும் சக்தி வாய்ந்த ஒரு சாதனமாக அமைந்துவிட்டது. ஆகவேதான், பீப்பிங் நகரிலே சமாதானப் பேச்சுக்கள் மிக மும்முரமாக நடைபெற்றுக்கொண்டிருக்கையில் யாங்ஸி நதியின் இருகரையிலும் பாரிய இராணுவப் படைகள் அணிவகுக்கப்பட்டன. அப்போது கொம்யூனிஸ்டுகள் யாங்ஸி நதியைக் கடக்கவேயில்லை. 'சமாதானம்' என்ற பேச்சு நிலவி வந்தவிடத்தும் அதைச் சிறிதும் பொருட்படுத்தாது, கடுமையான ஒரு போருக்கே ஆயத்தங்கள் நடைபெற்றன. தென் சீனத்தில் இறுதிப் போரை நடத்துவதற்கான இம்முயற்சியில் இருசாராரும் ஈடுபட்டனர்.

### கொம்யூனிஸ்டுகள் வீரம்

உலகத்திலேயே மிகப்பாரிய யுத்தமுனை என்று சொல்லக்கூடிய ஒரு இராணுவ ஏற்பாட்டைக் கொம்யூனிஸ்டுகள் திறம்படச் சமாளித்தனர். ஆனால், சீனத்துத் தேசியப் படையினர் அடைந்த இன்னல்கள் சொல்லுந்தரமன்று. தேசியப்படையினர் ஒரு சிலருக்கு ஷியாங்கை ஷேக் மீது அவ்வளவு நம்பிக்கையில்லை. வேறு சிலர் சீனத்தின் சில மாகாணங்களை வெறுத்து வந்தனர். இந்நிலையில் அனைவரும் ஒருமித்த நோக்கத்துடன் கொம்யூனிஸ்டுகளை எதிர்த்துப் போராடுவது சாத்தியமாகவில்லை. பொதுவான ஒரு குறிக்கோள் இருந்தாலன்றி, படைவீரர்களின் பலத்தை ஒருவழிக்குத் திரட்டுவது இயலாத காரியமாகும்.

தேசியப் படையின் தலைவரான லீ-சங்-ஜென் என்பவர் கொம்யூனிஸ்ட் தலைவரான மோ-ஸி-ரங் என்பவருடன் எவ்வித சமரச ஒழுங்கையும் செய்துகொள்ள முடியவில்லை. இதிலிருந்து கொம்யூனிஸ்டுகளுடன் பேச்சு வார்த்தைகள் நடாத்துவதால் எவ்வித நன்மையுங் கிட்டாதென்பது தெளிவாகிக் கொண்டது. லீ-சங்-ஜென் என்பவரின் நியாயமான கோரிக்கைகளுக்குக் கொம்யூனிஸ்டுகள் இணங்காதபடியால் அவர்கள் சீனம் முழுவதையும் தங்கள் ஆதிக்கத்திற் கொண்டு வருவதையே விரும்பி நிற்கின்றனர் என்பது வெளிப்படை.

### அரிய சந்தர்ப்பம்

சியாங்கை ஷேக் திடகாத்திரமாக நின்று தமது படைகளைத் திரட்டிக் கொம்யூனிஸ்டுகளின் தாக்குதல்களை எதிர்ப்பாராகில் நிலைமை எதிர்பார்த்த அளவுக்குச் சீர்குலைய மாட்டாது. இத் தளபதி சிலமாதங்களுக்கு முன்னர் தமது பொறுப்பினின்றும் விலகியபோது நம்பிக்கையான சில தலைவர்களிடமே தென் பகுதியின் நிர்வாகப் பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டன.

இத் தலைவர்கள் தங்கள் பொறுப்பையுணர்ந்து நடந்துகொள்ளுவார்களாயின் சீனத்தின் தலைவிதியானது ஒரு வேளை மாறிவிடவுங் கூடும். தேசியத் தலைவர்களிடம் காணப்படும் குறைபாடுகள், கொம்யூனிஸ்டுகளையும் பீடித்துவிடுமாயின் சீனத்தைக் காப்பாற்றுவதற்குச் சியாங்கை ஷேக் அவர்களுக்கு மற்றுமோர் சந்தர்ப்பம் கிடைத்துவிடுமென எதிர்பார்க்கலாம்.

(தொடர்ச்சி 6-ம் பக்கம் பார்க்க)

# சும்மா இருக்கின்றனர்

## 54,000 பேருக்கு வேலையில்லை

**இலங்கையில் எஸ்.எஸ்.ஸி.** பரீட்சையிலே தேறிய 54,000 மாணவ மாணவிகள் எவ்விதமான தொழிலுமின்றிச் சும்மா இருந்து காலங்கழிக்கின்றனர். இந்த இரகசியத்தைக் கல்வி மந்திரி நுகவெல அவர்கள் பத்துகமஎன்ற பகுதியிற் பேசும்போது வெளிப்படுத்தியிருக்கின்றார்.

இவர்களில் 35,000 பேர் பெண்பிள்ளைகள், 19,000பேர் ஆண்கள். இவர்கள் அனைவரும் கைத்தொழிற்றுறைகளிற் பயிற்சிபெற்றுப் பயன்பெறுவதற்காகப் பல்வேறு கைத்தொழிற் பள்ளிக்கூடங்கள் விரைவிலே திறந்துவைக்கப்படுமெனக் கல்வி மந்திரி கூறினார். இது அநேகருக்கு ஆறுதலையூட்டுமென்பதற்கு ஆட்சேபமில்லை! வர்த்தகம் கைத்தொழில்போன்ற துறைகளிற் பிள்ளைகள் பயிற்சிபெற்றால், எதிர்காலத்தில் அவர்கள் அத்துறைகளில ஏதாவது உத்தியோகம் பெறுவது சாத்தியமாகுமென மந்திரி கூறினார்.

உடுகமப் பிரதிநிதி ஸ்ரீ டி. எஸ். குணசேகரா அவர்களும் இக்கூட்டத்திற் பேசினார். பள்ளிக்கூடக் கட்டடங்களின் இருமருங்கிலும் விருந்தைகள் அமைப்பதன்மூலம், அரசாங்கம் அதிக தொகையான பணத்தை விரயஞ் செய்கின்றதென அவர் தமது பேச்சிற் குறிப்பிட்டிருந்தார்.

# இலங்கையின் தொடர்பு

## மந்திரிமார் உற்சாகம்

6-5-49

**லண்டனில் நடைபெற்ற** சாம்ராச்சியப் பிரதமர்கள் மகாநாடு முடிவடைந்து விட்டது. ஆகவே, அயர்லாந்திலுள்ள டப்ளின் நகரத்தையும் தரிசித்துக்கொண்டு இலங்கைப் பிரதமர் சேனநாயகா புதன்கிழமை மாலை கொழும்பு வந்து சேர்ந்தார்.

அவரை வரவேற்பதற்கு அவர்தம் பத்தினியார் ஏற்கனவே குடையுங் கையுமாக இரத்மலானை விமான நிலையத்திற் காட்சியளித்தார். பின்னர் ஒன்றன் பின்னொன்றாக ஏனைய மந்திரிமாரும் காரில் வந்து குதித்தனர். பிரதமரை முன்சென்று வரவேற்ற மந்திரி பண்டாரநாயகா ஐரோப்பிய உடையில் வெகு உற்சாகமாகக் காணப்பட்டார்.

### வாலிப முறுக்கு

மந்திரி சிற்றம்பலம் பாக்கு வெற்றிலை போட்டுக்கொண்டு அசல் யாழ்ப்பாணத் தமிழரைப் போல வேட்டி சால்வையுடன் விளங்கினார். மந்திரிகளும் வெளிநாட்டுப் பிரதிநிதிகளும் சேர்ந்துகொண்டனர்.

எத்தனையோ ஆயிரம் மைல் தூரத்தை வாயுவேகத்திலே தாண்டிவந்த ஸ்ரீ சேனநாயகா, வாலிப முறுக்குடன் உஷாராகவே காணப்பட்டார். அவரும் அவருடைய மனைவியாரும் விமான நிலயத்தை விட்டுப் புறப்படும்போது இருவரும் வெகு ஒய்யாரமாக நடந்துசென்றனர்.

### விரும்பினாற் பிரியலாம்

புதன்கிழமை இரவு பிரதமர் தமது 'டெம்பில் ட்றீஸ்' என்ற இல்லத்திற் பத்திரிகைக் காரருக்குப் பேட்டியளித்தார். சாம்ராச்சியத்தினின்றும் பிரிந்து செல்வதற்கு இலங்கை விரும்பினால், அது அவ்வாறு செய்வதற்கு உரிமை யுண்டென்பதைச் சாம்ராச்சிய மகாநாட்டின் போது தாம் மீண்டும் தெரிவித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார். இலங்கையின் சாம்ராச்சியத் தொடர்பைப்பற்றிப் புதிய வியாக்கியானம் எதுவும் வேண்டியதில்லை. ஏனெனின் இது பற்றி இலங்கையின் புதிய அரசியலமைப்புத் திட்டத்திலே யாவும் கூறப்பட்டுள்ளன என்பதையும் பிரதமர் கூறியுள்ளார்.

இந்தியா சுதந்திரக் குடியரசு பெற்ற நாடாகச் சாம்ராச்சியத்திற் சேர்ந்துகொண்டபோதிலும் அது இலங்கையின் உறவைப்பாதிக்கமாட்டாதெனவும் ஸ்ரீ சேனநாயகா தெரிவித்தார். இலங்கை இராணுவப் படையைச் சீரமைப்பதற்கு அனுபவம் வாய்ந்த ஒரு பிரித்தானிய இராணுவ அதிகாரி இலங்கை வந்தடைவார் என்ற விஷயத்தையும் அவர் வெளியாக்கினார்.

### இந்த உறவு

லண்டனைவிட்டு இலங்கைக்குத் திரும்பும் பிரதமர் சேனநாயகாவைத் திருச்சியிற் கண்டு பேசுவதற்காகச்சென்ற சேர் அ. மகாதேவா (இந்தியாவிலுள்ள பிரதம இலங்கைப் பிரதிநிதி) வழியிற் சென்னையிலும் தங்கினார் என அறிகின்றேன். அங்கு பத்திரிகை நிருபர் ஒருவருடன் பேசுகையில் ஹற்றனில் இலங்கை—இந்தியர்கள் செய்த முடிவு விவேகமற்றதெனக் குறிப்பிட்டிருக்கின்றார். இம்முடிவு இலங்கையர், இந்தியர்களின் நலன்களுக்கு விரோதமானதெனச் சேர் மகாதேவா கருதுகின்றார். இப்பெரியார் இந்தியாவில் இருக்கும் காலத்திற் பிரதமர் சேனநாயகா சொல்லுவதையெல்லாம் கேட்டு நடக்காமல்இருநாடுகளின் உறவைப் பலப்படுத்துவதற்கான பணிகளில் ஈடுபட வேண்டுமென்பதே பலரது ஆசையுமாக இருக்கின்றது.

# கொழும்பு-நிருபர் கடிதம்-



### உங்களுக்குத் தெரியுமா?

ஸ்ரீ கிருபளானி சமீபத்திற் கொழும்பிலே நின்றபோது இங்குள்ள கிறிஸ்தவாலிபர் சங்கத்திலும் சொற்பொழிவாற்றினார். இதைப் பற்றிச் சென்ற வாரம் எழுதியிருந்தேன். பிரதிநிதிகள் சபை முதல்வரும், மந்திரியுமான பண்டாரநாயகா அவர்களே இக் கூட்டத்துக்குத் தலைமை வகித்து அதை நடாத்த வேண்டுமென ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. ஆனால் யூ. என். பி. கட்சியினர் இதை விரும்பவில்லை. இந்நிலையில் ஸ்ரீ செல்வநாயகம் (காங்கேசன் துறைப் பிரதிநிதி) தலைமை வகித்தாற் பெரிய சிக்கல்கள் எழக்கூடுமெனப் பயந்த அரசாங்கக் கட்சியினர் மந்திரி பொன்னம்பலம் அவர்களைக் கூட்டத்துக்குத் தலைமை வகிக்கும்படி செய்தனர். அவர்கள் விரும்பியவாறே அவரும் நடந்து கொண்டார் அத்துடன் அவரும் தமது தலைமைப் பேருரையில் அதிகமாக ஒன்றும் பேசவேயில்லை. இப்படி எத்தனையோ விதமான விஷயங்கள் இரைமறைவில்நடைபெற்றுவருகின்றன.

### இலங்கை இணைப்பு

சென்றவாரம் ஈழகேசரியில் 'டொக்டர் பட்டாபி பேட்டி' என்ற விஷயமாக இலங்கையன் எழுதிய கட்டுரையை இங்கு பலரும் பாராட்டுகின்றனர். டொக்டர் அவர்களின் அபிப்பிராயம் ஒருபுறமிருக்க இங்குள்ள சில தினசரிப் பத்திரிகைகளின் போக்கைப்பற்றி ஒளிப்பு மறைவு இன்றி எழுதிய வாசகத்தை அப் பத்திரிகைக்காரர்களும் உவந்தேற்கின்றனர்.

நிற்க, இலங்கை இந்தியாவுடன் இன்னும் 5 வருடகாலத்துக்குள் இணைந்து கொள்ளும் என்றே விஷயமறிந்த வட்டாரங்களில் உள்ளவர்கள் பேசுகின்றனர். அரசியல் உலகில் மாற்றங்கள் ஏற்படுமெனவும், அப்போது, பிரிட்டனுக்குப்பின்னால்இன்று ஒட்டித்திரியும் இலங்கையானது தாமாகவேஇந்தியாவுடனிணைந்துவாழவிரும்புமெனவும்அறியக்கிடக்கின்றது. ஸ்ரீ கிருபளானி அவர்களும் இது சம்பந்தமாக ஏதோ பேசியுள்ளார்என அறிகின்றேன். எல்லாம் நன்மைக்குத்தான்!

# றெபேட் ஹான்சன்

## யாழ்ப்பாணம் விஜயம்

அமெரிக்க - ஆசிய கலாசார உறவுச் சங்கமொன்றின் தலைமைக் காரியாலயத்தின் செயலாளர் ஒருவர் இப்போது இருவருடகாலமாகக் கொழும்பில் இருந்துவருகிறார். இவர் அமெரிக்காவைச் சேர்ந்தவர். இவருடைய பெயர் றெபேட் ஹான்சன் என்பது. சென்ற வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ளார்.

ஆத்மீகத் துறையில் ஆர்வமிக்க இவ்வாலிபன் இந்து மதக் கோட்பாடுகளின் இரகசியங்களையும், வழிபாட்டுமுறைகளையும் பயபக்தியுடன் அறிந்துவருகின்றார். கீழைத்தேசக் கலைப் பண்புகளும் நடனங்களும் இவருக்குப் பெரிதும் பிடித்திருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன ............ர்

## வதந்தி



● கொண்டோடி ●

● ஜோர்ஜ் பேணுட் ஷோவை உங்கள் எல்லோர்க்கும் தெரியுமாம்.

¤ இவருக்கு ஜவஹர்லால் நேரு மாம்பழங்கள் கொடுத்தாராம்.

¤ ஷோ தாடி மீசையை ஒதுக்கினுராம்.

¤ மாம்பழங்களைத்தின்ருராம்.

¤ இந்திய மாம்பழங்களை முதன்முறையாக அன்றே ஷோ சாப்பிட்டாராம்.

¤ மாம்பழம் நல்லதோ கூடாதோ என்று கூட ஒன்றும் சொல்லவில்லையாம்.

¤ திவ்யமான பொருளை ருசி பார்த்ததால் அசந்துபோயிருக்கலாமாம்.

● ஆனுல் இலங்கை அரசினர் அசந்துபோகவில்லையாம்.

¤ கொழும்புத் தபாற்கந்தோரில் பெரிய விநோதமொன்று நடைபெறப்போகிறதாம்.

¤ இதைப் பார்ப்பதற்குச் செலவு 5 சதந்தானும்.

¤ ஒரு பெட்டிக்குள் 5 சதத்தை முதலில் போடவேண்டுமாம்.

¤ பிறகு ஒரு கைபிடியை இழுக்கவேண்டுமாம்.

¤ 5 சத முத்திரை ஒன்று வந்து விழுமாம்.

● ராஜாஜியின் சொற்களும் அவர் வாயினின்றும் முத்துப்போல் விழுமாம்.

¤ திலகர் விதைததவித்துபாரதியாகத் தோன்றியதாம்.

¤ காந்தி தூவின விதை நாமக்கல் கவிஞராக முளைத்ததாம்.

¤ கவிஞர் ராமலிங்கத்தின் பாடல்கள் அமரகவி பாரதியின் பாடல்களைப் பார்க்கிலும் சில அம்சங்களிற் சிறந்தனவாம்.

¤ இதை ராஜாஜி தான் கூறினுராம.

● எனனதான் கூறினுலும் நடப்பது நடந்தேதீருமாம்.

¤ கொழுமபிலிருந்து இரத்தினபுரிக்கு ஒரு பிரத்தியேக ரயில் வண்டி ஓடியதாம்.

¤ அதிலிருந்து 7 மூட்டை மாவைக் களவாடி விட்டார்களாம்.

¤ ஒவ்வொரு மூட்டையும்150 ருத்தல் கொண்டனவாம்.

¤ சாமான் வண்டியை உடைத்துத்தான் எடுத்திருக்கிருர்களாம்.

¤ இதைக் கேள்விப்பட்ட உதவி அதிகாரி பெட்டிகளுக்குத் திறம் பூட்டுப் போடப்போகிருராம்.

● ஆசிரியர்மார்களுக்கும் நல்ல பூட்டுப் போடப்போகிருர்களாம்.

¤ ஆசிரியர்களுக்கு இரண்டொருவருடம், கைத்தொழில் கற்பிப்பதெனக் கல்விப்பகுதி தீர்மானித்திருக்கிறதாம்.

¤ ஒரு வருடம் வீட்டுப்பணியாம்.

¤ மற்ருெரு வருடம் கைத்தொழிலாம்.

¤ ஆசிரியர்களைப் பல தொழில்களிலும் ஈடுபடச் செய்வதுதான் நோக்கமாம்.

¤ தகுந்த நோக்கமென்று யாழ்ப்பாணத்து ஆசிரியரல்லாதவர்கள் நினைக்கிருர்களாம்.

● நாம் நினைத்ததையே நமது பிரதமர் இங்கிலாந்திற் சொல்லியிருக்கிருராம்.

¤ இலங்கைக்குச் சுதந்தரம் கிடைத்தது நூதனமல்லவாம்.

¤ புதிதாகவோ பழக்கமற்றதாகவோ இல்லையாம்.

¤ 3 அல்லது 4 நூற்ருண்டுகளுக்குமுன்பு இழந்த சுதந்தரத்தை இலங்கை மீண்டும் அடைந்து விட்டதாம்.

¤ இவற்றை இலங்கைப் பிரதமர் ரேடியோ மூலம் இங்கிலாந்திலிருந்து எங்களுக்குச் சொன்னுராம்.

¤ ரேடியோ அஞ்சல் இலங்கையில் தெளிவாகக் கேட்கவில்லையாம்.

¤ இரண்டுவாரமாக இங்கிலாந்தில் இருந்தபடியால் தொண்டை கட்டியிருக்குமென்று சிலர் பேசுகின்ருர்களாம்.

● யாழ்ப்பாணப் பெரிய வைத்தியசாலை டொக்டர்களும் ஏழை நோயாளிகளுடன் கடுமையாகப் பேசுகிருர்களாம்.

¤ நோயாளிகளைக் கவனமாகப் பார்ப்பதுமில்லையாம்.

¤ நோயாளிகளை அன்பாய் ஆதரிக்கவேண்டுமாம்.

¤ அவர்களுக்கென்ன, சம்பளம் கிடைக்கின்றதுதானும்.

¤ தாங்கள் நினைத்ததைச் செய்துமுடிக்கிருர்களாம்.

¤ செய்கிறதைச் செய்துமுடிக்கட்டும். மறுஉலகில் நோயாளிகளை டொக்டர்மார் சந்திப்பார்களாம்.

¤ அங்கும் கடும் வார்த்தைகளைப் பேசினுல் என்ன செய்வதென்று பாமர ஏழை நோயாளிகள் சாகாமல் இருக்கிருர்களாம்.


### பயிற்சிமூலம் பாஷைத் தேர்ச்சி

ஸ்ரீமதி இரத்தினம் செல்லையா, (M. A., M. LITT.)

பாடசாலை மாணவர்களின் உபயோகத்துக் கேற்றவிதமாக வித்தியாதரிசினி ஸ்ரீமதி இரத்தினம் செல்லையா அவர்களால் உகந்தமுறையில் எழுதப்பட்டது. சிறந்த வசனப் பகுதிகளையும், திருக்குறள், நீதிநெறிவிளக்கம், பாரதிபாடல் முதலியவற்றிலிருந்து தெரிந்தெடுக்கப்பெற்ற செய்யுள்களையும் கொண்டது.

விலை ரூ. 1-75 தபாற்செலவு வேறு

தனலக்குமி புத்தகசாலை: சுன்னுகம்

சிறந்தபலனுக்கு

## C. C. C. புகையிலைப்பசளை

கொழும்பு கொம்மேர்ஷல் கொம்பனியார்

இரண்டு விதமான வெவ்வேறு கலவைகள் எங்களால் தயாரிக்கப்பட்டுக் கொடுக்கப்படுகின்றன. ஒன்று சப்புகிற புகையிலைக்கு வேண்டிய மாதிரியிற் பிரத்தியேகமாகக் கலவை செய்யப்படுகிறது. மற்றது சுருட்டுப் புகையிலை அல்லது குடி புகையிலைக்கு வேண்டிய மாதிரியில். இவ்விரு கலவைகளும் தோற்றத்தில் அதிக வித்தியாசமுடையவை. கமக்காரர்கள் தங்கள் தேவைக்கு எழுதும்போது தாங்கள் பசளையிடப்போகும் புகையிலை (மேலேகாட்டிய) எந்த வகையைச் சேர்ந்ததென விபரமாகக் கூறவேண்டும்

## C. C. C.

கொழும்பு கொம்மேர்ஷல் கொம்பனி

லிமிற்றெட்

[பெரிய பிரித்தானியாவில் சமுதாயமாக்கப்பட்டு, அங்கத்தவர்களின் உத்தரவாதம் மட்டுப்படுத்தப்பட்டது.]

விசேஷ ஆலோசனை இலவசமாகக் கூறப்படும். எங்கள் விசேஷ விற்பனை ஒழுங்குகளைப்பற்றிய விபரங்களுக்கு உடனே எழுதவும்.

The Colombo Commercial Company LIMITED.

INCORPORATED IN GREAT BRITAIN LIABILITY OF MEMBERS Ltd.

(364)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீர் விளையாட்டு

நீர்விளையாடலாவது யாறுகளிலே புது நீர் பெருகி வருங்காலத்தில், அந் நீரிடத்தே ஆடவரும் மகளிரும் கூடி மூழ்கி விளையாடி அவ்வின்பத்தை நுகர்வது. ஆறில்லா விடங்களிலே குளங்களில் மூழ்கி விளையாடி இன்புறுவதும் உண்டு. இவ்விளையாட்டுத் தமிழ்நாட்டிலே மிகப் பழையகாலந் தொடங்கி நிகழ்ந்து வந்ததென்பது தமிழிலுள்ள மிகப் பழைய நூலாகிய தொல்காப்பியத்தில் வரும் "யாறுங் குளனுங் காவு மாடிப் பதியிகந்து நுகர்தலு முரிய வென்ப" என்னுஞ் சூத்திரத்தானே அறியப்படுகின்றது. பெருங்காப்பிய இலக்கணங்களுள் இதுவும் ஒன்றாகக் கூறப்படுதலைப் "பெருங்காப்பியநிலை பேசுங்காலை" என்னும் தலைப்புடைய சூத்திரத்துள், 'பூம்பொழி லுகர்தல் புனல்விளை யாடல்' என்று வருதலானே அறிந்துகொள்க. இவ்விளையாட்டை நிகழ்த்துங்கால் ஆடவர் தம் தலைவியரோடன்றிக் காமக்கிழத்தியரோடும் பரத்தையரோடும் நிகழ்த்தி இன்புறுவதுமுண்டு. அதனால் தலைவியர்க்குத் தம் தலைவரோடு ஊடல் நிகழ்வதாகவும் நூல்கள் கூறும். தலைவியரோடு புனல் விளையாடி இன்புறுதல்,

"வயன்மல ராம்பற் கயிலமை நுடங்கு தழைத்
திதலை யல்குற் றுயல்வருங் கூந்தற்
குவளை யுண்க ணேஎர் மெல்லியன்
மலரார் மலிர்நிறை வந்தெனப்
புனலாடு புணர்துணை யாயின ளெமக்கே" (ஐங். எஉ)

என்று தலைவன் தோழிக்கு உரைத்தமையானே அறியப்படும்.

காமக்கிழத்தியொடு நீர்விளையாடுவது,

"கதிரிலை நெடுவேற் கடுமான் கிள்ளி
மதில்கொல் யானையிற் கதழ்வுநெறி
கலுழிறைமழி புதும்புன லாடுக [வந்த
மெம்மொடு கொண்மோவெம் தோள்
புரை புணையே" (ஐங். எஅ)

என்று காமக்கிழத்தி கூறுவதால் அறியப்படும்.

பரத்தையரொடாடுவதை,

"புலக்குவே மல்லேம்
பொய்யா துரைமோ
நலத்தகு மகளிர்க்குத்
தோட்டுணை யாகித்
தலைப்பெயற் செம்புன லாடித்
தவநனி சிவந்தன
மகிழ்நநின் கண்ணே" (ஐங். அ0)

எனத் தன்னையொழியப் புதுப் புனலாடித் தாழ்த்துவந்த தலைமகனோடு தலைமகள் புலந்து சொல்லியதனால் அறியலாம்.

யாறுகளிலே புதுநீர் வருவது கார்காலத்திலாகும். அக் காலத்திலே அவ்வாறுகளைச் சார்ந்த ஊர்களிலேயிருக்கும் மக்கள் மேற்கூறியவாறு அந் நீரிற்சென்று மூழ்கி விளையாடுவார்கள். அக்காலத்திலன்றி நீர் தெளிந்து பெருகும் இளவேனிற்காலத்தும் சென்று மூழ்கி விளையாடுவதும் உண்டு. பரிபாடல் என்னும் கடைச் சங்கநூலில், வையை யாற்றிற் சென்று மக்கள் மூழ்கி விளையாடுவதைக் குறிதுக் கூறும் பாடல்களும் உள. அவற்றுள் கக-ஆம் பாடலிலே புதுநீர் வரும் கார்காலத்திலே மூழ்கி விளையாடலைப்பற்றி சுக-ஆம் அடிவரையும், அதன்மேல் இளவேனிற்காலத்து மூழ்கி விளையாடலைப்பற்றி எஉ-ஆம் அடிவரையும், முன்பனிக்காலத்து மார்கழித் திருவாதிரை நாளின்கண் ஆடும் அம்பா ஆடலெனப்படும் தைந்நீராடலைப்பற்றி அவ்வடியின்மேலும் கூறப்படுகின்றன. தாயோடு கூடி ஆடலின் அம்பா ஆடல் எனப்பட்டது. அம்பா—தாய் (வடமொழி). மார்கழித் திருவாதிரைநாளின் ஆடலெனக் கூறி அதனைத் தைந்நீராடல் என்றுங் கூறியது சாந்திரமான கணிதப்படியாகும். இத் தைந்நீராடலைப்பற்றித் "தையினீ ராடிய தவந்தலைப் படுவாயோ" எனக் கலி. நுசு-ஆம் செய்யுளும், "நறுவீ யைம்பால் மகளிராடுந் — தைஇத்தண்கயம்" என ஐங்குறுநூற்று அசு-ம் செய்யுளும் கூறுகின்றன. நிற்க,

மேற்காட்டிய பரிபாடல் என்னும் நூலில் வரும் செய்யுள்களிலே நீராடச் செல்வோர் ஊர்திகளிற் செல்லுமியல்பும், அவர்கள் நீரின்கண் மூழ்கி விளையாடுங்கால் நீரணி யணிந்து விளையாடுமாறும், கையாலும் நீரெக்கும் கருவிகளாலும் ஒருவர்மேலொருவர் எக்கி விளையாடுமாறும், நீரை எக்கி விளையாடுதலின்கண் வரும் வென்றி தோல்விகளும், நீராடுங்கால் மெய்யிற் பூசியாடும் வாசனைத் திரவியங்களும், நீராடியபின் கரையேறி அணிகளை யணியுமாறும், பின் தலைவர் தம் தலைவியரோடாயினும் காமக்கிழத்தியரோடாயினும் பரத்தையரோடாயினும் ஊடியும் கூடியும் இன்புறுமாறும் கூறப்படுமியல்பு மிகச் சுவை தருவதாகும். அப்பாடல்களுள், க0-ம் பாடலிலே நீராடச்செல்வோர்செல்லும் ஊர்திகளாகக் கூறப்படுவன குதிரையும், களிறும், பிடியும், எருது பூட்டிய பண்டியும், ஆய்மாச் சகடமும், சிவிகையும், கோவேறு கழுதையும் முதலாயின. அவற்றை,

மகாவித்துவான்
... சி. கணேசையர் ...

"புகவரும் பொங்குளைப்
புள்ளியன் மாவும்
மிகவரினு மீதினிய
வேழப் பிணவு
மகவரும் பாண்டியு
மத்திரியு மாய்மாச்
சகடமுந் தண்டார்ச்
சிவிகையும் பண்ணி"

[மா - குதிரை. வேழப்பிணை - பெண்யானை. அகவரும் பாண்டி - பெயர் சொல்லி யழைக்கப்படும் எருதுபூண்ட பண்டி. அத்திரி - கோவேறு கழுதை. ஆய்மாய்ச்சகடம் - அழகிய குதிரைபூண்ட பண்டி.]

என்னும் அடிகளானும்,

"........*மடமா பிசையோர்
பிடிமே லன்னப் பெரும்பெடை
யனையோர்
†கடுமா கடவுவோரும் களிறுமேல்
கொள்ளுவோரும்
வடிமணி நெடுந்தேர் மாமுள்
பாய்க்குநரும்"
(கஉ-ம் பரிபாடல்)

என்னும் அடிகளானும் அறிக.

* மடமா = நடைமெல்லியகுதிரை.
† கடுமா = விரையுந் தன்மையுடைய குதிரை

இனி விளையாடச் செல்வோர் இவரென்பதை,

"முதிய ரிளையர் முகைப்பரு வத்தர்
வதிமண வம்பலர் வாயவிழ் தன்னர்
இருதிற மாந்தரு மின்னினி யோரும்
விரவுநரையோரும் வெறுநரையோரும்
பதிவத மாதர் பரத்தையர் பாங்கர்"
(பரி-க0-ஆம் பாடல்)

என்னும் அடிகளாலுணர்க.

[இவ்வடிகளின் பொருள், 'முகைபோலும் பருவத்தாரும் தங்கிய மணத்தையுடைய புதுமலர் வாயவிழ்ந்தன்ன பருவத்தாருமாகிய இளையவரும், விரவு நரையோரும் வெறுநரையோருமாகிய முதியவரும் என்ற இவ் விருதிறமாந்தரும், கற்புடை மகளிர் பரத்தைய ரெனப்பட்ட இப்பருவங்களின் மகளிரும் இம் மகளிர்க்கும் மாந்தர்க்கும் பாங்காயினரும்' என்பது.]

இவர்கள் நீரெக்கிவிளையாடற்குக் கொண்டுசெல்லும் கருவிகளாவன: நெடுந்துருத்தியும் வட்டத்துருத்தியும் கொம்பும் பிறவுமாம். மூங்கிற் கழியாலும் கையாலும் எக்குதலுமுண்டு.

கருவிகள் இவை என்பதை,

"நெய்ம்மாண் சிவிறியர் (துருத்தியர்)
நீர்மணக் கோட்டினர்"

என்னும் கூ-ஆம் பரிபாடலடியானும்,

'கண்ணாருஞ் சாயற் *கழித்துரப்
போலை
வண்ணநீர் கரந்த வட்டுவிட் டெறி
வோரும்
மணம்வரு மாலையின்வட்டிப்போரைத்
துணிபிணர்மருப்பினீரெக்குவோரும்"

என்னும் கக-ஆம் பரிபாடலடிகளானும் அறிக.

இனி அவர் ஆடுங்கால் நீர்க்கு ஆராதனை செய்தும், நீரின்கண் பொன் முதலியவற்றாற் செய்த மீன்முதலியவற்றை விடுத்து வாழ்த்தியும் நீராடும் முறையை,

"அவியா ராதனை அழல்பல வேந்தி"
(பரிபாடல், சு) என்றும்,

"நத்தொடு நள்ளி நடையிறவு
வயவாளை
வித்தி யலையில் விளைகபொலிகென்பார்"
(பரிபாடல் உ0) என்றும் கூறுவர்.

இனி நீராடி விளையாடுவோர் நீராடற்கேற்ற அணிகளை யணிந்து சேறல்,

'ஏரணி யணியி னிளையரு மினியரும்
†ஈரணி யணியி னிகன்மிக நவின்று"

என்னும் கூ-ம் பரிபாடலடிகளால் உணரத்தக்கது.

இனி, கிடையாற்செய்த திமில் தேர் முதலியவற்றை யூர்ந்தும் நீராடுவார் என்பது "வெண்கிடை மிதவையர் நன்கிடைத் தேரினர்" என்னும் கூ-ஆம் பரிபாடலால் உணரப்படும்.

இனி, வையையின் நீர்ப்பெருக்கை மதிலின் சுருங்கை வழியால் நீரோடும் ஒலியாலறிந்தார் தாந்தாம் முந்திச் செல்லவேண்டு மென்னும்

*கழி — மூங்கிற்கழி.
†ஈரணி—புனலாடற்கு அணிந்த அணி.

(தொடர்ச்சி 10-ம் பக்கம் பார்க்க)

கம்பரும் வான்மீகியும்

# அனுமன் இராமனை வினவுதல்

— கே. எஸ். கே. —

அடிப்படையான சில அமிசங்களில் அனும—இராம சம்பாஷணையில் கம்பருக்கும் வான்மீகிக்கும் வேற்றுமையிருக்கின்றது. முதனூலில் அனுமன் இராமனுக்கு நேர்முகமாக வந்து, அவனது குணங்களைப் புகழுமுகத்தால் அவனது வரலாற்றை வினவுகிறான். கம்பரில் அனுமன், இராம லக்ஷ்மணரை யணுகி, மறைவாக நின்றுகொண்டு, அவரது குணத்தையும் தோற்றத்தையும் தனக்குள் வியந்து கொள்ளுகிறான். இது ஒரு முக்கிய வேற்றுமை.

மற்றுமோர் வேற்றுமையுண்டு. அனுமனது வினவிற்கு இராம லக்ஷ்மணர் ஒரு மறுமொழியும் கூறாதிருந்த பொழுது, அவர்களிடம் சுக்கிரீவனைப்பற்றியும், தான் மாறுவேடம் பூண்டு அங்கு வந்ததைப்பற்றியும் கூறுகிறான். கம்பரிலோவெனில், அனுமன் இராமனைப்பற்றிப் பலவாறு சிந்தித்து அவனது முன்னிலையில் வந்து தோன்றியபொழுது, இராமன் அனுமனைப் பற்றிவினவுகிறான். அப்போது அனுமன் சுக்கிரீவனைப்பற்றியும் தன்னைப்பற்றியும் சுருக்கமாகவும் விளக்கமாகவும் சொல்லுகிறான்.

கதைப்போக்கில் இவ்வாறு இரு புலவர்களுக்கும் வேறுபாடு இருப்பினும், பொருளை நோக்கும்போது வேற்றுமை இல்லை. வான்மீகி 15 சுலோகங்களால் இராமனை அனுமனது வாயால் புகழுகிறார். அச் சுலோகங்களின் ஸாரத்தைக் கம்பர் 5 செய்யுட்களால் எடுத்தாளுகிறார்.

இதுதான் இராம இலக்குமணரிடம் அனுமன் கூறிய முதல் வார்த்தை:-

ராஜர்ஷி தேவப்ரதிமௌ
தாபஸௌ ஸம்சிதவ்ரதௌ
தேசம் கதமிமம் ப்ராப்தௌ
பவந்தௌ வரவர்ணினௌ

'அரசரைப்போலவும், இருடிகளைப்போலவும், தேவர்களைப் போலவும் இருக்கின்றீர். தவத்தையும் நியமத்தையும் மேற்கொண்டுள்ளீர். மிகவும் அழகுள்ளவராயிருக்கின்றீர். எவ்வாறு இவ்விடத்திற்கு வந்தீர்?' என்று வினவுகிறான்.

இங்கு அனுமன் அவர்களுடைய இராச லக்ஷணங்களிலும், இருடிகள்போன்ற தூய்மையிலும், தேவர்போன்ற காந்தியிலும், அவருடைய ஒப்பனையழகிலும் ஈடுபடுகிறான். ஏனெனில், இராமன், பார்த்தோரின் கண்ணையும், மனத்தையும் கவரும் கட்டழகனாதலால், அனுமனது அன்பையும் அவன் கவர்ந்து கொள்ளுகிறான்.

இவ்வாறு இராமனது வடிவழகிலே மயங்கின அனுமன் பிறகு தெளிந்து மீண்டும் வினவுகிறான்:-

த்ராஸயந்தௌ ம்ருககணான்
அந்யாம்ஸ்ச வநசாரிண:

'மிருகக் கூட்டங்களையும் காட்டிலே திரியும் வேறு பிராணிகளையும் பயப்படுத்திக்கொண்டு யாது காரணமாய் இங்கு வந்தீர்கள்?' என்றுகேட்கிறான்.

இக்கருத்துக்களை மனதிற் றேர்ந்த கம்பர்,

'வெஞ்சினத் தொழிலர், தவ
மெய்யர், கைச் சிலையர் என
நெஞ்சயிர்த்து, அயன்மறைய
நின்று, கற் பினில் நினையும்'

என வருணிக்கிறார்.

'தாபஸௌ, ஸம்சிதவ்ரதௌ' என்று வான்மீகி கூறியதை, தவ மெய்யர் என்கிறார் கம்பர். தவமெய்யர் என்ற சொல்லுக்கு முன்னும் பின்னும் வெஞ்சினத் தொழிலர், கைச்சிலையர் என அமைத்தார். இவரது வெஞ்சினத் தொழிலும், கையிலே வில்லும், இவரது தவக்கோலத்திற்கு [illegible] சிறந்த நண்பனும், அவனது நன்மையையே விரும்பும் மந்திரியுமான அனுமன் அவர்களுடைய வேடத்திலும், வெஞ்சினத்திலும், வில்லிலும் கண்ணைச் செலுத்துகிறான்.

வான்மீகியும் அனுமன் வாயிலாக இராம லக்ஷ்மணருடைய வில்லின் பெருமையைப் புகழுகிறார்.

சக்ரசாப நிபேசாபே
க்ருஹீத்வா சத்ருஸூதநௌ!

'வான வில்போன்ற விற்களையேந்திச் சத்துருக்களை நாசம் செய்ய வந்துள்ளீர்.'

இங்கு ஒன்று கவனிக்கத்தக்கது. இராம இலக்குமணரது வில்லை வான்மீகி வான வில்லுக்கு உவமித்ததால், சாதாரண காலங்களில் அவை அவர்களுக்கு ஆபரணங்களாகவும், யுத்த காலத்தில் பகைவரை யழிக்க வல்ல படைக்கலமாகவும் இருக்கின்றனவென்பது உட்பொருள். வீரருக்கணிகலம் ஆயுதமல்லவா?

இராம இலக்குமணரது செயலையும் ஒருவரை யொருவர் நிகர்க்குந் தன்மையையும உற்றுநோக்கிய அனுமன் மீண்டும் அவர்களை வினவுகிறான்.

பம்பாதீரருஹாந்
வ்ருக்ஷான் வீக்ஷமாணௌ
ஸமந்தத:
நிச்வஸந்தௌ வாபுஜௌ
பீடயந்தௌ இமா: ப்ரஜா:

பம்பைக் கரையிலுள்ள மரங்களை நன்றாக நாலாபக்கத்திலும் பார்த்தவண்ணம் இருக்கின்றீர். பெருமூச்செறிகின்றீர். சிறந்த புஜபலமுள்ள நீவிர் இங்குள்ள பிராணிகளைத் துன்புறுத்துகின்றீர்!

ராஜ்யார்ஹௌ அமரப்க்யௌ
[illegible]தசமிஹாகதௌ,
[illegible]யோக்ய ஸத்ருசௌவீரௌ
தேவலோகாதிஹாகதௌ!

'அரசிற்குரியராகத் தோன்றுகின்றீர். அமரர்போலப் பெருமையுடையீர். இங்கு எவ்விதம் வந்தீர். ஒருவரையொருவர் நிகர்க்கும் நீங்கள் தேவருலகத்திலிருந்து வந்தீர்போலும்' என வினவுகிறான்.

இச் சுலோகங்களின் கருத்தைக் கம்பர் பின்வரும் செய்யுட்களால் விளக்குகிறார்.

சிந்தையிற் சிறிதுதுயர்
சேர்வுறத் தெருமரலின்
நொந்தயர்த் தவரனையர்
நோவுறச் சிறியரலர்,
அந்தரத் தமரர்அலர்
மானிடப் படிவர்,மயர்
சிந்தனைக் குரியபொருள்
தேடுதற் கொருதினையர்.

'இவர்கள் துன்பமேலீட்டினால் நொந்தவர்களாகத் தோன்றுகின்றனர். ஆனால் இவ்வாறு துன்புறுதற்கு உரியரும் அல்லர். தேவருலகத்தில் இருந்து வந்த அமரரோவெனில், இவர்கள் மானிட வடிவங்கொண்டவர்கள். சிந்தனைக்குகந்த ஒரு அரிய பொருளைத் தேடுதலிலேயே கருத்துடையராக இருக்கின்றார்' என்று அனுமன் தனக்குள் எண்ணுகிறான். மேலும் அனுமன் எண்ணுகிறான்

'தருமமும் தகவுமிவர்
தனமெனுந் தகையர்இவர்
கருமமும் பிறிதொர்பொருள்
கருதியன்று, அதுகருதின்
அருமருந் தனையதிடை
யழிவுவந் துளததனை
இருமருங் கினும்நெடிது
துருவுகின் றனர்,இவர்கள்'

முகத் தோற்றத்தினால் அகத்தின் அழகை அறியும் ஆற்றல் பெற்ற அனுமன் அவர்களது உயரிய குணங்களைத் தன்னுள்ளே புகழுகிறான். இவர் அறமும் ஆசாரமும் உடையவர் என்றும், அமிழ்தம் போன்றஒருபொருளைவழியில் இழக்கநேரிட, அதனை இருமருங்கிலும் தேடியவண்ணம் வருகிறார்கள் என்னும் நினைக்கிறான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழக்குத் தபால் — நமது நிருபர்

# கூட்டுறவுக்குப் பாராட்டு

சமீபத்தில் இங்கு நடைபெற்ற ஐக்கிய மகாநாட்டின் வெற்றிக்கும், இங்கு ஒழுங்காக நடைபெற்றுவரும் ஐக்கிய இயக்க வேலைகளுக்கும் முக்கிய காரணம் இப் பதிவுகாரர் திரு ஆர். இராசரத்தினம் அவர்களின் திறமையான நிர்வாகமேயென எழுதினேன். இத் திறமையை அரசாங்கமும் உணர்ந்திருக்க வேண்டும் அதனாலேதான் ஐக்கிய இயக்கத்தைப்பற்றி மேலும் பயிற்சிபெறுதற்காக அவரை ஐரோப்பாவுக்கு அனுப்புகிறது. இம்மாதம் 4ந் திகதி திரு. இராசரத்தினம் கப்பல் மூலம் இங்கிலாந்துக்குப் பிரயாணமானார். இவ்வுத்தியோகஸ்தரின் சேவையைக் கௌரவிக்கும் நோக்கமாக அவருக்கு மட்டக்களப்பு வாடிவீட்டில் ஒரு விருந்தளிக்கப்பட்டது. விருந்திற் பலருங் கலந்து, அவரது சேவையைப் பாராட்டி அவரையும் வாழ்த்தினார்கள். இவ்வளவும் சேர்ந்து திரு. இராசரத்தினத்தைப் பரவசமாக்கியது. அதனால், விருந்தளித்தோருக்கு நன்றி கூறும்போது, உங்கள் உண்மை அன்பு என்னைக் கொள்ளை கொண்டுவிட்டது. நான், எனது பயிற்சி முடிந்த பின்னரும் கூட உங்கள் உண்மை ஊழியனாக இருப்பேன்'' என உணர்ச்சிததும்பப் பேசினார்.

### மீன் தட்டுப்பாடு

மீண்டும் மீனின் விலை ஏறிவிட்டது. இதனால் ஏழைமக்கள் பெரிதும் கஷ்டப்படுகிறார்கள். தென்னிலங்கையிருந்து இங்கு வந்து சேர்ந்துள்ள மீன்பிடிகாரர் தாங்கள் பிடிக்கும் மீன் அனைத்தையும் 'லொறி' மூலமும், புகைரத மூலமும் பிறவூர்களுக்கு அனுப்பிவிடுகிறார்கள். மீன்பிடிகாரரின் இலாபம் கருதி ஏற்படுத்தப்பட்டுள்ள 'மீன்பிடிச் சட்டமானது' இங்ஙனம் பனிக்கட்டியில் மீனை வைத்து அனுப்புவதற்கு அனுகூலமாயிருக்கிறது. இச் சட்டத்தால் ஸ்தலதாபனங்கள் கூட மீன் தட்டுப்பாட்டை ஒழிக்க ஒரு வழியும் செய்ய முடியாமலிருக்கிறது. இந்தியாவிலே அரசாங்கம் மீன்பிடித்தொழிலை ஊக்கப்படுத்தித் தினமும் பெருந்தொகையான மீன்களைப் பிடிப்பதற்கு முயற்சி செய்துவருகின்றது.

### தபால்—தந்தி நிர்வாகம்

கீழ்மாகாணத்தின் நிலையை நன்கறிந்த ஒருவர் இன்று தபால்-தந்தி மந்திரியாகவிருக்கிறார். இத் தமிழ் மந்திரியார் கூட இம் மாகாணத்தைத் திரும்பிப்பார்க்கவருத்தப்படுகின்றார்போலும். மட்டக்களப்புக்கும — திருகோணமலைக்குமிடையிலுள்ள பல கிராமங்கள் தந்தி அல்லது 'டெலிபோன்' வசதிகூட இல்லாது தத்தளிக்கின்றன. இதேகதியிற்தான் மட்டக்களப்பு வாவியின் மேற்குக்கரையிலுள்ள கிராமங்களும் இருக்கின்றன. இப் பகுதிகளில் நாலு கிராமத்திற்கு ஒரு சின்னஞ்சிறு தபால் நிலையம் உண்டு. கடிதங்களை மக்கள் இங்கு சென்று பெறுவார்கள். மட்டக்களப்புத் தபாற் கந்தோரின் நெருக்கடியைத் தீர்க்க இன்னுமொரு அறையைக் கட்டிக் கண்துடைப்புவேலை செய்துள்ளனர். இது தற்போதைய நெருக்கடியை ஓரளவு போக்கினாலும் இது நிரந்தர பரிகாரம் என்று சொல்லிவிட முடியாது. இத் தபாற்கந்தோரைப் புனரமைப்புச் செய்வதனால் இன்றைய டச்சுக் கட்டிடத்தை ஒழித்துத் தற்கால முறைப்படியான புதுக்கட்டிடம் அமைத்தேயாகவேண்டும். இதற்கான சகல ஏற்பாடுகளையும் கௌரவ தபால் - தந்தி மந்திரியவர்கள் அடுத்த வரவு செலவுத் திட்டத்துக்குமுன் செய்வது மிக அவசியமாகும்.

### ஒருவழிப் பிரயாணம்

மட்டக்களப்புப் பட்டணத்தின் வாகனப் போக்குவரவினால் அபாயங்கள் ஏற்படுவதைத் தடுப்பதற்காக ஒருவழி வாகனப் போக்குவரவு ஏற்பாடு செய்யப்பட்டது. இதனை நன்கு அனுசரிக்கப் பொது மக்கள் நன்கு பயிற்றப்பட்டுவிட்டதால் அதனைச் சட்டமாக்குதற்கான ஒழுங்குகள் நடைபெறுகின்றன. சட்டமாக்கப்பட்டபின் அதனை மீறுபவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படுமாம். இத்துடன் 'பஸ்' நிலையத்தையும் முனைத்தெருவிற்கு மாற்றுவதற்குப் பட்டினசபை திட்டமிடுகின்றதெனத் தெரிகின்றது.

### கண்வைத்தியர்

எதற்கும் கொடுத்து வைக்க வேண்டுமென்று சொல்வார்கள். மட்டக்களப்புக்கும் இந்தக் குறைபாடு இருக்கின்றதென்றே சொல்லவேண்டும். இல்லாது விட்டால், இவ்வூர் வைத்திய சாலைக்கு வந்த சிகிச்சை வண்டி வந்ததும் வராததுமாகத் திரும்பிப் போகுமா? அல்லது கட்டப்பட்ட வைத்திய சாலை திறபடாது கவிபாடுமா? இல்லாது போனால் வந்த கண்வைத்தியர் கண்டி, காலி, வதுளை என்று ஊரெண்ணத்தான் நேருமா? கண் வைத்தியருக்காகப் பறந்த தந்திகளும், கடிதங்களும் பயனற்றுப் போயினவாம். சுகாதார வைத்திய அதிகாரியின் பதில் தெளிவற்றதாக இருக்கிறதாம். இதனால் இவ் விஷயத்தைச் சுகாதார மந்திரியின் கவனத்துக்குக் கொண்டுவர முயற்சிகள் நடைபெறுகின்றன.

### தண்ணீர்க் கஷ்டம்

தண்ணீர் கட்டுப்படுத்தி மக்களுக்கு வழங்குப்முறை இப்போதே இங்கு ஆரம்பமாகிவிட்டது. இதனைக் கவனிக்குமிடதது ஆடி, ஆவணி மாதங்களில் நிலைமை இன்னும் சீர்கேடாய் விடும் என்றே எண்ண வேண்டியிருக்கின்றது. இந்தச் சமயத்தில் சென்ற வாரம் கூடிய பிரதிநிதிகள் சபை கல்லடிக் குடிநீர்த் திட்டத்துக்காக மூன்று இலட்சருபாய்ஒதுக்கியுள்ளது.

இத் திட்டதநுக்கென மதிப்பிடப்பட்டு ஒதுக்கப்பட்டுள்ள [illegible] [illegible] பகுதியிற் பெரும்பகுதி வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்படலாம். பட்டணம்மட்டுமல்லாது, பல கிராமங்கள் ஒழுங்கான குடிநீர்த் திட்டமில்லாது தவிக்கின்றன. இவற்றின் தொல்லையைப் போக்க ஒரு நடவடிக்கைகளும் எடுக்கப்படுவதாகத் தெரியவில்லை. கன்னங்குடா, கரையாக்கன் தீவு, துறைநிலாவணை என்பன இவற்றுட் சில.

### ஆசிரியர்களின் போக்கு

சமீபத்தில் நியாயவதி ஒருவரைச் சந்தித்தபோது அவர், "சில ஆசிரியர்கள் வரவரச் சண்டைக்காரர்களாக மாறி வருகிறார்கள்'' என்று சொன்னார். காரணம் என்ன என்று கேட்டேன்? கொஞ்சக்காலமாக ஆசிரியர்கள் நியாயவாதிகளின் உதவியை நாடி வருவதுதான் என்று கூறி மேலும் குறிப்பிடுகையில் "ஒரு ஆசிரியர் மற்றொருவரின் சின்னிவிரலை முறித்துவிட்டாராம். மற்றொரு ஆசிரியர்ஒருபெண்ணைத்தாக்கிவிட்டாராம். இன்னொரு ஆசிரியர் வேறென்னவோ செய்தாராம்'' என்று அடுக்கிக் கொண்டேபோனார். என்னமோ இவரது கூற்றில் உண்மையில்லாமலில்லை. அன்புக்கும் ஆதரவுக்கும், பொறுமைக்கும், பொறுப்புணர்ச்சிக்கும், முன்மாதிரிக்கும் இருப்பிடமாக விளங்கவேண்டிய ஆசிரியர்கள் இப்படியான வழியில் செல்வது மிகவருத்தப்படுதற்குரிய விஷயமாகும். ஆறுவது சினம் என்ற ஒளவைப் பிராட்டியாரின் அமுத மொழியைப் போதிப்பதோடல்லாது இவர்கள் அதைச் சாதனையிலும் கொண்டுவரவேண்டியதும் மிக அவசியம்'' என்பதை வருங்கால சந்ததியின் நன்மையை முன்னிட்டுக் குறிப்பிட வேண்டியிருக்கின்றது.

### முகத்துவாரப் பலியா?

இங்குள்ள முகத்துவாரத்திற் கடலாடுவோரில் வருடாவருடம் ஒன்று இரண்டு பேர் உயிரிழப்பது வழக்கமாய்விட்டது. இம்முறை கூட விடுதலையைக் கழிக்க வந்த மாணவனொருவன் அகால மரணமானான். இதைக் கவனித்த ஒருவர் எச்சரிக்கைப் பலகையொன்றை நடும்படி பட்டின சபைக்கு எழுதியுள்ளார். குறிப்பிட்ட இடம் பட்டின சபை எல்லைக்கப்பால் இருப்பது குறிப்பிடத்தக்கது. நகர மக்கள் இதனை அதிகம் உபயோகிப்பதைமுன்னிட்டு ஏதாவது செய்யலாமோவென ஷ சபை ஆலோசனைசெய்துவருவதாக அறியக்கிடக்கின்றது.

## விபுலாநந்தர் முத்தமிழ் மகாநாடு

**ஆவணித் திங்களில் நடைபெறும்.**

முன்பு குறிப்பிட்டபடி எதிர் வரும் சனி, ஞாயிறு வாரங்களில் (14, 15 – 5 – 1949) ஷ மகாநாடு நடைபெருது.

மா. பீதாம்பரன்




## தொல்காப்பியம் — பொருளதிகாரம்

### (முன் ஐந்தியல்கள்)

### 'செந்தமிழ்'ப் பத்திரிகையின் மதிப்புரை

[தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் முன் ஐந்தியல்களும் நச்சினார்க்கினியருரையும் (புதிய விளக்கக்குறிப்புக்களுடன்):— விளக்கவுரையாசிரியர்: செம்புலச்செல்வரான உயர்திரு. சி. கணேசையரவர்கள். பதிப்பிட்டோர்: யாழ்ப்பாணத்து ஈழகேசரிப் பத்திராதிபர் உயர்திரு. நா. பொன்னையா அவர்கள். விலை: ரூபா பத்து. கிடைக்குமிடம்: தனலக்குமி புத்தகசாலை, சுன்னாகம், யாழ்ப்பாணம்.]

தமிழிலக்கணங்களுக்குள் பழமை வாய்ந்தது தொல்காப்பியம். அதன் ஒவ்வோரதிகாரத்துக்கும் பண்டைத் தண்டமிழ்ச் சான்றோர் பலர் உரைகண்டுள்ளனர். அவ்வுரைகளுட் பல, அறிஞர் பலரால் பல முறை ஆய்ந்து அச்சிடப்பட்டுள்ளன. ஒரு சில அச்சில் வாராதனவும் உள. அவற்றுள், ஒன்றோடொன்று மாறுபடுவனவும் உரையாசிரியர் கருத்து விளங்காத பகுதிகளும் உள. ஆதலால் கற்போர் இடையிடையே நூலாசிரியர் கருத்தும் உரையாசிரியர் கருத்தும் விளங்காமல் இடர்ப்படுகின்றனர். இவ்விடர்ப்பாடு ஏனையதிகாரங்களினும் பொருளதிகாரத்துப் பல்கியதெனின் அது மிகையாகாது.

இதனையறிந்து, வடமொழி தென்மொழிகளிற் புலமை மிக்கவரும் நம் செந்தமிழ் தோன்றிய கால் முதல் தம் சீரிய கட்டுரைகளால் அதனை அலங்கரித்து வருபவருமான யாழ்ப்பாணத்து உயர்திரு. சி. கணேசையரவர்கள், தாம் நல்லாசிரியர்பாற் கேட்டடறிந்தவற்றையும் தம் நுண்மதியால் ஆராய்ந்தவற்றையும் கொண்டு அவ்விடர்ப்பாடுகள் நீங்க எழுதிய, புதிய விளக்கக் குறிப்புடன் தொல்காப்பிய எழுத்ததிகாரத்துக்கு நச்சினார்க்கினியருரையையும், சொல்லதிகாரத்துக்குச் சேனாவரையருரையையும், பொருளதிகாரத்தின் பிற்பகுதிக்கு (மெய்ப்பாட்டியல், உவமவியல், செய்யுளியல், மரபியல்களுக்கு)ப் பேராசிரியருரையையும் முன்னமே வெளியிட்டதேயதுபோல, இதுபொழுது பொருளதிகாரத்தின் முற்பகுதிக்கு (அகத்திணையியல், புறத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல்களுக்கு) நச்சினார்க்கினியருரையையும் தாம் எழுதிய விளக்கக் குறிப்புக்களுடன் வெளியிட்டுள்ளார்கள். அவர்கள் முயற்சியும் நோக்கமும் பெரிதும் போற்றத்தக்கன.

தொல்காப்பியப் பொருளினை ஆராய்ந்து காண்டல் எளிய செயலன்று; எனினும் ஐயரவர்கள் தாம் மேற்கொண்ட முயற்சியை நன்கு முற்றுவித்துள்ளார்கள். ஆங்காங்குத் தாம் நுண்ணிதின் ஆராய்ந்து கண்ட திருத்தங்களோடு பழைய ஏட்டுச்சுவடிகளிற் கண்ட திருத்தங்களையும் இப் பதிப்பிற் சேர்த்துள்ளார்கள். அன்றியும், நச்சினார்க்கினியருரைக்கு விளக்கக் குறிப்புக்கள் எழுதியதோடு அவர் எடுத்தாண்ட மேற்கோட்பாடல்கள் இன்னின்ன நூல்களிலுள்ளவையென்று காட்டி அவற்றுக்குக் குறிப்புரையும் எழுதிச் சேர்த்திருக்கிறார்கள். இவை கற்பார்க்குப் பெரிதும் பயன்படும்.

முறையே கற்பாரும் கற்பிப்பாரும் அரியராகிய இக்காலத்து இப்பெருநூலினுள் விளங்காத பகுதிகளெல்லாம ஒருவரால் ஒரே முறையில் விளக்கல் இயலாததாயினும், ஐயரவர்கள் பலபல அரிய விளக்கக் குறிப்புக்களையுதவியிருக்கிறார்கள். அவையெல்லாம் இங்கு விரிப்பிற் பெருகும்.

இத்துறையில் மேலும் முயன்று விளக்கம் நல்குமாறு ஐயரவர்களுக்கும், தமக்குவரும் ஊதியங்கருதாது தமிழ் பயில்வார்க்குதவும் உயர்ந்த குறிக்கோளுடன் பெரும்பொருள் செலவிட்டு இப் பதிப்பினைத் திருந்தின முறையில் அழகுற அச்சிட்டுதவியவரும் யாழ்ப்பாணத்து ஈழகேசரிப் பத்திராதிபருமான உயர்திரு. நா. பொன்னையா அவர்களுக்கும் தக்க ஆதரவளித்தல் தமிழ்மக்கள் கடனாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீயத்தில் இந்தியப் பண்பு

## இராமாயணத்துக்கு உரிமை

சிறிய நாடாக இருந்தாலும் சந்தோஷமும் திருப்தியும் நிறைந்த மக்கள் வாழும் நாடொன்று தென் கீழ் ஆசியாவிலுண்டு. இந்தியா இலங்கை முதலிய நாடுகளிலிருந்து அங்கு செல்வோர் அதை வேற்றுநாடாகக் கருதமாட்டார். நீர்வளங்கள், நிலவளங்கள், மக்கள் வாழ்க்கை, நாகரிகம், சரித்திரம், கலாசாரம் என்பன யாவும் இந்தியாவை யொத்துள்ள நாடு செந்நெல் விளையும் சீயமல்லவா? தென் கிழக்கு ஆசியாவில் அரசியல் கொதிப்பு எந்நேரமும் இந் நாட்டில் இருக்கக் காணலாம். பல ஐரோப்பியரும் இங்கு சகல சுதந்திரத்துடனும் வாழும் வசதியைப் பெற்றுள்ளார்.

### சிற்பம்

இங்குள்ள மக்களால் இப்போது அங்கீகரிக்கப்பட்டு வரும் சமயம் பௌத்தமே. ஆலயங்கள் வீடுகள் என்பன தென்னிந்தியாவில் காணப்படும் ஆலயங்கள் இல்லங்கள் போன்றன. ஆலயங்களில் காணப்படுஞ் சிற்ப வடிவங்கள் நுணுகிய கைவேலைகள் என்பனவும் தென்னிந்திய சிற்பத்துக்கு வேறானவையல்ல ஆலயங்களின் உட்சுவர்களில் இராமாயணச் சரித்திரம் பூரணமாகச் சித்திரிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். சீயத்து மக்கள் இராமாயணத்தைத் தமது சொந்த இதிகாச காவியமாகக் கருதி வருகின்றனர். இந்தியருடைய காவியமென்று அதனை யாராவது கூறின் அது இந்தியாற் களவாடப்பட்டது என்பராம். இது விஷயமாக அவர்கள் மிக்க ஆக்கிரமுறுவார்கள் எனத் தெரிகின்றது. புராதன காலத்தில் இந்திய கலாசாரம் எவ்வளவு தூரம் பரம்பியுள்ளதென்பதைச் சீயத்தைத் தெரிசிப்போர் நன்கறிவார். ஆலயங்களில் மாத்திரமன்றிக் கடைகளிலும் மற்றைய பொது இடங்களிலும் இந்து தெய்வங்களின் உருநாடுகளும் சித்திரங்களும் அங்கு பரக்கக் காணப்படுகின்றன.

### பாஷை

இன்று சீயத்து வாழும் மக்கள் பெரும்பாலோர் தமது நாகரிகம் கலாசாரம் என்பன இந்தியாவுடன் தொடர்புடையதென்பதை அறியார். சீயமக்கள் பாஷையும் சமஸ்கிருத பாஷையை முதலாகக் கொண்டு தோன்றினதாகவிருக்கின்றது. அநேக சொற்கள் ஆரிய பதங்களாகக் காணப்படுகின்றன. இந்தியாவின் பாஷையும் நாகரிகமும் எப்படி எப்போது இங்குவந்ததென்பதை யறியவேண்டின இந்நாடுகளின் பூர்வீக சரித்திரத்தைத் துருவி நோக்கின் தெரியவரும். தென்னிந்திய மக்களே பெருந்தொகையாக இங்கு சென்று குடியேறினர். அன்றேல் இங்குள்ள ஆலயங்கள் மதுரை காஞ்சிவரம முதலிய நகரங்களிலுள்ள தெய்வத் தலங்கள் போல் மகத்துவமானவும் மனதை இரம்மிதமடையச் செய்யும் சிற்ப வேலை அமைந்தனவாகவும் இருக்கக் காரணமில்லை. இங்கு வசிக்கும் மக்களின் தேக அமைப்பும் வனப்பும் வண்ணமும் பலவழியிலும் தென்னிந்திய மக்களைச் சான்றுள்ளன. பூர்வீக தென்னிந்திய மக்கள் சென்று சீயத்தில் வாழ்ந்த புராதனமக்களுடன் கலப்பு விவாகஞ் செய்து வாழ்ந்தனரென்றே கூறவேண்டும்.

### வாழ்க்கை நலம்

மேலும் சீயமக்கள் மிக்க பொறுமையும், நற்குணமும், நகைச்சுவையும் வாய்ந்தவர்கள். எப்போதும் அகமகிழ்ச்சியுடன் வாழும் மக்கள் இவர்கள்போல் உலகில் எங்கேயாவது காணவியலாது. இங்கே இன்னும் சனநாயக அரசியல் ஏற்படவில்லை. பொதுமக்கள் இன்னும் முற்றாக அடிமைத் தளையினின்று நீங்கவில்லை. கல்விதானும் இங்கு பூரணமாக விருத்தி யடையவில்லை. என்றாலும் மக்கள் இங்கு காட்டும் திருப்தியும் சந்தோஷமும் இம்மாத்திரமன்று. பிரான்ஸிலுள்ள பரிஸ்நகர்கூட இதன் ஆடம்பரத்துக்கும் உல்லாச வாழ்வுக்குந் தோற்றுப்போம். செல்வம் நிறைந்த அமெரிக்க மக்கள்தானும் இந்நாட்டினர்போல் கவலையின்றி வாழ்கின்றனர் என்பது சந்தேகம்.

### பழுதான மேற்றிசை நாகரிகம்

இந்தப் பெருமைகள் ஒருவாறாக இப்போது இந்நாட்டின் உயர்ச்சிக்கு இழுக்கு உண்டாக்கிவரும் மேலைத்தேச நாகரிகத்தின் கொடுமைகள் பலவுண்டு. பின் முன் யோசனையின்றி ஐரோப்பியரின் தீய முறைகளைப் பின்பற்றிச் செல்லும் மக்களும் இங்கு அநேகர் உளர். ஐரோப்பிய நடனம், உடை, ஊண் என்பனவற்றில் மோகம் அதிகம் ஏற்பட்டு வருகின்றது. இந்நாட்டின் வீழ்ச்சிக்கு இவைகளும் காரணமென யோசிக்க வேண்டியிருக்கின்றது. பழைய கலாசாரங்களை மறந்து ஐரோப்பிய நாகரிகம் கலாசாரம் பழக்க வழக்கங்கள் என்பனவற்றிற் காலத்தைச் செலவிடுவோர் பலரை இங்கு காணலாம். ஒருகால் சீயத்துச் சேனைத் தலைவராயிருந்த தளபதி சொங்கராம் என்பவர் கையில் அரசியல் அதிகாரம் வந்தது. அவர் உடனே எல்லோரும் (ஆணும் பெண்ணும்) ஐரோப்பிய உடை தாங்க வேண்டுமென உத்தரவு பிறப்பித்தனர். அதன் பேறாகச் சிறிதுகாலத்துக்கு இந்த மாற்றம் நிகழ்ந்து வந்தது. இப்போது அது நீங்கியதாயினும் இன்னுஞ் சிலர் ஐரோப்பிய உடையிற் காணப்படுவது நூதனமல்ல.

### வறுமையில்லை

எந்த நூதனங்கள் மாற்றங்கள் காணப்படினும் இங்கு வறுமையென்பது கிடையாது. பிச்சை யெடுத்துத் திரியும் யாசகர்களைக் காண்பது மிக அரிது. பலவிடங்களையும் தரிசித்து நோக்கின் அங்கெல்லாம் செல்வமும் சந்தோஷமும் விருத்தி யடைவதைக் காணலாம். இங்கோ மோட்டோர் இரதங்கள் அந்நிய நாட்டு ஆடம்பரப் பொருட்கள் என்பன காணக்கிடையா. கமச்செய்கைக்குரிய செழித்த விசாலமான இடங்கள் போதியளவுள. இங்கே மக்கள் உபயோகிக்கும் சிறந்த அரிசி மற்றையநாட்டு மக்களுக்கு ஏற்றுமதியாவதில்லை. போதிய நிலம் அங்கு கிடைக்கும். சனத்தொகை அதற்கேற்றதாயில்லை. ஒவ்வொரு குடும்பத்துக்கும் குறைந்த பட்சம் இருபத்தைந்து ஏக்கர்கொண்ட விளைநிலமுண்டு. ஒரு ஏக்கரில் ஒரு டொன் அரிசி விளைவிக்கப்படும் நிலங்கள் பொதுவாகவுண்டு. மேலும் சீயத்தில் தகரமும், தேக்கும் போதியளவு பெறப்படுகின்றன. மிக்க நெருக்கடிகள் ஏற்பட்ட தற்போதைய உலகில் சந்தோஷமாக எவ்வித குறையுமின்றி வாழ்வோர் சீயதேச மக்களே.

# திருக்கேதீஸ்வரத் திருப்பணி

சு. சிவசுப்பிரமணியம்
[திருக்கேதீஸ்வர ஆலயத் திருப்பணிச் சபைச் செயலாளர்]

### திருக்கேதீஸ்வரமானது

சைவ சமயிகளால் மிகவும் புனிதமானதென மதிக்கப்படும் திவ்விய க்ஷேத்திரங்களுள் ஒன்று. இங்குள்ள ஆலயத்தைப் புதுக்கி அமைப்பதற்கு இப்பொழுது ஆரம்பித்திருக்கும் முயற்சி சிறந்ததோர் திருத்தொண்டாகும். திருக்கேதீஸ்வர ஸ்தலத்தைத் தன்னகத்தே கொண்டிருப்பது நம் தாய்நாடாகிய இலங்கையின் பாக்கியமென்றே கூறவேண்டும். எம் வாழ்நாளிலே புராதன திவ்விய க்ஷேத்திரமாகிய இதனைப் புதுக்கி அமைக்கும் முயற்சி ஆரம்பமாய் இருப்பது, அதன் பயனாக எழும் சமய உணர்ச்சிப் பெருக்கத்தை நாம காணக்கூடியதாய் இருப்பதும், அத்திருத் தொண்டில் ஈடுபட்டுப் பங்குபற்றக் கூடிய நிலையில் இருப்பதும் இந் நாளிலுள்ள சைவமக்களாகிய நாம் செய்து கொண்ட தவப்பயனேயாகும். இத்திருத் தொண்டு மகத்தான சிவ புண்ணிய பலனை அளிக்கக் கூடியது. ஆகையால் பல்லாயிர வருடங்களாக இறைவனை வழிபடுதற்கேற்ற திவ்விய ஸ்தலமாக விளங்கிய இவ்வாலயத்தைப் புதுக்கி அமைப்பது சைவ மக்களாகிய எமது கடமையாகும்.

### இறை வழிபாடு

ஆழ்ந்த அறிஞர்களும் பெருங்கருமங்களைச் சாதித்தோரும் சமயத்தையே உலகிலுள்ள ஏனைய விஷயங்களிலும் பெரிதாக மதித்து வந்திருக்கின்றனர். மக்கள் கடமைகளுள் மிக முக்கியமானது கடவுள் வணக்கமேயாகும். கல்வியின் பயனும் அதுவே. இதனாலேயே தெய்வப் புலமைத் திருவள்ளுவநாயனாரும்

"கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்"

எனக் கடவுள் வணக்கத்தை மிக முக்கியமானதாகக் கூறியிருக்கின்றனர். பரம்பொருளை வணங்குவதற்கு நமது சைவ சமயத்தில் மிகவும் ஆழ்ந்து அகன்று விரிந்த வழிபாட்டு முறைகள் விதிக்கப்பட்டிருக்கின்றன; இத்தகைய வழிபாட்டு முறைகளை வேறு எச்சமயத்திலும் காணமுடியாது. சர்வ வல்லமை உடையவரும் சர்வ வியாபியுமாகிய எம்பெருமான் தம்மையும் தம் பெருமையையும் இடத்திற்கேற்றவாறு வேறு வேறிடங்களில் வேறு வேறளவாகத் தோன்றச் செய்து ஆன்மாக்களுக்கு அருள் புரிவார். அது சிற்றறிவும் சிறு தொழிலும் உடைய நம் போன்ற சாதாரண மக்களால் முற்றிலும் அறிய முடியாத இறைவனது பேரமைப்பாகும்.

தீர்க்கதரிசிகளாகும் சமயப் பெரியோர்கள் காலந்தோறும் உலகிலுள்ள எல்லாச் சமயங்களிலும் தோன்றுகின்றனர். சைவ சமயத்தில் தோன்றிய பெரியார்களுள் சமய குரவர்களையும் ஏனைய நாயன்மார்களையும் குறிப்பிடலாம். அநுபூதி வாயிலாக இறைவனை உணர்ந்து நேரே தரிசித்துத் தாம் பெற்ற அறிவை ஏனைய மக்களும் பெற்றுய்தற் பொருட்டு அவர்களுக்கு எடுத்துரைக்கும் பாக்கியம் இப் பெரியோர்களுக்கே கிட்டியது. சிற்பம், ஓவியம், கல்வி, விஞ்ஞானம், கைத்தொழில் முதலாக வாழ்க்கையில் உள்ள ஏனைய துறைகளில் பல பெரியோர்கள் தோன்றுவது போலவே சமயத் துறையிலும் இறைவன் அருள் பெற்ற பல பெரியார்கள் தோன்றிப் பல அருள் மொழிகளை உலகிற்கு வழங்கினர். சைவ சமயக் குரவர்களுள் வைத்தெண்ணப்படுபவராகிய திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகளும் சுந்தரமூர்த்தி சுவாமிகளும் தாம் பெற்ற அநுபூதியின் பலனாகத் திருக்கேதீஸ்வரத்தைப் போற்றித் துதித்துத் தேவாரத் திருப் பதிகங்கள் அருளிச் செய்திருக்கின்றனர்.

### முதற்பொருள்

சைவ சமயிகளாகிய நாம் ஈஸ்வரனை உலகுயிர்க்கெல்லாம் முதற் பொருளென மதிக்கின்றோம். தம் வாழ்க்கையிலும் உபதேசங்களினாலும் சைவத்தை நிலைநாட்டிய சிவனடியார்கள் காட்டிய நெறியைப் பின்பற்றுவதாகக் கூறுகின்றோம். ஆகையால் பண்டைக் காலத்தையே வாழ்ந்து சைவத்தை நிலைநாட்டிய பெரியார்களுக்கு நாமாற்றும் கடமைபாவம் இப்போதுள்ள சைவமக்களுக்கும் இனிவரும் எம் சந்ததியார்க்கும் நாம் செய்ய வேண்டிய சேவையாகவும் கருதி இப்புராதன ஆலயத்தைப் புதுக்கி அமைத்தல் அத்தியாவசியமாகும். சைவப் பெரியாராகிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களும் இப் புராதன ஆலயத்தைப் புதுக்கி அமைக்க வேண்டுமென வற்புறுத்திக் கூறி இருக்கின்றார்.

ஆன்மலாபத்தை அளிக்கக் கூடிய இத்தொண்டில் சைவநன் மக்கள் யாவரும் பங்கு பற்றுதல் வேண்டும். இத் திருத்தொண்டின் பெருமையோ அளவிடற்கரியது; ஆகையால் இதில் நாம் எவ்வகையிலாவது பங்கு பற்ற முடியாத நிலையிலிருப்பதாக ஒரு சைவரும் நியாயமான முறையில் எண்ணவும் முடியாது; கூறவும் முடியாது. எந்தச் சைவராவது தாம் வயதில் அதிகம் முதிர்ந்து விட்டதாகவேனும், மிகுந்த இளமைப் பருவத்தில் இருப்பதாக வேனும், மித மிஞ்சிய செல்வாக்குடனிருப்பதாக வேனும், சிறிதேனும் மதப்பற்றிருப்பதாக வேனும், செல்வத்திற் சிறந்து விளங்குவதாக வேனும், வறுமையில் ஆழ்ந்திருப்பதாக வேனும், தமக்கு வேலைகள் அதிகமென்றேனும், அல்லது குடும்பக் கவலைகள் மிக உண்டென்றேனும் காரணம் கூறி இத் திருத்தொண்டிற் பங்கு பற்றாமலிருக்க முடியாது.

### சிவத்தொண்டு

ஆலயமொன்றை அமைப்பது சிறந்த புண்ணியச் செயலாகும். சிவாலயமொன்றைக் கட்டுதல் மேலும் சிறந்த பயனை அளிக்கும் புண்ணியச் செயலாகும். தேவாரத் திருப்பதிகங்களிற் பாராட்டப் பெற்ற மகிமையினையுடைய புராதன சிவாலயத்தைப் புதுக்கி அமைப்பதால் அதனிலும் சிறந்த புண்ணிய பலனைத் தரக்கூடிய சிவதொண்டாகும். சைவரொருவர் திருக்கேதீஸ்வர ஆலயத் திருப்பணிக்குப் பக்தி விசுவாசத்துடன உதவி புரிந்தமையை இம்மையில் தாம் புரிந்தபுண்ணியச் செயல்களுள் ஒன்றாக எண்ணக் கூடுமாயின் அத் தொண்டு ஒன்றுமே அவருக்குப் பெருநன்மை பயக்கும். தம் சீவியத்தில் வேறொரு புண்ணியத்தையும் செய்யாவிடினும் இக்கைங்கரியத்தில் மாத்திரம் பங்கு பற்றுவதனாலேயே அவர் சிறந்த புண்ணிய பலனைப் பெறுவர்.

தம் சமயப் பற்றினாலும் தெய்வ பத்தியினாலும் புகழ் பெற்ற நகரத்தார்கள் ஏறக்குறைய ஐம்பது வருடகாலமாகத் திருக்கேதீஸ்வரத்தில் இப்பொழுதுள்ள ஆலயத்தைப் பராபரித்துச் சைவ மக்கள் வழிபாட்டிற்கு உதவி புரிந்து நம் சமயத்திற்குப் பெருஞ்சேவை செய்திருக்கின்றனர். நகரத்தார் புரிந்திருக்கும் இவ்வரிய சேவைக்காகச் சைவ கழகத்தினரின் நன்றி அவர்கட்கு உரியதாகும். இப் பெரியார்கள் புரிந்த தொண்டை அவர்கள் உதவியோடு நாம் மேலும் தொடர்ந்து நடாத்தவேண்டும். அங்ஙனம் நடாத்தி இத்திவ்விய க்ஷேத்திரத்திலுள்ள ஆலயத்தைப் புதுக்கி அமைத்து அது தன் புராதனப் பெருமையையும் தூய்மையையும் ஓரளவுக்காவது பெற்றுச் சைவ சமயிகள் எல்லோரும் வழிபடத் தக்க நிலையில் விளங்குமாறு செய்தல் எமது கடமையாகும்.

### திவ்விய தீர்த்தம்

பண்டைக்காலத்தே திவ்விய தீர்த்தமாக விளங்கிய பாலாவியானது பல நூற்றாண்டுகளுக்குப் பின் புதுக்கி அமைக்கப் பட்டுத் தீர்த்தத்தால் நிரம்பி இருக்கின்றது. யாத்திரீகர்கள் தங்குவதற்காக அன்பர்கள் திருக்கேதீஸ்வரத்தில் ஒரு மடத்தைக் கட்டத் தொடங்கி இப்பொழுது அதில் ஒரு பாகத்தை நிறைவேற்றி இருக்கின்றனர். அம்மடம் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் மடமென வழங்கப்படுகின்றது. யாத்திரீகர்கள் தமது உடம்பைத் தூய்மை செய்வதற்கு மிக அவசியமான தீர்த்தமும் தங்

(தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழகேசரி

சுன்னாகம், விரோதி, சித். உரு

— கார்த்தி ஆண்டு 80 —


## தொழில்மூலம் கல்வி

இலங்கையில் மாத்திரமன்று, இந்தியாவிலும் மற்றும் பல நாடுகளிலும் கல்வி முறையிற் பல மாற்றங்களும் திருத்தங்களும் ஏற்பட்டு வருகின்றன. எழுத வாசிக்க அறிந்து கொள்வது மாத்திரம் கல்வியாக மாட்டாது. கற்ற கல்வியின் ஆற்றலைத் துணைக் கொண்டு சீவியத்துக்குவழிகாணும் திட்பமான வாழ்க்கை நிலையை அடைவதே கல்வியின் பலனாக வேண்டும். இக் கல்வி விஷயமாகச் சென்ற முப்பது வருடமாக ஏற்பட்ட ஆராய்ச்சியின் பேருகப் புதியவோர் திட்டம் இந்தியாவில் வகுக்கப்பட்டு இப்போது படிப்படியாக அனுசரணைக்குக் கொண்டுவரப் படுகின்றது. இத் திட்டத்துக்கு முதற்காரணராயுள்ளவர் மகாத்மா காந்தியடிகளே யாவர். கற்கப்படும் கல்வி தொழிலை ஆதாரமாகக் கொண்டு அமைய வேண்டுமென இவரே முதன் முதல் அனுட்டானத்தில் விளக்கிக் காட்டினர்.


இதுவரையும் நம் நாட்டிற் கற்றுக்கொடுக்கப்பட்ட கல்வி உத்தியோகத்தைப் பெற உதவியாயிருந்ததன்றி, வாழ்க்கை நலத்தைக் கூட்டி வைக்கும் மாண்பு சிறிதும் பொருந்தியதாயிருக்க வில்லை. பிரிட்டிஷாருடன் ஆங்கிலக் கல்வியும் படிப்படியாக நமது நாட்டைவிட்டு அகன்று செல்லும்பொழுதுதான் அக் கல்வியின் பயனின்மை நன்கு விளங்குகின்றது. கல்வி கற்கும் மாணவர்கள் எல்லோர்க்கும் உத்தியோகம் நிச்சயமாகக் கிடைப்பதென்பது எப்படி? ஆகையால் தொழிலை ஆதாரமாகக்கொண்ட கல்வியே சிறந்ததென்பதை இந்திய அரசினர் நன்கு திட்டஞ் செய்துவிட்டனர். வித்தியாசாலைகளிற் கல்வி கற்கும் போது மாணவர்களின் மனப்பாங்குக்கும் மூளை வன்மைக்கும் இயைந்த தொழில்களைக் கற்றுச் சென்ருல், பின் அம் மாணவர் சீவனோபாயத்தின் பொருட்டு முட்டுப்படவேண்டியதில்லை. அரசாங்க உத்தியோகங் கிடையாவிடினும், தாம் கற்ற தொழிலை உதவியாகக் கொண்டு பொருளீட்ட வசதி ஏற்படும்.

இலங்கை அரசினர் இம் முறையிற் கல்விகற்றுக் கொடுக்கும் நோக்கமுடையராயினும், இன்னும் நடைமுறைக்கு ஒரு திட்டமும் வரவில்லை. கற்றுக்கொடுக்கப்படும் கல்வியுடன் ஒவ்வொரு வித்தியாசாலையிலும் மாணவர் இரண்டு மூன்று தொழில்களையும் கற்கும் வசதியைப் பெறவேண்டும். அத் தொழிற் கல்வி கட்டாயமாக விருப்பதும் அவசியம். இலங்கையரசினர் இத்துறையில் சிறிது ஊக்கங்காட்டின், நாட்டின் பொருளாதார நிலை உறுதியடைவதுடன் வேலையில்லாத் திண்டாட்டமும் நம்மை வருத்தவேண்டியதில்லை. இம்முறையான கல்விக்கு முதலிட மளிப்பின் இருபெரு நன்மைகள் உண்டாகும். முதலாவதாகத் தொழில்களில் ஈடுபடுவது அவமான மென்ற பிழையான மனப்பான்மை நீங்கி யாவரும் பல்வேறு தொழில்களை மேற்கொள்வர். இரண்டாவதாக நாட்டில் அருகிச் செல்லும் எத்தனையோ குடிசைத் தொழில்கள், உயிர்ப்பிக்கப்பட்டு மறுபடியும் நாட்டின் செல்வத்தை விருத்தி செய்யவும் வசதியுண்டாகும். ஏனவே, இம்முறைக் கல்விதான் இனி இலங்கைக்கு உய்வைக்கொடுக்கக்கூடியது.

பல்வேறு துறைகளிலும் உன்னத நிலையிலுள்ள அநேக ஐரோப்பிய நாடுகளின் வளர்ச்சியை நோக்கின், தொழிற்கல்வியே அந் நாடுகளின் மீட்சிக்குக் காரணமென்பது இனிது விளங்கும். விஞ்ஞான சாஸ்திரமும் அதைத் துணைக் கொண்டு தொழில் விருத்தியும் அவசியம் நமது நாட்டில் வேரூன்ற வேண்டும். இது கைகூட வேண்டின் தொழில் மூலம் கல்விகற்பிக்கப்படுவதும் இன்றியமையாத தொன்ரும். இலங்கைக் கல்விப்பகுதியினர் காலந் தாழ்க்காது பாடத்திட்டங்களை இதற்கு அனுசரணையாகும்படி திருத்தி வகுப்பது மிக அவசியமன்ரே. கமத் தொழிலும் குடிசைத் தொழிலுந்தான் நாட்டிற்கு உயிர்நாடிகள் போன்றவை. இவைகளை அரசினர் ஏற்ற முறையில் விருத்தி செய்யக் குறைவின்றி விசேஷ முயற்சிகள் கையாள வேண்டும். பாடத்திட்டங்களிலும் இவைகள் அங்கமாகும்படி செய்ய வேண்டும். இத் துறையில் இந்திய அரசினர் மிகவும் அக்கறை காட்டி உழைப்பதை நேரே கண்டபின்னும், நமது அரசினர் பராமுகமாக விருப்பது முறையாகுமா? பழைய கல்வி முறை இனி முற்றாக நீங்க வேண்டியதுதான். தொழில் முறைக் கல்வி ஆக்கந் தருமென நம்பி அத் துறையில் உழைப்பதே முறையாகும்.

## தெரியாது மயங்கினரோ?

இந்தியா பூரண சுதந்திரத்தைப் பெற்ற குடியரசு நாடாக இருப்பதுடன் சாம்ராச்சிய நாடுகளுடன் சம அந்தஸ்தைப் பெறும் நாடாகவும் விளங்கப் போகின்றது. இதைக்கண்டு இலங்கையும் பாகிஸ்தானும் மலைவடைந்து கண்விழித்து வியப்படைகின்றன. இந்தியா குடியரசு நாடாகவிருக்க வசதி இருந்தால் தங்கட்கும் அப்படியான தொடர்பு இருக்கலாகாதா என்று கேட்கின்றன. இவ்விஷயத்தில் இவ் விருநாடுகட்கும் ஒருவரும் முட்டுக் கட்டை போடவில்லையே! பிரிட்டிஷாரின் கீழ் குடியேற்ற நாடாகவிருப்பின் தமக்குப் பெரு நன்மைகள் மதிப்புகள் வருமென இவ்விரு நாடுகளுங் கருதின. தங்கள் மீது பிரிட்டிஷார் விசேஷ விருப்பமும் அபிமானமுங் கொள்வரெனப் பிழையாக விளங்கினர். ஆனல் பிரிட்டிஷார் மனப்பான்மையை இவர் உள்ளபடி விளங்கிக் கொள்ளவில்லை. இந்தியாவின் நட்பினையும் தொடர்பினையும் எப்படியாவது பெறவேண்டுமென்று பிரிட்டிஷார் கருதினரேயன்றி இலங்கை, பாகிஸ்தான் நாடுகளைப் பெரிதும் அக்கறையுடன் மதித்தாரில்லை. இப்போது இந்தியா இவ்வளவு கௌரவத்துடன் அங்கத்துவம் வகிக்கத் தாம் அடிமைகள் போல் வாழ்வது நகைப்புக்கிடமென்று எண்ணுகின்றனர். எவ்வளவு சுதந்திரத்தைப் பெறினும் பிரிட்டிஷ் அரசபெருமானுக்கு விசுவாசங் காட்டும் வரையும் பூரண சுதந்திரமும் மதிப்பும் எப்படி ஏற்படும்? ஆகவே இவ்விரு நாடுகளும் ஏகாதிபதத்தியத்தினின்று விலகிக் கொள்ளலாமோ வென்று எண்ணுகின்றன. மிகச் சிறியனவாகும் இந்நாடுகள் விலகிக்கொள்ளும் ஆற்றலைப் பெறவுமில்லை. அப்படியாக விலகினும் தன்னிஷ்டமாக வாழும் பெலமுடையனவாவென்பது இன்னொரு கேள்வி. இக் கிலையில் குடியரசாக இந் நாடுகள் சடுதியில வருவதென்பது எப்படி? அத்துடன் ஐரோப்பிய தொடர்பினை நாடும் இவ்விரு நாடும் பிரிட்டிஷாரை முற்றாகக் கைவிடின் கதியாதாகும். ஆகையால் அளவுக்கு மிகுதியாக நட்படாது நீதியாக நடக்கக்கொள்வதே முறையாகும்.




மலாயாவிலுள்ள தொழிற்சங்கத்தின் பழைய தலைவரான தமிழ்நாட்டுக் கணபதியை மலாயா அரசாங்கம் தூக்கிலிட்டது. நிரபராதி கணபதி சிறையிலிருந்த காலத்திலே தஞ்சாவூரிலுள்ள தமது குடும்பத்தினருக்கு எழுதிய கடிதம் மிக உருக்கமானது. கவிதைப் பண்புடன் முடிவுறும் அக்கடிதத்தின் அழகுதான் என்ன!

"......... உதய சூரியன் உதிக்கும்; மேலே உயரும்; தாழும்; இருளும்; சூழும்; மலர் மொட்டும் மலர்ந்து மணமே வீசும்; கருகி உதிரும்; சருகாய்வீழும்; அதேபோல், பிறவி மனிதர்க்கு இறுதி. மரணம்பிரியாத் தோழனுமாவான். எனவே உருகவேண்டாம். உயிர்க்குஇறுதி உண்டெனும் உண்மையை ஓர்க"

### பொன்னகரம்!

தமிழ் நாட்டிலும் பொன்னகரங்கள் உள. புதுமைப் பித்தன் அவர்களும் ஒரு பொன்னகரத்தைச் சிருஷ்டித்துத் தந்துள்ளார். அது அவருடைய ஒரு சிறு கதையாகும். சமீபத்தில் நேருஜி சுவிட்ஸலந்துக்கு விஜயம் செய்தபோது அதைப் பொன்னகரம் எனப் பத்திரிகைகள் எழுதின. எப்படியெனில்: கிலாட்டன் விமான நிலையத்திலிருந்து பண்டித நேரு மோட்டாரில் பொன்னகரத்துக்குச் சென்ருர். தோட்டங்களுந் துரவுகளும் நிறைந்த சுவிட்ஸலந்துப் பீடபூமியின் வழியாக நேருஜியின் மோட்டார் சென்றது. வானத்தில் கார்மேகங்கள் தவழ்ந்துசென்றன. தவழ்ந்து செல்லும் மேகங்களின் ஊடே ஆதித்தன் பொன்னொளிவீசி நின்ருன். இது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

### பழங்களின் இராஜா

பம்பாய் நகரிலுள்ள மாம்பழங்களின் சுவையே தனி. வெண்ணெய்க் கட்டி மாம்பழங்களும், வெல்லக்கட்டி மாம்பழங்களும் அங்கு உள. பழங்களின் இராஜாவாகிய மாம்பழத்தை, மனிதரில் மாணிக்கமானவர், மேதைகளில் மகா மேதையானவருக்கு வழங்குவதென்ருல் அம் மாம்பழத்தின் பெருமைதான் என்ன?

பேணுட்ஷாவை நேருஜி சமீபத்திற் தரிசித்தபோது மாம்பழங்கள் வழங்கியதைத்தான் இங்கு குறிப்பிட்டுள்ளேன்.

### தனியரசு

இலங்கையிலே ஒருசிலதமிழர் தனியரசுவேண்டிச் சத்தமிடுகின்றனர். இது சம்பந்தமாகத் தமிழ் நாட்டுத் தமிழரசுக் கழகத்தின் தலைவரான சிவஞானகிராமணியார் தெரிவிப்பதாவது:

"நான் அறிந்தவரை இலங்கைத்தமிழ் மாகாணங்கள் ஒரு தனியரசின்கீழ் இருப்பதற்கான பொருள் வளம் படைத்தவையல்ல. இந்த நிலையில், தனித் தமிழ் அரசு அமைக்க விரும்புவது நலலதல்லவென்றே கருதுகிறேன்......"

### காதுகேட்ட கதை

பிரபு சோல்பெரி விரைவில் இலங்கைக்கு வருகின்ருர். ஆம், பிரதம தேசாதிபதியாகத்தான் அவருக்கு இலங்கை மந்திரிசபை அவ்வளவாகப் பிடிக்கவில்லையெனக்கேள்வி. ஒருவேளை சில மாற்றங்கள் ஏற்படக்கூடும்.

அப்படியானல்: ஸ்ரீ சுந்தரலிங்கம் கல்வி மந்திரியாகப் பதவி வகிப்பார்.

ஸ்ரீ நுகவெல லண்டனுக்குச் சென்று எங்கள் பிரதிநிதியாக அங்கு வீற்றிருப்பார்.

சேர் ஒலிவர் இந்தப் பக்கம திரும்பாமல் சீமையிலேயே இளைப்பாறிச் சௌகரியமாகக் காலங்கழிப்பார்.

இதற்கிடையிலே தபால—தந்திப பகுதியையும் போக்குவரத்து மந்திரியிடம் ஒப்படைத்துவிட்டால், மந்திரி சிற்றம்பலம் சும்மா இருப்பார்.

இத்தனையும் வெறுங் கதையென்று நீங்கள் நினைத்தால் எனக்கென்ன?

### சாமான் கோச்சு!

மந்திரி சிற்றம்பலத்தை யாரோ ஒருவர் சாமான் 'கோச்சு'க்கு ஒப்பிட்டிருந்தார். பாக்கு, வெற்றிலை, சுண்ணும்பு போன்ற மூடைகளை ஏற்றிச் செல்லும் சாமான் வண்டி விரைவாகச் செல்வதில்லையென்பது உண்மைதான். அதுமெதுவாகவே இழுபடுகின்றது.

மந்திரி பொன்னம்பலம் பிரயாணிகளைச் சுமந்து செல்லும 'மெயில்' வண்டிக்கு ஒப்பிடப்படுகிருர். ஏனெனில் அவர் கையிலே பிரம்பைப் பிடித்துக்கொண்டு கிசுகிசு என்று காரியங்களை முடித்துவிடுகின்ருர்! ஆம், கடகட என்று ஓடிச்செல்லும் மெயில் வண்டியைப்போல!

## சீனத்தின் சோதனைகாலம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கிடையில் அமெரிக்கா, பிரிட்டன் போன்ற வல்லரசுகள் சீனத்து விஷயத்தில் இனி எவ்வாறு நடந்து கொள்ளப் போகின்றன என்பதையும் உலகறியச் செய்ய வேண்டும். அப்படியானுற் சீனம் மீண்டும் தலையெடுக்குமா? அல்லது கொம்யூனிஸ்டின் ஆதிக்கத்துக்குள்ளாகுமா என்பது தெரிந்து விடும்.

### ஷாங்காய் நெருக்கடி

ஷாங்காய் நகரைக் கொம்யூனிஸ்டுகளின் தாக்குதல்களினின்றும் காப்பாற்றுவதற்காகச் சீனத்து அரசாங்கம் ஏராளமான வெடிகுண்டு விமானங்களைத் தயாராக வைத்திருக்கின்றது.

ஷாங்காய் நகருக்கு ஆபத்து நெருங்குவதைக் கண்டு அங்குள்ள அந்நியர்கள் மூட்டை முடிச்சுகளுடன் வெளிக்கிளம்ப ஆயத்தமாகின்றனர்.

இங்குள்ள மக்களிடையே பெரிய குழப்பங்கள் மூளுவதற்கான அறிகுறிகள் தோன்றிவிட்டன. இது ஒரு காலத்திலே சீனத்தின் செல்வம் கொழிக்கும் பூமியாக விளங்கியது. இங்கு வாழும் 60 இலட்சம் மக்களையும பஞ்சமும் பட்டினியும் வாட்டத் தொடங்கிவிட்டன. பணப் பெருக்கத்தின் கோரம் அகோரமாகிவருகின்றது.

### அயர்லந்து

அயர்லந்து குடியரசாகிய செய்தி வாசகர்கள் அறிந்ததொன்று. ஆகவே இநாடு பிரிட்டிஷ் டொமனியன்களில் ஓர் அங்கமல்லவெனவும், அத்துடன் அது ஒரு அந்நிய நாடல்ல என்பதையும் கூறும் மசோதாவானது லண்டனிலுள்ள பொதுமக்கள் சபையில் முதல் முறையாகச் சமர்ப்பிக்கப்பட்டது. இம்மசோதாவில் இரு அம்சங்கள் உள:

1. அயர்லந்து மக்களைப் பிரிட்டன் அந்நியரெனக் கருதாது.

2. அயர்லந்துக் கப்பல்களும் விமானங்களும் அந்நிய நாட்டைச் சேர்ந்தனவென பிரிட்டன் கருதாது.


### அறிவித்தல்

**இத்தாற் சகலருமறிக:**

வலிகாமம் வடக்கு, தெல்லிப்பழைக் கோவிற் பற்று, கட்டுவன் இறை, **தம்பையா — செல்லையா பெண் தங்கம்** ஆகிய நான், குறித்த எனது புருஷன் தம்பையா-செல்லையாவுடன் சில மனஸ்தாபங்கள் காரணமாகத் தற்சமயம் பிரிந்திருப்பதால் எனது பேரில் முடிந்த கொள்விலைக் காணிகளின்பேரில், குறித்த செல்லையா தனித்து எத்தகைய சாதனங்கள் முடிப்பினும் ஏற்றுக்கொள்ளப் படமாட்டாதென்றும், அவர் செய்யும் பற்று வரவுகளுக்கு யான் பொறுப்பாளியல்ல என்றும் அறிவிக்கின்றேன்.

இங்ஙனம்
(Sgd.) செ. தங்கம்
கட்டுவன்,
தெல்லிப்பழை, 25-4-49
[3658-iii]


### திருமணம்

★

**துரைராஜசிங்கம்— ஜெயலக்ஷ்மி**

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற ஸ்ரீ செல்லையா அவர்களின் புத்திரன் செல்வன் துரைராஜசிங்கம் (அரசினர் நில அபிவிருத்திப்பகுதி) அவர்களுக்கும், கொழும்புத்துறையைச் சேர்ந்த காலஞ்சென்ற ஸ்ரீ கைலாசபிள்ளை அவர்களின் புத்திரி செல்வி ஜெயலக்ஷ்மி அவர்களுக்கும் சென்ற புதன்கிழமை (4-5-49) காலை மணமகள் இல்லத்திலே திருமணம் நிறைவேறியது. அன்று பிற்பகல் 'சாப்பல்' வீதியிலுள்ள மணமகன் இல்லத்தில் விருந்துபசாரம் நடைபெற்றது.

★

**சேஷாத்திரி— செம்பகலக்ஷ்மி**

யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறை சிதம்பர வித்தியாலயத்து அதிபர் ஸ்ரீ எஸ். வி. ஐயங்கார் அவர்களின் புத்திரன் செல்வன் சேஷாத்திரி அவர்களுக்கும், ஸ்ரீ கே. வி. தேவராஜ ஐயங்கார் அவர்களின் புத்திரி செல்வி செம்பகலக்ஷ்மி அவர்களுக்கும் சென்றபுதன்கிழமை(4-5-49) காலை சென்னை தியாகராய நகர் பிருந்தாவன வீதியிலுள்ள 'ஸ்ரீராம்பாக்' இல்லத்திலே திருமணம் நிறைவேறியது. பிற்பகல் கானரத்தினம் வி. வி. சடகோபன் அவர்களின் இன்னிசைக் கச்சேரியும், சங்கீத வித்துவான் தேவகோட்டை ஏ. நாராயண ஐயங்கார் கோஷ்டியின் வீணைக் கச்சேரியும நடைபெற்றன.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அகில உலக மேதாவி நேரு

## - இந்தியா -

சாம்ராச்சிய நாடுகட்கிடையில் ஒற்றுமை இவ்வளவு விரைவாக வருமென எவராவது காத்திருக்கவில்லை. இதைக் கண்டு அகில உலகமும் பண்டிதர் நேருவின் ஆழ்ந்த அரசியல் வன்மையை மிகவும் போற்றுகின்றது. இந்தியாவின் பெரிய அரசியல் மேதாவியென அவரைக் கூறுவது போதாது; உலக மேதாவியெனக் குறிப்பிடுவதே சிறந்ததெனப் பிரித்தானிய பிரதிநிதிகள் சபைப் பிரபு ஒருவர் கூறுகின்றார். ஒளிப்பு மறைப்பின்றி வெளிப்படையாக விஷயங்களை எடுத்துரைத்தமையாற்றான் காரியம் சித்தியாகவும் கௌரவமாகவும் திட்டமாயிற்று. இது மகாத்மா காந்தியின் நீண்ட காலச் சீடனாக இருந்து பண்டிதர் கற்ற விஷயமாகும். பண்டிதர் பெற்ற வெற்றியானது ஆசிய நாடுகள் அடைந்த வெற்றியாகும். கண்விழித்துச் சுதந்திரத்தின் அருமையை அறிந்த ஆசிய நாடுகளை, ஐரோப்பிய அல்லது அமெரிக்க வல்லரசுகள் பலாத்காரத்தால் அடக்கி விடலாமென்று எண்ணுவது இனிப் பலியாது என்றார் பண்டிதர். எனவே இந்தோனேஷிய முதலிய நாடுகள் சுதந்திரத்தை விரைந்து நிச்சயமாகப் பெறவேண்டுமென்றார். எதிர்காலத்தில் மேலைத்தேசத்தவர், ஆசிய நாடுகளின் உதவியையும் ஒற்றுமையையும் நட்பாலும் விசுவாசத்தாலும் பெறலாமேயன்றி. பயமுறுத்திப் பெறவியலாதென்றும் உறுதியாகக் கூறினர்.

### உலகயுத்தம்

மூன்றாவது உலகயுத்தம் அடுத்து வருமோவென்று யாவரும் அஞ்சுகின்றனர். பண்டிதர் நேருவின் அபிப்பிராயப்படி அது விரைவில் நிகழாதென அறியக் கிடக்கின்றது. இரண்டாவது மகாயுத்தத்தின் கேடு நீங்குமுன் மூன்றாவது யுத்தத்தை நடாத்த எந்த நாடும் ஆயத்தமில்லையென்றார். இச்சமயத்தில் எல்லா நாடுகளும் தூயமனதுடன் உலக நன்மையை நாடி ஒத்துழைப்பின் சமாதானத்தை நிலைநாட்ட இயலுமென்றார். அப்படியன்றியுத்தம் ஏற்படின் அதிலும் கொடியபயங்கரமான தீமை உலகத்துக்கு வேறெது என்றும், மேலும் வெற்றிபெற்றாலும் பாழடைந்த உலகத்தில் அவ்வெற்றி என்ன பெரிய பயனைத் தரும் என்று கூறினார். அத்துடன் நாட்டினைப் பாதுகாக்கும் விஷயத்தில் ஓரளவுக்கு யுத்த ஆயத்தங்கள் செய்யவேண்டுமேயன்றி, யுத்த நோக்குடனும் மற்றநாடுகளை ஆக்கிரமிக்கும் நோக்குடனும் ஆயுதங்கள் செய்யின், பெரிய தீமையே நிச்சயமாக வந்தெய்தும் என்று எடுத்து விளக்கினர்.

### காஷ்மீரம்

காஷ்மீரத்தின் விஷயமாகச் சிக்கல்கள் வந்தெய்தினபடியே இருக்கின்றன. இந்திய அரசினர் மனவிசுவாசத்துடன் நடந்துகொள்ளப் பாகிஸ்தான் அரசினர் மாத்திரம் சூழ்ச்சிகளைக் கையாண்டு சமாதானத்துக்குப் பங்கம் விளைக்கின்றனர். யுத்தத்தை நிற்பாட்டற் பொருட்டுச் செய்துள்ள நிபந்தனைகளைப் பாகிஸ்தான் அரசினர் அங்கீகரிக்கின்றாரில்லை சொல்வதொன்று செய்வதொன்றுமாக அவர்கள் போக்குகள் இருக்கின்றன. பாகிஸ்தான் படைகள் காஷ்மீரத்தை விட்டு விலகவேண்டுமென்ற நியதியுண்டு. ஆனாற் புதிதாக எத்தனையோ கிராமங்களிற் பாகிஸ்தான் படைகள் வந்து நிலைத்துள்ளனவாம். மேலும் காஷ்மீரத்து அரசினர்க்கு மாறான கட்சியொன்று உண்டு அக்கட்சியினர் தாமே காஷ்மீரத்தின் சொந்தக்காரரெனக் கூறி இடைவிடாது கஷ்டங்களை விளைத்து வருகின்றனர். இப்படைகளுக்கு உதவிபுரிபவரும் பாகிஸ்தான் அரசினரே. இந்தப்படையையும் குலைத்துவிடும்படி இந்திய அரசினர் கேட்டும் ஒன்றும் சித்திக்கவில்லை. இப்போது இந்திய படைகள் காஷ்மீரத்தை விட்டுவிலகவேண்டுமென்ற கோட்பாடு கிளம்பியுள்ளது. சனசம்மதம் அறிதற்கு வேண்டிய ஒழுங்குகள் முடிவாகும் வரையும் இந்தியப் படைகள் எப்படிக் காஷ்மீரத்தை விட்டுவிலகுமோ?

### இதுதான் சமயமா

ஹைதராபாத்தில் அரசியல் மாற்றம் ஏற்பட்ட இச்சமயத்தில் கிறீஸ்த பாதிரிமார் துரிதமடைந்து ஓடி உழக்கி வேட்டையாடுகிறாராமே. எத்தனையோ கிராமங்களை முற்றாகக் கிறிஸ்த ஊர்களாக்கிவிட்டாராம். அரசினரின் கொடுமையிலிருந்து தப்பவேண்டின் இதுதான் வழியென்று சனங்கட்குப் போதித்தே இப்படிச் செய்கின்றாராம். அரசியல் அமைதி ஏற்படாத இச்சமயத்தில் அடாத முறையில் கிறீஸ்த பாதிரிமார் நடந்துகொள்ளும்முறை பெரிதும் கண்டிக்கப்படவேண்டிய விஷயம். காய்ந்தமாடு கம்பில் விழுந்தது போல் இந்துக்களும் மகமதியரும் பிணக்குப்படக் கிறீஸ்த மத சார்பினர், தமது காரியத்தைப்பார்த்துச் செல்கின்றனர். இப்பாதிரிமார் எந்த நாட்டிற்றான் தமது சமயத்தை ஏற்ற முறையில் பரப்புகின்றனர்? பணத்தையும் ஒவ்வாத சாட்டுகளையும் உபயோகித்து இவ்விதமாகச் சமயத்தைப்பரப்பும் முறை இன்னும் நடப்பது மிக விசித்திரமாகின்றது.

### சென்னை மந்திரி சபை

சென்னை மாகாண மந்திரி சபை புதிதாக அமைக்கப்பெற்று ஒரு மாதமாகின்றது. அப்படியாகியும் இன்னும் மந்திரிமார் நியமனம் இன்னும் பூர்த்தியடையவில்லை. இங்கு அரசியலை நடத்தும் காங்கிரஸ் கட்சிக்குள் பலசிறுக் கட்சிகள் இருப்பதே இதற்குக் காரணம். முன்னிருந்த ஒற்றுமை சாங்கிரஸ் வாதிகட்கிடையில் இல்லாமற்போனது பெருந்துக்கமே. போட்டாபோட்டியும், எதிரிடையும், அபிப்பிராய பேதமும் துவேஷமும் ! இக்கட்சியினர்க்கிடையில் இருக்கும் வரைக்கும் அரசியல் இம்மாகாணத்திற சிறப்பாக நடப்பது எப்படி? இக்கட்சியில் பிளவுகள் ஏற்பட்டமையால் ஏற்றதகுதியும் ஆற்றலும் வாய்ந்தவர்கட்கு மந்திரிப்பதவி கிடையாது போகின்றது. அத்துடன் எத்தனையோ அவசிய விஷயங்கள் அரசினராற் செய்து முடிக்கவியலாது தடைப்படுகின்றன. கிழக்குப்பாஞ்சால மாகாணத்திலும் இவ்வித சங்கடங்கள் ஏற்பட்டுளதாக அறிகின்றோம். இந்திய சமட்டியிலுள்ள மற்றைய மாகாணங்களில் அரசாங்கங்கள் இப்படியாக தளப்படி அடையவில்லை. தலைவர்கள் மீது சுயநல வேட்கை தோன்றியதே இக்கெடுதியை வருவிக்கின்றனபோலும்.

# நெசவுத்தொழிலாளர் இன்னல்

யாழ்ப்பாணம் தெல்லிப்பழையைச் சேர்ந்த குரும்பசிட்டியில் வசிக்கும் நெசவுநிர்வாகியும் தொழிலாளியுமாகிய முருகேசு-பொன்னையா [வட இலங்கை நெசவாளர் சங்கக் காரியதரிசி] என்பவர் கொழும்பிலிருந்து 5-5-49ல் எழுதுவதாவது:

கைத்தறிப் புடவைகளை விற்பனை செய்வதில் ஏற்பட்ட கஷ்டங்களை விளக்கிப் பிரதம மந்திரியார், கைத்தொழில் மந்திரியார் ஆகியோருக்கும், கைத்தொழிற்பகுதிக்கும் கடந்த ஒருவருடகாலமாக விண்ணப்பஞ் செய்து வந்ததின்பயனாகச் சென்ற டிசம்பர் மாதத்தில் கைத்தொழில் மந்திரியாரிடமிருந்து: 1949-ம் ஆண்டு முதற்பகுதியில் 'உள்ளூர் கைத்தொழில் உற்பத்திச் சட்டம்' அரசாங்க சபையில் நிறைவேற்றப்படுமென்றும், அதில் நெசவுதொழில் முக்கிய அம்சமாக இருக்குமென்றும் பதில் வந்தது. அந்நாட்களிலேயே வெளிநாட்டுப் புடவைகளின் போட்டியினால் உள்ளூரில் நெய்த புடவைகளை விற்பனை செய்ய முடியாமலிருந்தது. மந்திரியாரின் பதிலை நம்பி நெசவாளர்களாகிய நாமனைவரும் மிகவும் கஷ்டப்பட்டுச் சீவியத்தை நடத்தி வந்தோம்.

'உள்ளூர் கைத்தொழில் உற்பத்திச் சட்டம்' பிரதிநிதிகள் சபையிற் சமர்ப்பிக்கப்பட்டது என்பதைப் பத்திரிகைகளிற் பார்த்தபின் கைத்தொழில் மந்திரியாருக்கு 1-4-49-ல் மேற்படி சட்டத்தைக் கூடிய கெதியில் நடைமுறையில் நடத்தினால் நெசவாளர்களுக்கும், வேலையில்லாமல் கஷ்டப்படுகின்றவர்களுக்கும் நன்மையுண்டாகுமென்று குறிப்பிட்டதுடன் எப்படி மேற்படி சட்டத்தை நடைமுறையில் நடத்தப் போகின்றீர்கள் என்பதை நாங்கள் அறியவிரும்புவதாகவும்வினவி ஓர் கடிதம் அனுப்பினேன். 18-4-49 வரை பதில் கிடைக்கவில்லை.

கைத்தொழிற்பகுதியினால் எனக்கும் மற்றைய தொழிற்சாலைகளுக்கும் செய்து தரும்படி சமர்ப்பிக்கப்பட்டவேலையின் கஷ்டநஷ்டங்களைப்பற்றித் தெளிவுபடுத்திக் கூறவும், அதனால் நியாயமான கூலிபெறவும் 11-4-49-ல் கொழும்பிலே உள்ள கைத்தொழிற் பகுதிக்குச் சென்று உதவி அதிகாரி திரு. அழகரத்தினம் அவர்களைச் சந்தித்து அரசாங்கம் செய்துதருமாறு கேட்கும் வேலையின் கஷ்டங்களை விபரமாகக் கூறினேன். அவர் தமக்கு மேற்படி விஷயம்பற்றித் தெரியாதென்று கூறி இன்னொருவருடன் பேசும்படி விட்டார். அவருக்குத் தமிழ் தெரியாது. எனக்கு ஆங்கிலமுந் தெரியாது; சிங்களமுந் தெரியாது. என்னமாதிரிச் சம்பாஷணை நடந்திருக்குமென்பது சொல்லத் தேவையில்லை. பின் அரசாங்கம் சமர்ப்பித்த வேலையின் மாதிரித் துணி ஒன்றைக் காட்டி விட்டுப் போய்விட்டார். உடனே திரு. அழகரத்தினம் அவர்கள் பேசி முடிந்துவிட்டதா என்று கேட்டுவிட்டுப் போனால் நல்லது என்றார். நானும் போய்விட்டேன்.

பின்னர் (12-4-49) கைத்தொழில் மந்திரியாரின் காரியாலயத்துக்குச் சென்று நெசவு சம்பந்தமான விஷயங்களை விபரமாகப் பேசச் சந்தர்ப்பம் கிடைக்காதென்று எண்ணி வீட்டிலே போய்ப் பேசுவதற்கு உத்தரவு கேட்டேன். அவர் இங்கே இல்லை என்றும் யாழ்ப்பாணத்தில் நிற்பதாகவும் விடை கிடைத்தது. அன்றே யாழப்பாணம் புறப்பட்டேன். இம் முயற்சிக்காக என்னுடையசொந்தப் பணமாக 30ரூபா செலவானது. நெசவு தொழிலை ஆதாரமாகக்கொண்டு சீவியம் நடத்திவந்த எனக்கும், மற்றைய நெசவாளர்களுக்கும் அதன் வீழ்ச்சியாற் பசியே தாண்டவமாடத் தொடங்கியது.

இம்மாதிரியான பசியுடன் பிரதம மந்திரியார் முன் அல்லது கைத்தொழில் மந்திரியார் முன் இருந்து உயிரைத் தியாகம் செய்தால் என்ன என்ற உணர்ச்சியால் தூண்டப்பட்டேன். புனிதமான தொழிலை அழியாது பாதுகாக்க உயிர்த்தியாகம் செய்யத் துணிந்தேன். கையிற் பணமில்லாமற் கால் நடையாகவே கொழும்பு நோக்கி 19-4-49 செவ்வாய்க் கிழமை பிற்பகல் 2 மணிக்குப் புறப்பட்டேன். வழிநெடுகே வசித்த பொதுமக்களின் ஆதரவுடன் நீண்ட தூரத்தைச் சிரமமின்றிக் கடந்து இன்று காலை 9 மணிக்கு இங்கு வந்து சேர்ந்தேன்.

கைத்தொழில் மந்திரியாரைக் கண்டு பொது ஜனங்களுக்குப் பாதகமில்லாத முறையில் நெசவு தொழில் அபிவிருத்தி சம்பந்தமான சகல விஷயங்களையும் விபரமாகக் கூறவுடன் அழிந்துகொண்டே போகும் நெசவு தொழிலுக்கு உடனே ஆதரவுதரவேண்டுமெனவும் கேட்கப்படும். தகுந்த முறையில் விடை கிடைக்காவிடில் பிரதமமந்திரியார் அவர்களைச் சந்தித்து அவர்களின் ஆதரவையும் வேண்டப்படும். அவசியமெனத் தோன்றுமிடத்து சாத்வீகமுறையில் நடவடிக்கை கையாளப்படும்.

இதை நெசவாளன், பிரஜை என்ற முறையில் அறிவிக்கின்றேன்.


## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. 4743**

நல்லூர்

இராசநாயகம் கைம்பெண் இராசலட்சுமி

வழக்காளி

வண்ணார்பண்ணை கிழக்கு,
கலட்டி அம்மன் கோவிலடி என். சின்னத்தம்பி கனகசபாபதி தானாகவும் தனது பெண் காலஞ்சென்ற மகேஸ்வரியின் ஆஸ்திக்கு பிரதிகாரியஸ்தராகவும்.

எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் 4743-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1949-ம் ஆண்டு ஜுன் (ஆனி) மாதம் 2-ந் திகதி (2-6-49) வியாழக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

**தீர்வைத் தொகை:**—முதல் வட்டி ரூபாய் 766-67ம் இதில் ரூபாய் 600-00க்கு 26-3-48 திகதி தொடக்கம் 11-10-48 திகதி வரைக்கும் 100-க்கு 10 வீத வட்டியும், பின் திகதி தொடக்கம் முழுத் தொகைக்கும் இறுபடும்வரைக்கும் 100-க்கு 5 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபாய் 160-87 சதம்.

### காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி நல்லூர்க் கோவிற்பற்று திருநெல்வேலியிறை "வடலித் தோட்டம்" நிலப்பரப்பு 1-ம் குளி $13\frac{1}{4}$ ம் இதில் மேற்கே நிந்தமாக நிலப்பரப்பு ஒன்று (1-ம்) குளி $4\frac{1}{4}$ ம் வீடும் பயிர்களும் கிணறும். எல்லை: கிழக்கு, எம். சின்னையாவுக்கும் பெண் செல்லம்மாவுக்குமுரிய இதன் மிகுதி ஆதனம். வடக்கு, சுப்பிரமணியம் மயில்வாகனத்திற்கும் பங்காளருக்கு முரிய ஆதனம். மேற்கு றோட்டு. தெற்கு, அரையப்பா கைம்பெண் முத்துப்பிள்ளைக் குரிய ஆதனமும் ஒழுங்கையும். இதடங்கலும் ஆனால் குறித்த கிணற்றில் வடக்குக் காணிக்குரிய அரைவாசிப் பங்கும் வழிவாய்க்கால் உரித்தும். தெற்கே, தங்கம்மாவின் பிள்ளைகளுக்கும் அரையப்பா கைம்பெண் முத்துப்பிள்ளைக்குமுரிய காணிக்குக் குறித்த கிணற்றில் பங்கும் வழிவாய்க்கால் உரித்தும் இன்னும் இக் காணியில் மிகுதியான 9 குளிக்கும் இக்காணியின் தெற்கெல்லையருகாகப் போக்குவரவு செய்யும் பாதையுரித்தும்.

சின்னத்தம்பி-சங்கரப்பிள்ளை
Commissioner & Licensed Auctioneer

தெல்லிப்பழை,
17.4.1949 [3674]



## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. 4984**

தெல்லிப்பழை மேற்கு,
சின்னப்பா நடராசா கைம்பெண் பூமலர்:

வழக்காளி

ஏழாலை
1. சின்னத்தம்பி கந்தையா
2. அன்னம்மா

எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் 4984-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் துண்டுக் காணி 1949-ம் ஆண்டு ஜுன் (ஆனி) மாதம் 1-ந் திகதி (1-6-49) புதன்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

**தீர்வைத் தொகை:**—முதல் வட்டி ரூபாய் 516-00 ம், இதில் ரூபாய் 200-00-க்கு 1-11-48 திகதி தொடக்கம் 31-1-49 திகதி வரைக்கும் 100-க்கு 6 வீத வட்டியும், பின் திகதி தொடக்கம் முழுத் தொகைக்கும் இறுபடும்வரைக்கும் 100-க்கு 5 வீத வட்டியும், கோட்டுச்செலவும்.

### காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி மல்லாகக் கோவிற்பற்று ஏழாலை யிறை "எதனை" நிலப்பரப்பு முப்பது (30) கிணறுகளும் வீடுகளும் செய்பயிர் வான்பயிர்களும் பனைகளும் எல்லை கிழக்கும் மேற்கும் றோட்டு வடக்கு, செல்லப்பா பெண் சின்னம்மாவுக்கும் கனகர் பெண் நாகமுத்துவுக்கும் சிவகுருபெண் கண்மணிக்கு முரிய ஆதனங்கள். தெற்கு, செல்லப்பா இராசையாவுக்கும் செல்லப்பா சுப்பிரமணியத்திற்கு முரிய ஆதனங்கள். இதிற் சொரியலாய் காணியிலும் பயிர்களிலும் பனைகளிலும் ஆறில் ஒன்றும், தென்கிழக்கே நிலப்பரப்பு ஐந்தில் இருக்கும் கிணறும் வீடுகளும் குசினியும் நீக்கதமாகவும் ஆனால் குறித்த கிணற்றில் இராசையா பெண் இராசேஸ்வரிக்குரிய பங்கும் வழிவாய்க்கால் பாவிப்புரித்தும் புறநீங்கல்

சின்னத்தம்பி - சங்கரப்பிள்ளை
Commissioner & Licensed Auctioneer

தெல்லிப்பழை
20-4-49 [3673]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரட்டைத் தட்டு 'பஸ்'

## கொழும்பிலே கோர விபத்து

கொழும்பைச் சேர்ந்த தெஹிவளையிற் சென்ற ஞாயிற்றுக்கிழமை இரவு கோரமான பஸ் விபத்து உண்டாயிற்று. இரட்டைத்தட்டு 'மோட்டார் பஸ்' ஒன்று தெஹிவளைச் சந்தியிலுள்ள நடைபாதை மீது ஏறிச்சென்று ஒரு மாடிக் கட்டடத்துடன் மோதியது. இதனல் அங்கு நின்றவர்களில் நால்வர் விபத்து நடந்த இடத்தில் இறந்தனர். ஒருவர் கொழும்பு வைத்திய சாலையில் உயிர் நீத்தார். காயமடைந்த பதினைந்து பேர் வைத்திய சாலையிற் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

விபத்துக்குள்ளான பஸ் வண்டியிலிருந்த பிரயாணிகள் மிகுந்த அதிர்ச்சியடைந்தனரேயன்றி எவரும் பெருங் காயமடைய வில்லை.

இறந்தவர்களில் ஒருவர் ரத்மலானைப் புகையிரதப் பகுதியிற் கடமையாற்றிய வி. முருகம்பிள்ளையாவர். மற்றவர் இவருடைய மருகரான அருணாசலம் நாதன் ஆவார். இவர்கள் இருவரும் யாழ்ப்பாணத்து வட்டுக்கோட்டையைச் சேர்ந்தவர்கள். அருணாசலம் நாதன் என்ற வாலிபனுக்கு 19 வயதெனத் தெரிகின்றது.

குறித்த இரட்டைத் தட்டு பஸ் கொழும்புக் கோட்டையை விட்டுக் கல்கிசையை நோக்கிச் சென்றது. தெஹிவளையிலுள்ள பஸ் தங்கும் இடத்தை அணுகும்போது வெடிச் சப்தம் போல ஒரு சப்தம் கேட்டது. முன்பக்கத்துச் சக்கரம் வெடித்துப் போகவே பஸ் இருட்டில் இடது பக்கத்தை நோக்கிச் சென்று நடைபாதையில் ஏறியது. கட்டடத்தின் மீது பஸ் மோதியதால் அங்கு வரிசையாக நின்றவர்கள் ஓட முடியாதபடியாற் பிரமாண்டமான அந்த பஸ்ஸின்கீழ் அகப்பட்டனர்.

அங்கு திரண்டுநின்ற ஏனைய மக்கள் கயிறுகளைக் கட்டி மிகக் கஷ்டப்பட்டு பஸ் வண்டியை அகற்றினர்.

அரசினர் இப்போது இக் கோர விபத்துச் சம்பந்தமான விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திரிக் கோட்டு 3322ம் இலக்க வழக்கின் தீர்வைப்படி குறித்த கோட்டின் 1949ம் ஆண்டு சித்திரை மீ 22ந்திகதியைக் கொண்ட கட்டளைப்படி இதன் கீழ் விவரிக்கப்பட்டிருக்கும் ஆதனங்கள் 1949ம் ஆண்டு வைகாசிமாதம் 28ந் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4மணி தொடக்கம் அவ்வவ்வாதனமிடமாகநின்று கொமிஷனர் வ. மு. கந்தசாமியாகிய என்னல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வல்வெட்டித்துறை

**வயிரமுத்து -சிவப்பிரகாசம்**
வழக்காளி

உடுப்பிட்டி

1. வடிவேலு.பொன்னுத்துரை
2. பெண் இலட்சுமிப்பிள்ளை

எதிரிகள்

**தீர்வைத்தொகை:** ரூபாய் 2808/66-ம் 5-11-48 தொடக்கம் 20-1-49 வரை ரூபாய் 2500/-க்கு 10 வீதவட்டியும் பின் முழுதொகைக்கும் இறுக்கப்படும்வரை 100 க்கு 5 வீத வட்டியும் கோட்டுச் செலவும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திரிக் வடமராட்சிப் பகுதி உடுப்பிட்டிக்கோயிற்பற்று உடுப்பிட்டி கருன்தகேணி நிலப்பரப்பு $43\frac{3}{4}$. ஷை தோட்டம் 5. இந்த அடைகளில் ஆட்சிப்படி இருபத்திநாலில் ஏழுபங்கில் ஆறிலொருபங்கில் அரைவாசியும் பதினறில் ஒருபங்கில் அரைவாசிக்கும் நிலப்பரப்பு 2 குளி $14\frac{5}{12}$ எல்லைகிழக்கு வல்லிபுரம் அம்மிணிக்குரியவாதனம். வடக்கு தண்ணீர்வாய்க்கால். மேற்கு குமாருசின்னையாவுக்கும் மறுபேருக்குமுடையவாதனம். தெற்கு முருகுப்பிள்ளை கந்தையாவுக்கும் மறுபேருக்குமுடையவாதனம். இவ்வெல்லைக்குட்பட்டவை அடங்கலில் சொரியலாய் நாலில் மூன்று பங்கும் இந்த முழுக் காணிக்குள் வடகிழக்குப்புறமாயிருக்கும் கிணற்றுப்பங்கும் வழிவாய்க்கால் உரித்தும்.

2 ஷை இறை கருன்தகேணி நிலப்பரப்பு 36 குளி $15\frac{25}{32}$ இதில் யாழ்ப்பாணம் டிஸ்திரிக்கோட்டில் 6926ம் இலக்கப்பிரிவிடல் வழக்கில் கடைசித் தீர்வையில் அணைக்கப்பட்ட படத்தின்படி 4ம் தண்டுக்கு நிலப்பரப்பு 5 குளி $16\frac{1}{2}$. எல்லை கிழக்கு கணபதி பெண் சிவகாமனுக்குடையவாதனம். வடக்கும் தெற்கும் ஒழுங்கை. மேற்கு முருகுப்பிள்ளை பெண் சீதவனுக்குரியவாதனம. இவ்வெல்லைக்குட்பட்டவை அடங்கலில் சொரியலாய் அரைவாசியில் நாலில் மூன்றுபங்கு.

3. மேற்கூறிய 2ம் ஆதனமாக விவரிக்கப்பட்டிருக்கும் ஆதனத்தில் யாழ்ப்பாண டிஸ்திரிக்கோட்டில் 6926ம் இலக்க பிரிவிடுதல் வழக்கில் கடைசித் தீர்வையில் அணைக்கப்பட்டபடத்தின்படி 23ம் தண்டுக்கு குளி $13\frac{5}{32}$. எல்லை கிழக்கும் மேற்கும் கணபதிபெண் சிவகாமனுக்குடையவாதனம். வடக்கு ஒழுங்கை. தெற்கு கணபதி பெண் சிவகாமனுக்கும் மறுபேருக்குமுடையவதானம். இவ்வெல்லைக்குட்பட்ட நிலம் தென்னை கிணறும் மற்றும் சேர்ந்தவைகளும். குறித்த படத்தில் XY என்று அடையாளம் பண்ணப்பட்ட கிணற்றுக்கு போக்குவரவு செய்வதற்காக விடப்பட்ட வழிவாய்க்காலிலும் சொரியலாய் இருபதில் மூன்று பங்கில் நாலில் மூன்று பங்கு.

4. ஷை இறை குஞ்சிசீமா கட்டையன் தறை மணலும் மணலுக்கு தெற்கும் நிலப்பரப்பு 7 குளி 10ம் அதைச்சேர்ந்தவைகளும் பருத்தித்துறை டிஸ்திரிக் கோட்டில் 2501 இலக்கப் பிரிவிடல் வழக்கில் உலாந்தா மேஸ்தர் V. சீவரத்தினம் அவர்களால் 1947ம் ஆ கார்த்திகை மீ 16-ந்வ 511ம இலக்கத்தில் தயாரிக்கப்பட்ட படத்தின் 3ம் தண்டில் A. B. C. என்று அடையாளம் பண்ணப்பட்ட வீடுகளும், எல்லை கிழக்கு சின்னத்துரை மயில்வாகனத்திற்கும் மறுபேருக்குமுடையவாதனமும் ஒழுங்கையும். வடக்கு குறித்தபடத்தில் 4ம தண்டுக்காணி. மேற்கு புரியான் வெள்ளையன் பெண் அளகிக்குரிய குறித்தபடத்தின் 2ம் தண்டுக்காணி. தெற்கு சின்னர் சின்னத்துரைக்கும் மறுபேருக்கு முடையவாதனம் இவ்வெல்லைக்குட்பட்டவை அடங்கலும் குறித்த படத்தில் $9\frac{6}{32}$ குளி கொண்ட 4-ம் தண்டில் இதற்குரிய பங்கும்.

**V. M. Kandasamy**
Commissioner of Sales.

வல்வெட்டித்துறை
26-4-49 [3672]

---

## வயாவிளான்-பலாலி வாலிபர் சங்கம்

### 27-வது ஆண்டு நிறைவுவிழா

வயாவிளான்—பலாலி வாலிபர் சங்க 27 வது ஆண்டுவிழா சமீபத்தில் நடைபெற்றது. தலைமை வகித்த திரு. ரீ. பாலச்சந்திரன் (வலி வடக்குக் காரியாதிகாரி) அவர்களும், பிரபல வழக்கறிஞர் திரு.ஆர்.என்.சிவப்பிரகாசம் அவர்களும், திரு. ஈ. வி. பொன்னுத்துரை (வலி—வடக்கு கமத்தொழில் அதிகாரி) அவர்களும் பின்வருமாறு பேசியுள்ளனர்.

முன்னுரையில் தலைவர் கூறியதாவது: "இச் சங்கத்தின் 27-வது ஆண்டு பூர்த்தியானமையையிட்டு எனது வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன். இன்று நமது நாட்டுக்குச் செய்யும் சேவை சுதேசிப் பொருள்களைப் பெற்று அத்தொழில்களை ஆதரித்தலேயாகும். நெசவுத் தொழிலை நாம் ஆதரிப்பதாயின் நம் நாட்டில் நெய்த துணிகளை வாங்கவேண்டும். யாழ்ப்பாணத்திற் பனைமரங்களின் பேருதவியாற் பஞ்சம் மக்களை அதிகமாகப் பாதிக்கமாட்டாது. அடுத்தபடியாகக் கிருஷிகத்தில் ஆர்வமுண்டாக்க வேண்டும், சங்கங்களும் அவற்றிற்கு ஆவனபுரிவது அவசியம். யாழ்ப்பாணத்தில் இன்று ஏறக்குறைய 3000 ஏக்கர் நிலம் கற் பூமியாக இருக்கிறது. அதைத் திருத்தி மக்களுக்கு உதவி செய்ய இவை போன்ற சங்கங்கள் அவசியமானது.

திரு. பொன்னுத்துரை அவர்கள் கூறியதாவது: "இன்று எங்கள் நாட்டுப் பெருளாதாரம் நாளுக்குநாள் குறைந்து கொண்டே வருகின்றது. அத்தோடு சனத்தொகை கூடிவருகின்றது. நாம் எப்பொழுதும் பிறநாட்டாரில் எமது தேவைகளுக்கும் வியாபாரத்திற்கும் தங்கியிருக்கலாகாது. யாழ்ப்பாண மக்கள் பெரும்பான்மையாக மலையாளப் புகையிலையை எதிர்பார்க்க முடியாது. வெங்காயம், தூத்துக்குடி மிளகாய் முதலியவற்றை புதிய முறையிற்பயிரிடவேண்டும். அவற்றிற் கூடிய பலன் கிடைக்கும். அதோடு கோவா, முள்ளங்கி போன்ற மேல்நாட்டுக் கறி வகைகளையும் பயிர் செய்ய வேண்டும். ஆடு மாடுகள் கோழி வளர்த்தலில் நாம் கூடிய சிரத்தை எடுக்க வேண்டும்.

பின்பு வழக்கறிஞர் திரு. சிவப்பிரகாசம் அவர்கள் கூறியதாவது: "நம் பெரியோர் நமது கிராமத்தை எப்படிச் சீரும் சிறப்பாகவும் வைத்திருந்தனரோ, அதுபோன்று நாமும் திருத்தி அமைத்தலே உண்மையான கிராம சிரமைப்பாகும். காந்தியடிகள் தமது உடல், பொருள், ஆவி மூன்றையும் நாட்டின் நன்மைக்கு அர்ப்பணம் செய்தனர். அம் மகானுடைய போதனையையே நாம் கைக்கொள்ள வேண்டும.

நமது நாட்டின் இரு மூச்சுப்பைகளாவன கிருஷிகமும், கைத்தொழிலுமே. பிரித்தானிய சாம்ராச்சியத்தை ஆட்டிவைத்த கைத்தறி எத்தகைப் பெருமை வாய்ந்தது.

இவை இரண்டினுலுமே நாம் நமது கிராமத்தைச் சீராக்கலாம். அணுக்குண்டின் வித்தையை அறிந்துள்ள போராசிரியர் அயின்ஸ்ரீனும் கைத்தறியின் மகத்துவத்தையும் தெரிவித்துள்ளார். கிராமப் புனருத்தாரணத்துக்கே மக்களின் ஒத்துழைப்பு வேண்டற்பாலது. சங்கங்களை இழிவுபடுத்தும் மக்களே, கிராமத்தையும் நாட்டையும் பங்கப்படுத்துபவர்களாவர். இன்று நாம் கிராமத்தைத் திருத்தியமைப்பதற்கு மூன்று விஷயங்களைச் செய்ய வேண்டும். கிருஷிகத்தை வளர்த்தல், கைத்தொழிலை ஆதரித்தல் ஒற்றுமையை மக்களிடையே நிலை நாட்டுதல்,

[illegible]
[illegible] செய்யப்பட்டனர். —கடிதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

---

## விபுலாநந்தர் மணிமண்டபம்

### அக்கரைப்பற்றில் திறப்புவிழா

ஈழநாட்டின் அருந்தவப் புதல்வரான விபுலானந்த அடிகளாரின் ஞாபகார்த்தமாக அக்கரைப்பற்று ஸ்ரீராமகிருஷ்ண சங்க வித்தியாலயத்தில் ஒரு மணி மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது.

அடிகளால் துறவுபூண்ட சித்திரா பௌர்ணமி (12-5-49) அன்று பிற்பகல் 4-30 மணிக்கு இஞ் ஞாபக மண்டபம் திறந்து வைக்கப்படும்.

கோயமுத்தூர் ஸ்ரீ ராமகிருஷ்ண சங்க வித்தியாலயத்தின் கௌரவ செயலாளர் சுவாமி நிஷ்காமாநந்தர் அவர்கள் மேற்படி விழாவுக்குத் தலைமை வகித்து மணி மண்டபத்தைத் திறந்து வைப்பார்.

திரு. வி. நல்லையா எம். பி. அவர்கள் - சுகாதார ஸ்தலஸ்தாபன காரியதரிசி, ஜனப். எம். எம். இபுராஹிம் எம். பி. அவர்கள் - பொத்துவில் தொகுதி, திரு. எஸ். சிவஞானம் அவர்கள் இறையதிகாரி செங்கலடி, ஸ்ரீமதி கமலபூஷணி - திருநாவுக்கரசு அவர்கள் மட்டக்களப்பு, பண்டிதர் ஐ. சரவணமுத்து அவர்கள் திருகோணமலை, வித்வான் ஏ. பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் மண்டூர், திரு. கே. சணபதிப்பிள்ளை அவர்கள் காரைதீவு ஆதியோர்சொற்பொழிவாற்றினர்.

---

## Order Nisi

IN THE DISTRICT COURT OF JAFFNA

Testamentary Jurisdiction } **No. 943**

In the matter of the intestate estate and effect of the late Ratnam wife of Samuel Chellappah Sinnathurai of Urumpiray Jaffna.

*Deceased.*

Samuel Chellappah Sinnathurai of Urumpiray presently of Kuala-Lumpur in Malaya by his attorney Samuel Chellappah Karalapillai of Urumpiray.

*Petitioner*

*Vs.*

1. Augusta Sironmany daughter of Sinnathurai of Urumpiray
2. Sinnathurai Jeyasingam of Urumpiray presently of Colombo
3. Ponmani daughter of Sinnathurai of Urumpiray
4. Sinnathurai Karalasingam of Urumpiray presently of Colombo
5. Grace Mahulmani daughter of Sinnathurai of Urumpiray presently of Kuala Lumpur
6. Karalar Isac Namasivayam of Thirunelvely

*Respondents*

This matter coming on for disposal before L. W. De Silva Esquire District Judge, Jaffna on the 24th day of September 1948 in the presence of Mr. A. Subramaniam, Proctor on the part of the Petitioner and the petition and affidavit of the Petitioner having been read:

It is ordered that the 6th respondent be appointed Guardian ad Litem over the minors the 1st to 5th respondents abovenamed and the Petitioner be appointed as administrator and Letters of Administration be issued to him accordingly as the lawful husband of the deceased, unless the respondents or any other persons shall appear before this Court on the 22nd day of October 1948 and show sufficient cause to the satisfaction of this Court to the contrary.

This 24th day of September 1948

(Sgd.) **R. R. Selvadurai**
District Judge

22-10-48
Time to show cause extended to 26-11-48
Itd. R. R. S.
D. J.

26-11-48
Time to show cause extended to 9th May 1949
Itd. R. R. S.
D. J.

[3669—ii]

---

## திருக்கேதீஸ்வர ஆலயத் திருப்பணிச் சபை

திருக்கேதீஸ்வர ஆலயத்தைப் புதுக்கி அமைக்கும் இயக்கத்தினை ஆதரித்துச் சமீபத்தில் கண்டியில் கூட்டங்கள் கூடப்பட்டன. திருக்கேதீஸ்வர ஆலயத் திருப்பணிச் சபையின் காரிய நிர்வாக சபைப் பிரதிநிதிகள் சைவ 'ஓவசியர்'மாரை கிங்ஸ் வூட் கல்லூரி மண்டபத்தில் சந்தித்தனர். அகில இலங்கை 'ஓவசியர்' சங்கத் தலைவர் ஸ்ரீ வி. கல்யாணசுந்தரமவர்கள் கூட்டத்திற்குத் தலைமை வகித்தனர். திருவாளர்கள் க. இராமச்சந்திரனவர்கள், வி. துரையப்பா அவர்கள், வ. க. செல்லப்பாஅவர்கள், சி சரவணமுத்துஅவர்கள், சு. சுப்பிரமணியமவர்கள் முதலியோர் சொற்பொழிவுகள் நிகழ்த்தினர். தலைவரும் திருவாளர்கள் கே. ஏ. வைத்திலிங்கமவர்கள், கே. வேலுப்பிள்ளையவர்கள் ஆகியோரும் குறிப்புரைகள் கூறினர்.

அதே தினத்தில் ஆலயத் திருப்பணிச் சபையின் பிரதிநிதிகள் கண்டியிலுள்ள சைவப் பிரமுகர்களைச் சைவ மகா மண்டபத்திற் சந்தித்தனர். இராசாவாசல் முதலியார் கா. கனகநாயகமவர்கள் கூட்டத்திற்குத் தலைமை வகித்தனர். தலைவரும் திருவாளர்கள் எம். அம்பலவாணரவர்கள், எஸ். கந்தையா அவர்கள், ரீ. கைலாசபிள்ளை யவர்கள், எம். கனகராசா அவர்கள், எம். இராசகுணமவர்கள் ஆதியோரும் கூட்டத்திற் சொற்பொழிவுகள் நிகழ்த்தினர். பணம் சேகரிப்பதற்கும், இத் திருப்பணி வேலையில் உதவி புரிவதற்கும் இராசாவாசல் முதலியார் கனகநாயகமவர்களைத் தலைவராகக் கொண்ட ஓர் உபகாரிய சபையினர் நியமிக்கப்பட்டனர். —கடிதம்.

---

## Order Nisi

IN THE DISTRICT COURT OF JAFFNA

Testamentary Jurisdiction } **No. 940**

In the matter of the Intestate and aspects of the late Kanapathippillai Somasunderam of Urumpirai, Jaffna

*Deceased*

Mankalakiriammah widow of Subramaniam of Urumpirai

*Vs.* *Petitioner*

Minors:

1. Somasunderam Arunthavanathan of Chavakachcheri
2. Somasunderam Suntharalingam of Urumpirai
3. Somasunderam Rajalingam of Urumpirai
4. Mahaindranee daughter of Somasunderam of Urumpirai
5. Somasunderam Kunanathan of Urumpirai
6. Somasunderam Sathianathan of Urumpirai
7. Karthigesu Sinnapoo of Chavakachcheri and
8. Sabapathy Sinnathurai of Urumpiray *Respondents*

This matter coming on for Disposal before I. W. De Silva Esquire, District Judge, Jaffna. on the 13th day of September, 1948, in the presence of Mr. A. Subramaniam Proctor on the part of the petitioner and the Petition and affidavit of the Petitioner having been read:—

It is ordered that the abovenamed 7th respondent be appointed Guardian ad Litem over the minors the 1st respondent abovenamed and 8th respondent be appointed the guardian ad litem over the minors the 2nd-6th respondents above named and that letters of Administration to the estate of the abovenamed deceased be issued to the Petitioner as the lawful widow of the said deceased unless the above-named respondents or any other persons appear before this Court on the 18th day of October, 1948. and show sufficient cause to the satisfaction of this Court to the contrary. It is further ordered that the respondents do produce the minors on the said date, 13th September 1948.

(Sgd.) **R. R. Selvadurai**
District Judge

18-10-48
Time extended to 9th May 1949
ltd. R. R. S.
D. J.

[3670-ii]




மருமக்களே!

வணக்கம். மருமகள் லோ. மாகிறற், (மே.16.) எழுதிய **தாவரம்** என்னும் சிறு கட்டுரையை இவ்வாரம் உங்களுக்குத் தருகிறேன் தாவரத்தைப்பற்றிய குறிப்புக்களை எவ்வளவு நுணுக்கமாக ஆராய்ந்து எழுதியிருக்கிறார் என்பது கவனிக்கத்தக்கது. வாசியுங்கள்:

"கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டவைகளில் புல், பூண்டு, செடி, கொடி விருட்சம் முதலியவை தாவரம் அல்லது நிலையியற் பொருள் என்று அழைக்கப்படும். இவை ஓர் இடத்தில் இருந்து இன்னோர் இடத்திற்கு நகராதிருப்பதால் தான் நிலையியற் பொருள் என்று அழைப்பார்கள்.

தாவரங்களுள் நான்கு முக்கிய அங்கங்கள் உண்டு. அவைகள், வேர், தண்டு, இலை, கிளை என்பனவாம். இவை வேரின் மூலம் இருந்து தமக்கு உணவைப் பெற்றுக்கொள்கின்றன. நாம் எப்படி மூக்கினல் சுவாசம் செய்கிறோமோ, அப்படியே தாவரங்களும் இலைகளினல் சுவாசம் விடுகின்றன. சீவராசிகள் மூச்சு விடும்போது சுற்றிலுமுள்ள காற்றுக் கெட்டுப் போகின்றன. இவ்வசுத்த காற்றை இவைகள் உட்கொண்டு சுத்த ஆகாயமாக்கி விடுகின்றன. பகலில் இவைகள் நல்லகாற்றை வெளியே விட்டு அசுத்தமான காற்றை உட்கொள்கின்றன. இரவில் அசுத்தமான காற்றை வெளியே விட்டு, சுத்தமான காற்றை உட்கொள்கின்றன. இதனல் தான் மக்கள் அவேவரும் வீட்டின் முற்றங்களில் பல இனமான தாவரங்களை உண்டாக்குகின்றார்கள். தாவரம் இவ்வுலகில் உள்ள எண்ணடங்கா மக்களுக்குப் பல விதத்தாலும் உபயோகமாகின்றன. இத்தாவரங்கள் உலகில் இல்லாவிட்டால் நாங்கள் இவ்வுலகத்தில் வாழ்வது மிகவும் கடினமான காரியம்.

தாவரம் வளருதற்கு தண்ணீர் உள்ள பிரதேசமும், மண்ணில் உள்ள எருவும், சூரிய வெப்பமும் மிகவும் அத்தியாவசியமானவை. இவை இல்லாவிட்டால் மரங்கள் உண்டாவது மிகவும் கஷ்டம். வனந்தரமான இடங்களில் இவைகள் வளர்வது மிகவும் அரிது.

தாவரங்களில் உள்ள ஒவ்வொரு இனமும் எங்களுக்கு ஒவ்வொரு பலனைத் தருகின்றன. உதாரணமாகப் புல் இனத்தை எடுத்துப் பார்ப்போம். கோரை, மூங்கில், கரும்பு, நெல், கோதுமை, அறுகு இவைகள் யாவும் புல் இனத்தையே சேர்ந்தவை. இவைகளை உண்டாக்காமல் இருந்தால் நாம் சாப்பிடும் உணவு எப்படி எங்களுக்கு உண்டாகும்? மூங்கிலை எடுத்துக் கொள்வோம். மூங்கிற் பாய், மூங்கிற் கூடை, தட்டு, தட்டி, மேசை, நாற்காலி முதலியன எங்களுக்கு எவ்வளவு உபயோகமானவை. சிறு மூங்கிற் குழல் புல்லாங்குழல் என்ற சிறப்புப்பெயரைப் பெற்று வித்துவான் கையில் சேர்ந்து எத்தனை பணம் சம்பாதிக்கிறது. இதன் உதவியினல் வித்துவான் எவ்வளவு பெருமையையும் புகழையும் அடைகிருன். பெரிய விருட்சங்கள் வளர்ந்து தெரு ஓரங்களில் நிற்பதினல் கணக்கற்ற மக்கள் இளைப்பாறுகிறார்கள். வழிப்போக்கர்களுக்கு ஆறுதல் அளிக்கும் இடம் தாவரம் உள்ள இடங்களே. ஆகையால் தாவரம் மக்களுக்கு மிகவும் உபயோகமாய் விளங்குகின்றது."

மருமக்களே, இவ்வகையான சிறு கட்டுரைகளை எழுதியனுப்பினல் மற்றும் மருமக்களுக்கு எவ்வளவு பிரயோசனமாக இருக்குமென்பதைக் கொஞ்சம் சிந்தியுங்கள்.

வணக்கம்.

கேசரிமாமா

## தெரிந்ததா ?

1. வேம்பு, நாவல், இலுப்பை எம்மாதங்களிற் பூக்கின்றன?
2. உலகிற் பழைய சிவன்கோயில் எங்கிருக்கிறது ?
3. ஆதியில் பாரதம் யாரால் செய்யப்பட்டது ?
4. மிருங்கலை மலையின் விசேடமென்ன ?
5. முடிக்குரிய அப்புக்காத்து என்றால் என்ன ?
6. விவாக காலத்தில் தம்பதிகளுக்குக் காட்டப்படும் நட்சத்திரம் எது? எதற்காகக் காட்டப்படுகின்றது?

### பதில்

1. வைகாசி, ஆனி.
2. அமெரிக்காவில் கொலறடோநதிப் பீட பூமியில்.
3. வியாசரால்.
4. தேவநம்பிய தீசன், இங்கே மிருகதுவால் புத்த சமயத்துக்குத் திருப்பப்பட்டான்.
5. அரசினர் கட்சிக்குப் பேசும் அப்புக்காத்து.
6. அருந்ததி. அருந்ததி போன்று பெண் கற்புடையவளாய் இருக்க வேண்டுமென்று.

### மருமக்கள்

மே.271. கந்[illegible] ளிங்கம், J. S. C. யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை

## மாமா பதில்

**லோ. ஜேம்ஸ், மே.216:** 'போட்டோ'ப் படங்கள் பிரசுரிப்பது இப்பொழுதுமுடிந்த காரியமில்லை. என்றாலும் உமது புகைப்படத்தை எனக்கனுப்பிவையும். பேனநண்பர்களைப்பற்றி யோசித்துத்தான் எழுதவேண்டும், மருமகனே!

**வி. சுப்பிரமணியம், மே.80:** மருமகனே கடிதம் எழுதும் பொழுது உமது இலக்கத்தையும் குறித்து எழுதவேண்டும். உமது கட்டுரை சென்ற வாரம் பிரசுரம் பெற்றிருக்கிறதே.

**இ. பேரின்பநாயகம், மே.222.** எல்லாக் கஷ்டங்களையும் தீர்ப்பதற்கு நீர் ஒரு சந்தாதாரனைச் சேர்த்துவிட்டாலென்ன? வேறு பாலர் பகுதிகளிற் சேருவதில் எனக்கொரு ஆட்சேபமுமில்லை.

**தி. பஞ்சாட்சரம், மே.95:** நீர் செய்த பிழையை மன்னித்துவிட்டேன். இனிமேல் அப்படி நடவாது பார்த்துக் கொள்க. இலக்கம் குறிப்பிடவில்லையே!

**ச. திரவியராஜா, கி.156:** 'குதிரையின் சுயசரிதை' கிடைத்தது.

**ச. சத்தியவதி, மே.122:** 'கைக்கடிகாரத்தின் சுயசரிதம்' கிடைத்தது.

**எம்.எஸ். அகமது, மே.263:** நீர் அனுப்பியிருந்த நாடகத்தைத் திருத்தி ஒரு கிழமையில் அனுப்பி வைப்பேன் 'அருணோதயம்' கிடைத்தது.

**க. அருளிங்கம், மே.271:** உம்மை என் மருமகனாக்கியிருக்கிறேன்.

### பிறந்ததின வாழ்த்துக்கள்

8-5-49 — 14-5-49

•

மே.50. சு. சரஸ்வதி;
மே.65. ந. நல்லலிங்கம்
மே.71. வி. கந்தவனம்;
கி.81. சி. கஜமுகதேவன்;
மே.106. தி. நடராஜா;
மே.219. சீ. சாய்ம்;
மே.260. வ. சுந்தரலிங்கம்.

•

மேற்குறித்த எனது மருமக்கள் இன்றுபோல் இன்னும் பல்லாண்டு வாழ்வாராக.

## சும்மா சிரியுங்கள்

**இ. பேரின்பநாயகம் மே.222**

**ஆசிரியர்:** அடே சோமு ஒன்பது பலாப்பழங்களை மூன்று பேருக்குச் சமமாகப் பங்கிட்டால் ஆளுக்கென்ன வரும்?

**சோமு:** கடும் வயிற்றுவலி வரும்.

* * *

**பஸ்ஸில் பிரயாணம் செய்யும் ஒருவர்:** ஐயா! ஏன் இப்படி கண்ணை மூடிக்கொண்டு இருக்கிறீர்கள்?

**மற்றவர்:** இல்லை, இந்தப் பெண்பிள்ளைகள் 'பஸ்'ஸில் ஏறினல், எழும்பி இடங் கொடுக்கவேண்டு மல்லவா? அதற்காகத்தான்.

* * *

**கதை சொல்லப் போகின்ற ஒருவர்:** அந்தக் காலத்திலே ஒரு இராசா இருந்தார். அவர்............

**மற்றொருவர்:** ஏன்காணும் அந்தக்காலத்தில் கதை[illegible] யைக் கதைக்கிறீர். நீர் இந்தக்காலத்தில் கதையைக் கதையுமேன்.

## நாம் செய்யவேண்டியன

சி. செல்வானந்தன் மே.197.

அதி காலையிலே எழுந்து எங்கள்
அன்னை தந்தையைத் தொழுதிடுவோம்
விதியுடன் காலைக் கடன்களை முடித்துக்
கைகால் சுத்தம் பண்ணிடுவோம்.

பின்பு கடவுளைத் தொழுது எங்கள்
பாடங்களைப் படித்திடுவோம்
அன்புடன் நாங்கள் படித்த பின்னர்
அமைதி யாகக் குளித்திடுவோம்.

அம்மா தந்த உணவினை என்றும்
அன்புடன் ஏற்று உண்டிடுவோம்
விம்மி விம்மி அழுதிடாமல் நாம்
விருப்புடன் பள்ளிக் கேகிடுவோம்.

ஆசிரியர் அங்கு வரும் வரைக்கும்
அமைதி யாக இருந்திடுவோம்
பேசிக் காலத்தைக் கழித்தி டாமல்
பெருமை யுடனே படித்திடுவோம்.

பாட சாலை விட்ட பின்னர்
பாதை யிலே விளையா டாமல்
ஓடி வீட்டை அடைந்திடுவோம்
ஒழுக்க மாக இருந்திடுவோம்.

மாலை வேளை யிலே நல்ல
மாணவர்க ளுடன் கூடி
சோலைப் பக்கங் களிற் சென்று
தேகாப்பி யாசம் செய்திடுவோம்.

## ஒரு குதிரை (சுய சரிதை)

ச. திரவியராசா கி.156

நம் முன்னோர்கள் "அராபியா" என்றதேசத்திற் பிறந்தார்கள். நானும், என் அன்னையும் அங்கே பிறந்தோம். எங்கள் எஜமான் எனக்கும் அன்னைக்கும் நிரம்பத் தீனி போட்டு வந்தார். அங்கு நாங்கள் சந்தோஷமாகப் பல காலம் சீவித்து வந்தோம். இப்படி வசித்துவருங் காலத்தில் என் எஜமானிடம் ஒரு பிரபு வந்து எங்களை விலை கொடுத்து வாங்கினர். பிரபு தன் வீடு சென்றதும் எங்களை ஓர் சிறிய கொட்டிலுக்குட் கட்டினர். எங்களுக்குப் பிரபு நேரத்திற்கு நேரம் உணவும் நீரும் வைத்துவந்தார். வேறொருவர் என் பிரபுவிடம் வந்து என் அன்னையை விலைக்கு வாங்கினர். என் அன்னை என்னை விட்டுப் பிரிந்ததும் நான் கதறி அழுதேன். கொஞ்சக் காலம் செல்லப் பிரபு என் மீது சவாரி செய்தார். சவாரி செய்யும் பொழுது நான் வாங்கிய அடிகளும், குத்துகளும் சொல்லமுடியாது. ஐயோ! அவைகளைச் சொல்ல என் நா தடுமாறுகிறது. என் பிரபு ஒரு வண்டி வாங்கினர். என்னை வண்டியிற் பூட்டியதும் நான் மிகவும் வேகமாக ஓடினேன். பிரபு எனக்கு நல்ல தீனி போட்டுவந்தார். என்னை ஒரு பந்தய வீரனுக்குவதற்கு என்னைப் பழக்கி வைத்தார். பந்தய ஓட்ட நாள் வந்ததும் நான் பந்தய ஓட்டம் ஓடுவதற்குப் போனேன். பந்தய ஓட்டம் ஓடும்பொழுது மற்றைய நண்பர்களை விட நான் நன்றாக ஓடினேன். அதனல் என் எஜமானுக்கு அளவில்லாத ஆனந்தம் உண்டானது. பல மனிதர் என்மேல் ஏறிச் சவாரி செய்தார்கள். அவர்கள் எனக்கு அதிக பணம் கொடுத்தார்கள். நான் அதை என் எஜமானிடம் கொடுத்தேன். ஒரு நாள் என் எஜமான் என்னைச் சவாரி செய்து கொண்டு ஒரு ஊருக்குப் போனர். வீட்டிற்குத் திரும்பும் பொழுது நடுச் சாமமாய்விட்டது. வீட்டிற்கு வந்து தன் வேலையாட்களைக் கூப்பிட்டார். அவர்கள் ஒருவரும் வரவில்லை. அதனற் பிரபு என்னை ஓர் மரத்திற் கட்டிவிட்டுப் படுக்கைக்குச் சென்றார். ஓர் கள்வன் என்னை அவிழ்த்துச் சவாரி செய்தான். கள்வன் சவாரி செய்த சத்தத்தைக் கேட்டுப் பிரபு திடுக்கிட்டு எழுந்தார். மரத்திற் கட்டிய தன் குதிரையைப் பார்த்தார். காணவில்லை, உடனே கள்வனைப் பின்தொடர்ந்து பிரபு ஓடினர். அதில் நின்ற சனங்கள் கள்வனைப் பின்தொடர்ந்து ஓடினர்கள். சனங்கள் கள்வனைப் பிடித்துவிட்டார்கள். கள்வனுக்கு ஏற்ற தண்டனை கிடைத்தது. ஒரு நாள் பிரபு என்னை றோட்டிற் சவாரி செய்தார். றோட்டின் குறுக்கேயுள்ள "றெயில்"ப் பாலத்தைக் கடக்கும்பொழுது ஒரு புகையிரதம் என்னையும் எஜமானையும் தூக்கி எறிந்துவிட்டது. இருவரும் படுகாயமடைந்தோம். எஜமான் இவன் வேலைக்குதவாதவனென்று விட்டுவிட்டார். நான் மழையென்றும் வெயிலென்றும் பாராமல் கிடந்து வாடுகிறேன். உலகத்தில் இன்பமும் துன்பமும் மாறி மாறி வருவது இயல்புதானே!

### ஈழகேசரி — பாலர் பகுதி

முழுப்பெயர்:..............................

விலாசம்:..............................

..............................

..............................

பிறந்ததிகதி:..............................

..............................

தந்தையார் அல்லது ஆசிரியர் ஒப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒப்பற்ற எழுத்தாளன்

## நேருஜி நடையழகு

பேணுட்ஷோவைப் போலவே நேருவும்தலைசிறந்த எழுத்தாளர். ஷோ ஒருமுறை நேருவைப்பற்றிச் சொல்லும்போது, அரசியலிற் பிரவேசிக்காவிட்டால் நேரு உலகிலேயே ஒரு தலைசிறந்த எழுத்தாளராயிருப்பாரென்றுகூறினார். அரசியற் சுழலில் அவர் வாழ்நாளின் முற்காற் பகுதியைக் கழித்தபோதும் கூட, எழுத்துலகிலும் அவர் சிறந்த பெயர் பெற்றிருக்கிறார். உலகில் ஆங்கிலத்தின் வளமும் சுவையும் குன்றாமல், எழுதும் மிகச் சில எழுத்தாளரில் அவரும் ஒருவர்.

### கவிதை உள்ளம்

நேரு கவிதை ஒன்றும் எழுதவில்லை. ஆனாலும் நேரு உண்மையான கவி என்று சொல்லலாம். கவிதையின் சுவையை ஆழ்ந்து அனுபவிக்கத் தெரிந்தவர். தமது சுயசரித்திரம், நான் கண்ட இந்தியா இவற்றில், அவர், எடுத்துக்காட்டாகவும் மேற்கோளாகவும் கையாளும் கவிதைத் துணுக்குகள்தாம் எத்தனை? இயற்கையின் அழகில் சொக்கித் தன்னையே மறந்துவிடுவார் நேரு. சிறையில் அடைபட்டு இருந்தபோது, பார்ப்பதற்கு இடமே இல்லாதிருந்தபோதும் கூட, ஆகாய வெளியில் செல்லும் மேகங்களைப் பார்த்து ஆறுதல் அடைந்ததாக நேரு சொல்லுகிறார். அதிலும் மலைச்சாரலைக் கண்டால் நேருவுக்கு, உலக ஞாபகமே போய்விடும். காஷ்மீரத்தின் அழகை அனுபவிப்பதில் இணையற்ற சந்தோஷம். ஓய்வு கிடைக்கும் போதெல்லாம் அவர் காஷ்மீரத்திற்குப் போகத் தவறுவதில்லை. சமீபத்தில் ஐரோப்பா சென்றபொழுது, அல்பன்மலையின் அழகைப் பார்த்து அப்படியே மெய்மறந்து நின்றாராம். உலகில் தன்னை மறந்து இயற்கையழகில் ஈடுபடும் இராஜதந்திரிகள் வெகுசிலர். நேரு இயற்கையழகைக் கண்டால் அரசியலையெல்லாம் மறந்துவிடுவார்.

### பொருட் செறிவு

சிற்பம் சங்கீதம் முதலியவற்றில் நேருவின் ஆசை எல்லோரும் அறிந்ததே. தன்னை மறந்து கலையில் ஈடுபடுபவனே உண்மையான சிறந்த எழுததாளனாக முடியும். நேரு சிறந்த எழுததாளரானதில் வியப்பென்ன?

நேருவின் ஆங்கில நடை, அழகு, தெளிவு, குழைவு முதலிய சகல அம்சங்களும் கொண்டது. காந்தியடிகளின் நடையைப்போல், வெட்டொன்றும் துண்டிரண்டுமாக இருக்காது. வெறும் வார்த்தைகளாற் பின்னப்பட்டதுமல்ல நேருவின் நடை. ஒருமுறை ஆற்றுப் பெருக்குப்போல வரும். மற்றொருமுறை சண்டமாருதம்போலவும் இன்னொருமுறை மலையருவியைப்போலவும் பின்னொருமுறை சிறு நீரோடையைப் போலவும், சமயத்திற் கேற்றாற்போல, வேகம் பலம் இவற்றில் மாறுபாடடையும். நேரு ஓய்ந்தநேரமெல்லாம் படித்த வண்ணமிருப்பார். ஆனால் வெறும் படிப்போடுமட்டுமன்றி, அவர் நேரிற் கண்டது கேட்டது எல்லாவற்றையும் கொண்டு இரசமாக, வார்த்தைகளையும் எண்ணங்களையும் பிணைப்பார். நேருஎழுதியபுத்தகங்களைப் படிப்பவர்களுக்கு, அதில் பொருட்செறிவு அதிகமா, நடையழகு அதிகமா என்று பிரித்துச் சொல்ல முடியாதபடி இரண்டும் ஒன்றோடொன்று போட்டியிடும்.

### நகைச்சுவை

எல்லாவற்றிற்கும் மேலாக நேருவுக்கு நகைச்சுவை அதிகம். தன்னைத்தானே பார்த்துச் சிரிக்கும் தன்மைதான் உண்மையான நகைச்சுவை. அவருடைய சிறு குறைகளை யார் கேலி செய்தாலும் அவரும் சேர்ந்து சிரிப்பார். தன் சுய சரிதத்தில் தன்னைப்பற்றிக் கேலியாக எத்தனையோ இடங்களில் எழுதியிருக்கிறார். தங்கை, மனைவி யாவருமாக நேருவை வீட்டில் "பாரதத்தின் முடி சூடா மன்னரே, இந்தியாவின் இரத்தினமே." என்றெல்லாம் சொல்லிக் கேலி செய்து விடுவார்களாம். இவற்றை அவர் சுயசரித்திரத்தில் விரிவாக எழுதியிருக்கிறார். நேரு தன்னைப்பற்றித் தானே ஒருமுறை, குணதிசயவர்ணனை எழுதி அதை சாணக்கியன் என்ற புனை பெயரின் கீழ் மொடேண் ரிவியூ என்றபத்திரிகையிற் பிரசுரித்து விட்டார். அதில் நேருவின் குற்றங் குறைகள் அவர் சர்வாதிகாரியாகும்படியான அவர் குணக் குறைகள் யாவும் வர்ணிக்கப்பட்டிருந்தன. படித்தவர்கள், யார் நேருவை இம்மாதிரி அவதூறு செய்தது என்று கேட்கவே, கடைசியாக எழுதியது நேருதான் என்பது வெளியாயிற்று.

நேரு எழுத்தாளர் மட்டுமல்ல, பொதுவாக எழுத்தாளரின் நன்மையிலும் அக்கறை கொண்டவர். எழுத்தாளர்கள் முதலாளிகளிடம் ஈன விலைக்குத் தங்கள் எழுத்தோவியங்களை வயிற்றுப் பிழைப்புக்காக விற்றுவிடும் கொடுமையை ஒழிக்க ஆவல் கொண்டார். இது விஷயமாக அவர் முயற்சியெடுத்து வருகிறார். எழுத்தாளர்களின் எழுத்துக்களைச் சரியான விலைக்கு விற்க ஏற்பாடு செய்ய, ஒரு சங்கம் நிறுவவேண்டும் எனச் சமீபத்திற் கூறினார்.

### நித்திய இன்பம்

உலகில் அழியாது நிற்கும் பெயர்கள் சிலரே. இராஜதந்திரிகளின் பெயர்கள் காலக்கிரமத்தில் மறைந்துவிடுகின்றன. எழுத்தாளர்கள் கவிஞர்கள் ஆகியோரின் பெயர்கள் என்றுமே நிலைத்து நிற்கின்றன; மகாத்மாவின் பெயர் கூட இந்திய சுதந்திரத்தின் கர்த்தா என்றவகையில் காலக்ரமத்தில் மறையலாம். ஆனால், இணையில்லாத அஹிம்ஸாவாதி என்ற வகையில் என்றென்றும் நிலைத்திருக்கும். நேருவின் பெயர், அரசியல் ஞானி, சமதர்மவாதி என்ற வகையில் மறைந்துவிடலாம். ஆனால், தலைசிறந்த எழுத்தாளர், கவிதை வன்மை படைத்தவர் என்ற வகையில் என்றென்றும் அழியாது. இயற்கையழகை மனிதர்கள் அனுபவிக்கும் நாள்வரை, வீரத்தையும் தியாகத்தையும் மனிதர்கள் மறவாத நாள்வரை, அவர் சுய சரிதமும், நான் கண்ட இந்தியாவும், நிலைத்து நின்று எண்ணற்ற வாசகர்களின் உள்ளங்களைக் கொள்ளை கொள்ளும்.

அரசியற்றுறையில் ஈடுபடாதிருந்தால் நேருஜி அதி அற்புதமான எழுத்தாளராக விளங்கியிருப்பாரென பேணுட் ஷோ ஒருசமயம் கூறியிருந்தார். இன்று நேருஜி தலைசிறந்த இராஜதந்திரியாகவும், பிரபல எழுத்தாளராகவும் உலகிடை மிளிர்கின்றார். இத்தகைய உத்தம உலகப் பிரமுகரைப்பற்றிப்பாரததேவியில் வே. சுப்பிரமணியன் என்பவர் எழுதியுள்ளார்.

# நீர் விளையாட்டு

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

விருப்பால் தேரேறுவார் மறந்து குதிரைகளை வையத்திற் பூட்டியும், வையத்திற் பூட்டும் எருதுகளைத் தேரிற் பூட்டியும், குதிரைக் கணிபவற்றை யானைக்கணிந்தும், யானைக்கணிபவற்றைக் குதிரைக்கணிந்தும், மைந்தர்புனைபவற்றை மகளிர் புனைந்தும், மகளிர் புனைபவற்றை மைந்தர் புனைந்தும் விரைந்து செல்கின்றார் என்னும் பொருள்படச் சொல்லும் சிறப்பை, ௨0-ஆம் பரிபாடலில்,

"நீரு ரரவத்தாற் றுயிலுணர் பெழீஇத்
திண்டேர்ப் புரவி வங்கம் பூட்டவும்
வங்கப் பாண்டியிற் றிண்டே ரூரவும்
வயமாப்பண் ணுநர்மதமாப்பண்ணவும்
கயமாப் பேணிக் கலவா தூரவும்
மகளிர் கோதை மைந்தர் புனையவும்
மைந்தர் தண்டார் மகளிர் பெய்யவும்
முந்துறல் விருப்பொடு முறைமறந்
தணிந்தவர்" (கரு-௨௨)

எனவரும் அடிகளால் உணரலாம்.

புறநானூற்றில் சோழன் செருப்பாழியெறிந்த இளஞ்சேட்சென்னியை ஊன்பொதி பசுங்குடையார் பாடியதாகவரும் செய்யுளில் பரிசில் பெற்றோர் உவகை மிகுதியானே அணிகலை மாறியணிந்ததாகக் கூறும்பகுதி இங்கு நோக்கத்தகும். அது, "தென்பரதவர்மிடல்சாய" என்னும் முதலையுடைய செய்யுளில்,

"எஞ்சா மரபின் வஞ்சி பாட
எமக்கென வகுத்த வல்ல மிகப்பல
மேம்படு சிறப்பி னருங்கல வெறுக்கை
தாங்காது பொழிதந் தோனே யதுகண்
டிலம்பா டுழந்தவென் னிரும்பே
ரொக்கல்
விரற்செறி மரபின செவித்தொடக்
குநருஞ்
செவித்தொடர் மரபின விரற்செறிக்
குநரு
மிடற்றமை மரபின வரைக்கியாக்
குநரும்
கடுந்தேரிராம னுடன்புணர் சீதையை
வலித்தகை யரக்கன் வவ்விய ஞான்றை
நிலஞ் சேர் மதரணி கண்ட குரங்கின்
செம்முகப் பெருங்கிளை யிழைப்பொ
லிந் தாஅங்
கறா அவருநகையினி துபெற் றிசுமே"

என்பதாம்.

இனித் தலைவர் தம் தலைவியரோடாயினும் காமக்கிழத்தியரோடாயினும் ஆடுதற்கண் ஊடியும் பின் கூடியும் இன்புறுமாற்றைப் பரிபாடல் ஏழாம்பாடலில்,

"விரும்பிய வீரணி மெய்யீரந் தீரச்
சுரும்பார்க்குஞ் சூர்நறு வேய்ந்தவள்
கண்ணெய்தல்
பேர்மகிழ் செய்யும் பெருநறுப் பேணி
யவே
சூர்நறு வார்ந்தவள் கண்
கண்ணியல் கண்டேத்திக்
காரிகைநீர் நோக்கினைப்
பாணுதரித்துப் பலபாடவப்பாட்டுப்
பேணு தொருத்தி பேதுற வாயிடை
யென்னை வருவ தெனக்கென் றினையா
நன்ளுமர் மார்ப னடுக்குற நண்ணிச்
சிகைகிடந்த வூடலிற் செங்கண்
சேப்பூர
வகைதொடர்ந்த வாடலு ணல்லவர்
தம்முட்
பகைதொடர்ந்து கோதை பரியூஉ
நனிவெகுண்
டியாறுடுமேனி யணிகண்ட தன்
னன்பன்
சேறுடுமேனி திருநிலத் துய்ப்பச்
சிரமிதித்துத்
தீர்விலதாகச் செருவுற்றாள் செம்புன
லாரு டூடுங் கடை"

எனவரும் அடிகளானும்,

[இவ்வடிகளின் பொருள், 'தலைவி விரும்பிய புனலாட்டணியையுடைய மெய் ஈரந் தீர்ந்து வெய்தாக நுகர்தற்குக் கடியநறுவை யேந்தியபொழுது, அவள் கண் நெய்தற்பூவை ஒத்தன: அந்நறுவை ஆர்ந்தபொழுது அவள் கண் கண்டார்க்கு மிக்க மகிழ்ச்சியைச் செய்யும் பெரிய நறவம் பூவை ஒத்தன. அக்கண்ணியலைக் கண்டு ஏத்தி அவற்றது காரிகை நீர்மையையுடைய நோக்கினையாதரித்துத் தலைவன் பாணி சாதிபோலப் பலவகையாற் பாட, அப்பாட்டைத் தன் காதலியைப் பாடுகின்றதென்றறியாது வேறொருத்திகேட்டு அவனோடு கூடுதற்கு வருத்தமுற அவ்விடத்து அதனைக் கண்டு இனி எனக்கு என் வரப்புகுகின்றதென்று அஞ்சி, நல்ல பரந்த மார்பன் தலைவியைச் சேர்ந்து நடுக்கமுற நறவுண்டு சிவந்த கண்முன் குறைகிடந்த ஊடலின்மேல் விளைந்த இதனாலும் சிவப்பூர வகுப்புப் பொருந்திய நீராட்டின்கண் வந்த மகளிர் காண அவனோடு பகைமைமிக்குத் தன் மாலையைப் பரிந்து மிக வெகுள, யாறுடுந் தன் மேனியழகை உட்கொண்டு பாராட்டிய காதலன் தன் சந்தனச்சேறுடிய மேனியை மிலத்துய்த்து வணங்க, அவன் சிரத்தை மிதித்துப் பின்னும் வெகுளி தீராமையா லூடினாள், செம்புனலை ஊரெல்லாமாடுகின்ற காலத்து' என்பதாம்.]

௨0-ம் பரிபாடலில்,

"சூட்டுங் கண்ணியும் மோட்டு
வலையமும்
இயலணி திப்ப வேதி யமர்பரப்பி
.... .... ....
.... .... ....
மாலை யணிய விலைதந்தான் மாதர்வின்
கால சிலம்பு கழற்றுவான் சால
வதிரலங் கண்ணிநீ யன்பனெற் கன்பன்
கதுவா யவன்கள்வன் கள்விநா
னல்லேன்" (௱0-அ௨)

எனவருமடிகளானும், ஐங்குறுநூற்றுள் புனலாட்டுப்பத்துள்,

"புலக்குவே மல்லேம் பொய்யா
துரைமோ
நலத்தகு மகளிர்க்குத் தோட்டுணை
யாகித்
தலைப்பெயற் செம்புன லாடித்
தவாஅனிசிவந்தன மகிழ்நநின்கண்ணே"
(அ0)

என வருஞ் செய்யுளானும் அறியலாம்.

[இவ்வைங்குறுநூற்றுச் செய்யுளின் பொருள், 'யாம் நின்னொடு புலக்கின்றேமல்லேம், பொய்த்தலின்றிச் சொல்லுவாயாக; அழகு தரும் பெண்கள் இன்பமுறுதற்கு அவர் தோளுக்குத் துணையாய் முதற்பெயலால் வருகின்ற சிவந்த புனலின்கண்ணாடி, மகிழ்நனே! நினது கண்கள் மிகவுஞ் சிவப்படைந்தன' என்பதாம். இது தன்னையொழியப் புதுப்புனலாடித் தாழ்த்து வந்த தலைமகனோடு தலைமகள் புலந்து சொல்லியது.]

இனிக் காமக்கிழத்தி புலத்தல்,—

"மண்கனை முழவொடு மகிழ்மிகத்
தூங்கத்
தண்டுறை யூர னெஞ்சேரி வந்தென
வின்கடுங் கள்ளி னஃதை களிற்றொடு
நன்கல னீயு நாண்மகி ழிருக்கை
யவைபுகு பொருநர் பறையி னானது
கழறுப வென்பவவன் பெண்டி ரந்திற்
கச்சினன் கழலினன் றேந்தார்
மார்பினன்
வகையமைப் பொலிந்த வனப்பமை
தெரியற்
சுரியலம் பொருநனைக் காண்டி
ரோவென
வாதி மந்தி பேதுற் றினையச்
சிறைபயந் துரைஇச் செங்குணக்
கொழுகு
மந்தண் காவிரி போலக்
கொண்டுகை வலித்தல் சூழ்ந்திசின்
யானே" (எசு)

எனவரும் அகநானூற்றுச் செய்யுளானறிக.

[இச்செய்யுளின் பொருள்:- 'மண்பூசிய திரண்ட முழவொலியோடு கண்டார்க்கு மகிழ்ச்சி மிகும்படி நாங்கள் கூத்தாட, அதனைக்காணும்படி தண்ணிய துறையையுடையவூரன், எம்சேரிக்கு வந்தானாக, இனிய கடிய கள்ளுணவையுடைய அஃதையென்பான் களிற்றொடு நல்ல கலன்களையீயும் நாளோலக்கத்தையுடைய அவையிற் புகும் கூத்தாது பறையொலிபோல நீங்காது அவன் பெண்டிர் வைவர் என்று சொல்லுவர்; கச்சினனும் கழலினனும் தேன் பொருந்திய தாரையணிந்த மார்பையுடையவனும் தொழிற்கூறமைந்த பொலிவு பொருந்திய அழகமைந்த மாலையையணிந்த மயிர் முடியையுடையவனுமாகிய ஆட்டனத்தியைக் கண்டீரோவென்று அவன் மனைவியாகிய ஆதிமந்தியென்பவள் தயங்கி உருந்த அவனைப் பற்றிக்கொண்டு அனையமோதிப் பரந்து செவ்விய கீழ்த்திசையை நோக்கிப் பெருகும் அழகிய தண்ணிய காவிரியாற்றைப்போல அவ்வூரனை என்னிடத்தே (கொண்டுபோகவிடாது) கையாலே பற்றிக்கோடலைச் சூழ்ந்தேன் யான்" என்பதாம்.]

இனிப் பரத்தை புலத்தல்—ஐங்குறுநூற்றுப் புனலாட்டுப் பத்துள்,

"அம்மவாழியோமகிழ்நநின்மொழிவல்
பேரூ ரலரெழ நீரலைக் கலங்கி
நின்னொடு தண்புன லாடுதும்
எம்மொடு சென்மோ செல்லனின்
மனையே" (எஎ)

எனவரும்செய்யுளானுணர்க.

[இதன் பொருள்:- 'மகிழ்நனே! நினக்கு ஒன்று கூறவேன், பெரியவூரிடத்தே யலருண்டாக நீரிடத்து அலைபோலக் கலக்கமுற்று நின்னொடு தண்ணிய புனலாடுவேம். நின் மனையிடத்துச் செல்லாயாய் எம்மொடு செல்வாயாக' என்பதாம். இது முன்னொருஞான்று தலைவியோடு புனலாடினானெனக்கேட்டு இவனுடனினியாடேனென வுட்கொண்ட பரத்தை 'புதுப் புனலாடப்போது' என்ற தலைமகற்குச் சொல்லியது.]

இனிப் புனலாடற்கண் ஊடிப் பின் கூடுமியல்பை,

"பதியெதிர் சென்று
பருஉக்கரை நண்ணி
நீரணி காண்போர்
நிரைமாட மூர்குவோர்
பேரணி நிற்போர்
பெரும்பூச ரூக்குவோர்
மாமலி யூர்வோர்
வயப்பிடி யுந்துவோர்
வீமலி கான்யாற்றின்
றுருத்தி குறுகித்
தாம்வீழ்வா ரகங்
தழுவுவோர் தழுவெதிரா
தியாமக் குறையூட
லின்னசைத் தேனுகர்வோர்
காமக் கணிச்சியாற்
கையறவு வட்டித்துச்
சேமத் திரைவீழ்த்துச்
சென்றமளி சேர்குவோர்"
(௨௬-௩௪)

எனப் பரிபாடற்கண் வரும் ௧0-ஆம் பாடலடிகளான் உணர்க.

இப் பத்திரிகையில் வெளியாகும் ஹாஸ்யக் கட்டுரைகள், கதைகளில் வரும் பெயர்கள் கற்பனைப் பெயர்களே. கட்டுரையாளர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஸ்தமன வேளை

பரணி

**தொடர் கதை**

## 5. ஏமாந்த சோணகிரி

பெரியகாட்டின் விளிம்பிலிருந்த அந்த மலைப் பாறையின் அடியிற் காத்திருந்த அத்தனை பொலீஸ்காரரும் வெகுநேரம் வரையில் அங்கேயே நின்றார்கள்.

நேரம் போய்க்கொண்டேயிருந்தது. அஸ்தமன நேரத்திற் கீழ்வானிலே தோன்றிய நட்சத்திரங்கள் மெல்ல மெல்ல வான மத்திக்கு வந்துவிட்டன. அந்தப் பாதைவழியாயாகப் போகவேண்டிய கடைசி ரயிலும் போய்விட்டது. எங்கும் ஒரே அமைதி.

சாம்பசிவன் கைக்கடிகாரத்தை 'லைட்' வெளிச்சத்திற்கவனித்தான். இரண்டுமணி ஐம்பத்தொரு நிமிஷம்!— சாம்பசிவன் நெஞ்சம் துணுக்குற்றது. கள்ளச் சந்தைக்காகக் கொள்ளையடிக்கும் அந்த முதலாளிகள் தன்னை நன்கு ஏமாற்றிவிட்டனர் என்பதை உணர்ந்துகொண்டான். சீதாபதியின் கதி என்னவாயிருக்குமோ என்று எண்ணிய போது அவன் நெஞ்சம் பெரும் வேதனை அடைந்தது. ஆமாம் அவன் சீதாபதிமேல் வைத்திருந்த பெரும் அன்பு அவ்வளவு!

'சீதாபதியைக் காணவில்லை' என்பதைப் பொலீஸ் தலைமை அதிகாரி மூர்த்திக்கு அறிவிப்பதற்காக ஒரு சேவகன் ஓடினன். மூர்த்தியிடமிருந்து 'டெலிபோ'னில் "சீதாபதி வீட்டுக்கு வந்தாரா?" என்ற கேள்வி சீதாபதியின் தகப்பனர் சங்கரலிங்கம்பிள்ளைக்கு வந்தது. அவரிடமிருந்து கிடைத்த பதில் "இல்லையே!" என்பதுதான்! அடுத்த கணத்தில் மூர்த்தியிடமிருந்து, "சீதாபதியைத் தேடுங்கள்" என்று கட்டளை சாம்பசிவனிடம் பறந்தோடியது.

அங்கே வீட்டிற் சீதாபதியின் தகப்பனரும், தாயார் மங்கையர்க்கரசியும் கண் உறங்காமல் அந்த நீண்ட இரவுப் பொழுதைக் கழித்தார்கள். சங்கரலிங்கப்பிள்ளை அடிக்கொருதரம் பொலீஸ் நிலையத்தை விசாரித்துக்கொண்டிருந்தார். பேசும் தந்திதான் இருக்கின்றதே. "மகனே! நீ எங்கே போனய்?" என்னும் தீனமான குரலில் எழுந்த மங்கையர்க்கரசியின் கேள்வி அயல் வீட்டுக்காரர்களின் தூக்கத்தையும் குழப்பிக்கொண்டிருந்தது.

* * *

மலைக்கு அப்பால் பூமாதேவியானவள், இருண்ட அடர்ந்த காடாக உருவம் கொண்டிருந்தாள். வானைத் தொடும் விருக்ஷங்கள், பூமியை மறைத்து மூடிய செடி கொடிகள், இடையிடையே எழுந்து நின்ற கற்பாறைகள், இவைகளுக்கு மத்தியில் சீதாபதியைத் தேடுவதென்றால்....... அது சாதாரணவேலையா?

ஏறக்குறைய முப்பது 'லைட்'டுகள் காட்டிலே குடிகொண்டிருந்து அந்தகாரத்தை ஊடறுத்தன. மனிதர்கள் இனி மேற்றான் கொண்டாடப்போகும் அந்த வருடத்துத் 'தீபாவளி'யைக் காட்டு மிருகங்கள் அன்றே கொண்டாடிவிட்டன. முப்பதுக்கு மேற்பட்ட தீபங்கள் அன்று அந்த ஆரணியத்தை அலங்கரித்திருந்தன.

பொலீசார் சலித்துச் சலித்துத் தேடினர்கள், ஒவ்வொரு மரத்தடியையும் — ஏன் வேர்கள், புல்லுகளுக்கு அடியிற் கூட அவர்கள் தேடிக்கொண்டு வந்தார்கள். ஆயினும்....அது புரட்டாசிமாதக் கடைசிவாரம். ஆகவே மாரிகாலத்தின் கோலம் ஆகாயத்தில் இல்லாமற் போகவில்லை. ஆகவே மணிக்கொரு தடவை மழை தூறிக்கொண்டிருந்தது. பொலீசாருக்கு அது பெருங் கஷ்டமாயிருந்தது.

கிழக்கு வானில் வெள்ளை ரேகை ஒன்று மங்கலாகப் படர்ந்தது. வரவர வானம் முழுவதுமேவெளுத்தது. விடியற்காலம். சாம்பசிவனிருந்த இடத்துக்கு இரண்டு பொலீஸ்காரர் ஓடோடியும் வந்தார்கள். 'ஓடிவருவதேன்' என்று அவன் கேட்டபோது, "சீதாபதியின் மோட்டார் சைக்கிள் ஒரு மரத்தடியில் நிற்கிறது" என்றார்கள். சாம்பசிவன் "எங்கே நிற்கிறது?" என்று கேட்டுக்கொண்டே அவர்களைப் பின்தொடர்ந்து போனன். ஆம், மோட்டார் சைக்கிள் ஒரு மரத்தடியில் நிற்பது நிஜம்தான்! அதுமட்டுமில்லை; சைக்கிள் மேலே சீதாபதியின் 'கோட்'டும் இருந்தது. யாவும் இரவு பெய்த மழையில் நனைந்துபோயிருந்தன.

கீழே தரையைக் கவனித்தான் பிரதம பொலீஸ் சேவகன்; ஒரு அடையாளமுமில்லை. அவையெல்லாம் மழைத்தூற்றலால் அழிந்துபோயிருக்கவேண்டும். சூரிய செங்கிரணங்கள் கிழக்கே தோன்றின. "இனிச் செய்வது என்ன?" என்ற கேள்வி சாம்பசிவன் மனசிலே தோன்றியது. கடைசியில் ஒன்றும் தோன்றமல் இத் தகவலை மூர்த்தியிடம் அறிவிக்க ஒரு பொலீஸ்காரனை அனுப்பிவைத்தான்.

பொழுது விடிந்துவிட்டது. சாம்பசிவத்துக்கு எரிச்சல் எரிச்சலாய் வந்தது. ஆமாம், காலை, காப்பி சாப்பிடாவிட்டாற் கோபம் வராமற் சிரிப்பா வரும்?

'...கிறீ....க்!....கிறீ...க்!!...' என்ன சத்தம் அது? சாம்பசிவன் உற்றுக் கேட்டபோது மறுபடியும் அதே சத்தம். ஓஹோ! அது மோட்டார் சத்தம். அதைத் தொடர்ந்து ஒரு பொலீஸ் விஸிலும் ஊதுகிறதே.

வெகு சீக்கிரத்திலேயே சாம்பசிவன் ஒரு மோட்டாருக்கருகில் போய்ச் சேர்ந்தான். வண்டியிலிருந்த இரண்டு பொலீஸ்காரர்களையும் பார்த்து, "என்ன சங்கதி, ஏன் விஸில் ஊதினீர்கள்?" என்ற கேள்வியைப் போட்டான். அவனைப்போலவே அக் காட்டுப் பூமியில் நாலு திசைகளிலும் சீதாபதியைத் தேடி அலைந்து சோர்ந்துபோய்நின்ற அத்தனை பேரும் ... இரண்டு ஓசைகளையும் ... டுக் கண் மூடி விழிக்குமுன் அங்கே ஓடிவந்து சேர்ந்துவிட்டார்கள்.

வண்டியிலிருந்த பொலீஸ்காரர்களிலொருவன், "உதவிப் பரிசோதகர் சீதாபதி அங்கே ஸ்டேசஷனுக்கு வந்துவிட்டார். உங்களையும் கூட்டிவரச் சொன்னர். தன் உடுப்புக்களையும், சைக்கிளையும் கூடவே கொண்டுவரும்படி சொன்னர்" என்றான் அவர்களைப் பார்த்து.

தங்கள் பிரியத்துக்குரியவரான உதவிப் பரிசோதகரைக் கண்ட சாம்பசிவமும், மற்றப் பொலீஸ்காரர்களும் ஒரே ஆனந்தத்தில் மூழ்கிப்போனர்கள். அவர் எங்கே போனர் என்பதை அறிய அவர்கள் ஆவலாயிருக்கவே சீதாபதி தன் கதைகளைச் சொல்ல ஆரம்பித்தார்:

சதிகாரர்களும் உதவிப் பரிசோதகரும் ஏறிவந்த மோட்டார், அந்த வீட்டு வாசலில் நின்றதும் அவர் எத்தனையோ யோசனைகளை எண்ணிவிட்டார். அவர்களிடமிருந்து எப்படித் தப்புவதென்பது பெரும் பிரச்சினையாயிருந்தது. மூடைகளையும் சிப்பங்களையும் இரண்டு மீசைக்கார ஆசாமிகளும் உள்ளே கொண்டு போய்ச் சேர்த்தார்கள். பிறகு மோட்டாருக்கருகில் வந்த ஒருவன், "துரைசாமி! நம்ம முதலாளியைக் காணேம்!" என்றான்.

சீதாபதி மனதுக்குள்ளே கடவுளை வாழ்த்தினர். ஆயினும் ஒன்றும் பேசாமலிருந்தார்.

அதற்குள் "இன்னும் அவர் வரவில்லை; ஏனே தெரியவில்லை" என்று முணுமுணுத்தான்.

"ஏன் அவர் எங்கே போனர்?" என்று சீதாபதி கேட்டார்.

"துரைசாமியைத் தேடிக் கொண்டு போயிருப்பார்!"

உதவிப் பரிசோதகர் பேந்தப் பேந்த விழித்தார்.

அவன் 'கலகல' வென்று சிரித்தான்!

"ஏன் சிரிக்கிறய்?"

"ஐயோ! பரிதாபம்! ஒரு உதவிப் பொலீஸ் பரிசோதகர் ஏமாந்த சோணகிரியாயிருக்கின்றரே என்று நினைக்கச் சிரிப்பாகத்தானே வருகிறது" என்று சொல்லி மறுபடியும் சிரித்தான்.

சீதாபதி தான் நன்கு ஏமாற்றப்பட்டதாக உணர்ந்தார். முன்பின் சிந்திக்க அவகாசமில்லாமற் கோபம் எழுந்தது. கண் மூடித் திறப்பதற்குமுன் சுழல் துப்பாக்கியை எடுத்தார். எதிர் பாராதபடி அந்த இருவரும் அவரது இரண்டு கைகளையும் பிடித்துக்கொண்டார்கள். ஒருவன் விலாவில், சீதாபதி ஒரு உதை கொடுத்தார். 'ஐயோ!' என்று அலறிய அவன் வண்டிக்கு வெளியேவந்து விழுந்தான். சீதாபதி மற்றவனையும் விழுத்தியிருப்பார்; ஆனல் அதற்குள் 'றைவர்' எழுந்து முரட்டுத்தனமாக அவர் தலையில் அடித்துவிட்டான். சீதாபதியின் ... யும் மற்றவனுமாக இழுத்துக் கொண்டு வீட்டுக்குள்ளே போனர்கள். ஒரு அறைக் கதவைத் திறந்து உள்ளே தள்ளினர்கள். அவர் கீழே விழுவதற்கும், கதவு 'தடார்' என்று மூடப்படுவதற்கும் பொருத்தமாயிருந்தது.

## 6. இடிந்த வீட்டில்

மீசைக்காரனல் தள்ளப்பட்டு விழுந்தபோது சீதாபதியின் தலை அறையின் சுவரில் மோதப்பட்டு விட்டதால், அவர் அறிவு முற்றிலுமே போய்விட்டது. விழித்தெழவும் வெகுநேரமாகி விட்டது. பிறகு அறிவு கொஞ்சம் கொஞ்சமாகத் தெளிந்தது. எழுந்து உட்கார்ந்தார். தலை 'விண் விண்' ணென்று வலித்தது. ஆ! சாம்பசிவத்துக்கும் ஒரு அடி! எனக்கும் ஒரு அடி! உதவிப் பரிசோதகர் துள்ளி எழுந்தார். வெளியிலேயே காரிருள் சூழ்ந்திருந்தபோது அந்தச் சின்னஞ் சிறிய அறைக்குள் இருள் எப்படி இருக்கும் என்பதைச் சொல்லத் தேவையில்லை.

அவரது கையே அவருக்குத் தெரியவில்லை.

இருட்டிலே காலால் நிதானமாகத் தடவிக்கொண்டே கதவைத் தேடிப் போனர். அவர் கைக்குத் தட்டுப்பட்டது. கொஞ்சத்தூரம் சுவரையே தடவிக்கொண்டு போனபோது கதவும் தட்டுப்பட்டது. இழுத்துப் பார்த்தார்; அது திறபடவில்லை. பலமாகத் தள்ளிப்பார்த்தார்; அப்போதும் அது அசையவில்லை. தடதடவென்று உதைந்தார்; அப்போதாவது அது அசைய வேண்டுமே. ஊஹூம் அது தான் கிடையாது. 'பிஸ்டல்' இருக்கிறதா என்றும் பார்த்தார். அதை விட்டுவைக்க அந்தக் கொள்ளைக்காரர்களுக்குப் பைத்தியமா? ஏதாவது கத்தி கித்தி இருந்தாற் பூட்டின் திருகு ஆணியைக் கழற்றிவிடலாம்; ஆனல் கத்தி எங்கே இருக்கிறது?

முதல்முறையாக வேடனின் வலையில் அகப்பட்டுக்கொண்டிருக்கும் சிம்மத்தைப்போல், அந்த அறைக்குள் மேலும் கீழும் நடை போட்டுக்கொண்டிருந்தார் சீதாபதி.

'சீதா சில்க் எம்போரியம்' என்ற வியாபார நிலையத்தின் மனேஜர் மேகநாதனின் நெடிய உருவம் அவர் மனக்கண் முன் தோற்றிற்று. இதற்கெல்லாம் காரணம் மேகநாதன் தானே? ரயிலிலிருந்து களவாடும் சதிகாரருக்குத் தலைவன் அவன்தானே? ஆஹா! வெளிக்கு நல்ல 'குணசாலி' என்று பெயர் வாங்கியிருக்கும் அவனது உள் உருவம் எப்படியிருக்கிறது!....

எங்கோ தூரத்திலிருந்து கேட்கும் நரியின் குரல் அவரது சிந்தனைக்குச் சுருதி கொடுத்துக்கொண்டிருந்தது.

அந்த இருண்ட அறைக்குள் வெகுநேரமாக உட்கார்ந்திருந்த சீதாபதிக்குப் பைத்தியம் பிடித்துவிடும்போலிருந்தது. மறுபடியும் சுவர்களைத் தடவிப் பார்த்தார். இந்தத் தடவை ஒரு சன்னல் அகப்பட்டது. அவரது உள்ளத்திலொரு துடிப்பு ஏற்படவே கதவைத் திறந்தார்.

வெளியே தெளிந்த வானத்தின் இரவின் தோற்றம் மெல்ல மெல்லப் பறிபோய்க் கொண்டிருப்பதைக் கண்டார். "ஆ! பொழுது விடியப்போகிறது!" என்று அவரது வாய் மெல்ல மெல்ல முணுமுணுத்தது.

அதிலேயே கொஞ்சநேரம் பார்த்துக்கொண்டு நின்றபிறகு எங்கிருந்தோ ஒரு விளக்கின் மெல்லிய கிரணம் வருவதை அறிந்தார். மரங்களுக்குள் மறைந்தும் பிறகு தோன்றியும் அலைந்துகொண்டிருந்த அந்த வெளிச்சம் ஒரு 'டோர்ச் லைட்'தா னென்பது பிறகு விளங்கிற்று.

தன்னைத்தான் யாராவது பொலீஸ்காரர்கள் தேடிவருகிறார்களோ?

உதவிப் பரிசோதகர் தமது 'விஸிலா'வது பத்திரமா

(தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The EELAKESARI
NATIONALIST TAMIL WEEKLY
LARGEST CIRCULATION IN CEYLON, INDIA & MALAYAN UNION

Vol. 19 | Chunnakam, Sunday, May 8, 1949 | No. 39

## அஸ்தமன வேளை

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

யிருக்கிறதா என்று பார்த்தார். ஆ! நல்ல வேளை! அது மட்டும் இருந்தது. மறுகணம் அந்த 'விஸில்' ஊதியது! அங்குமிங்குமாக அலைந்து கொண்டிருந்த அந்தத் தீபம் ஒரேயிடத்தில் நின்றது. மறுபடியும் 'விஸில்!' ஊதினர் சீதாபதி. அவ்வளவுதான்! அங்கேயிருந்தும் ஒரு குழல் ஊதியது. அதுமட்டுமில்லை. அந்தத் தீபம் அந்த வீட்டை நோக்கி ஓடிவந்தது. நெருங்க நெருங்க வெளிச்சத்துக்குப் பின்னல் இரண்டு பொலீஸ் சேவகர்களின் உருவமும் தெரிந்தது.

"நண்பர்களே! இங்கே வாருங்கள்! நான்தான், சீதாபதி. இங்கேயிருக்கிறேன் ....!" என்றார் உதவிப்பரிசோதகர்.

"உங்களைத் தேடித்தான் வருகின்றோம்" என்று கதறிக் கொண்டு வீட்டுவாசலுக்கு ஓடிவந்தார்கள். கதவு பூட்டப்பட்டிருந்தது. ஒரு சேவகன் ஓடிப்போய் ஒரு பெருங் கற்பாறையைத் தூக்கிக் கொண்டுவந்து கதவை மோதினான். மற்றவன் பூட்டில் துப்பாக்கிக்குண்டுகளைத் தீர்ந்தான். இப்படியே இரண்டு வாசற் கதவுகளைப் பிளந்தார்கள். கடைசியாகச் சீதாபதியிருந்த அறை வாசலுக்கே வந்து சேர்ந்தார்கள். மறுகணத்தில் அந்தக் கதவும் படார் என்று பிளந்தது.

உதவிப்பரிசோதகர் பூட்டப்பட்டிருந்த அறைக்குள்ளிருந்து தமக்கு விடுதலை கிடைத்ததே, அந்த வீட்டை விட்டு வெளியே ஓடிவந்துவிடவில்லை. சேவகர்களின் துணையுடனும் 'லைற்'றின் உதவியுடனும் அந்தப் பாழடைந்த வீட்டைப் பார்வையிட்டார். ஆங்காங்கிருந்த சில தூசிபடிந்த அறைகளுக்குள் மூட்டைகளும், சிப்பங்களும் திணிக்கப்பட்டிருந்தன. மனித வாடை மருந்துக்குமில்லை.

அந்த இரண்டு சேவகர்களும் அங்கே எப்படி அகப்பட்டுக்கொண்டது என்பதை அறியத் துடியாய்த் துடிக்கின்றார்கள் என்பது சீதாபதியின் மனதிலும் பட்டது. ஆயினும் அங்கே 'புராணம்' பாடிக்கொண்டு நிற்க நேரமில்லை.

தோழர்களே! உங்கள் மனதிலிருப்பது எனக்குத் தெரிகிறது! ஆனால் இங்கே கதை பேசிக்கொண்டு நிற்க அவகாசமில்லை. ஆறுதலாகச் சொல்லுகிறேன். ஒரு லொறியையும் இன்னும் சில சேவகர்களையும் அழைத்துவரவேண்டும். இந்த வீட்டிலும் ரோட்டிலும் பொலீஸ்காவல் வைக்கவேண்டும். போய்வரப்போகிறேன்" என்று கேட்டார்.

"போய்வாருங்கள்!" என்று தலையாட்டினார்கள் சேவகர்கள் இருவரும்.

"நண்பர்களே! இவ்வளவு தான் என் கதை! அந்த வீட்டுக்குள் மறைந்து கிடக்கும் அரிசி, பருப்பு, சர்க்கரை மூடைகளையும் புடவைகளையும் கொண்டுவந்து விடுவோம். வாருங்கள், ஒரு லொறியுடன்" என்றார் சீதாபதி தனக்கு முன்னால் குழுமியிருந்த சேவகர்களைப் பார்த்து.

கொஞ்சநேரத்துக்கெல்லாம் பொலீஸ் ஸ்டேசனுக்குள்ளிருந்து இரண்டு மோட்டார்கள் கிளம்பின. அவற்றில் உதவிப் பரிசோதகர்கள், சேவகர்கள், தலைவர், சாம்பசிவம், இரண்டு டசின் பொலீஸ்காரர் முதலானோர் இருந்தார்கள்.

முக்கால்மணி நேரத்துக்குப் பிறகு இரு மோட்டார்களும் அந்தப் பாழடைந்த வீட்டு வாசலுக்கு வந்தன. வாசற் 'கேட்'டுக்கள் திறந்து கிடந்தன. அங்கு ஈரமண்ணிற் புதிதாகப் பதிந்திருந்த ஒரு பெரும் லொறியின் சக்கர அடையாளம். ஏதோ விசேஷம் நடந்திருக்கிறது என்ற எண்ணத்தால் அத்தனை பேரினது நெஞ்சங்களும் படபடத்தன.

முன்பே அங்கு காவலாக நிறுத்தப்பட்ட இரண்டு பொலிஸ் சேவகரும் முதலில் தென்படவில்லை. கொஞ்சம் கவனித்தபோது கதவுக்குப் பின்னால் உயிரற்ற அந்த இருவரும் தென்பட்டார்கள்.

அவர்களது மார்பிலே துப்பாக்கிக்குண்டு பாய்ந்த காயமும் அதில் பெருகியிருக்கும் இரத்தமும் காட்சி தந்தன.

உள்ளேயிருந்த மூடைகள் சிப்பங்களிலும் முற்காற்பாகம் குறைந்துபோயிருந்தது. சீதாபதியின் முகம் பேயடித்தவன் முகம்போலாயிற்று.

கொஞ்சநேரம் திகைத்துப் போய் நின்ற பொலீஸ் சேவகர்கள் மிச்சமாயிருந்த மூடை, சிப்பங்களை மோட்டாரிலே கொண்டுபோய்ச் சேர்க்கத் தொடங்கினார்கள். -தொடரும்




## திருக்கேதீஸ்வரத் திருப்பணி

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

குவதற்கு வேண்டிய மடமும் அமைந்திருத்தலினால் இனி இறைவன் எழுந்தருளியிருக்கும் ஆலயத்தைச் செவ்வனே அமைத்தற்கு நாம் முயற்சி புரிதல் வேண்டும். ஆலயத் திருப்பணி வேலையை ஆரம்பித்தற்கு ஆயத்தங்கள் செய்யப்படுகின்றன.

ஆலயத்தை இப்பொழுதுள்ள கட்டடமிருக்குமிடத்தில் அமைக்க வேண்டுமோ அல்லது வேறிடத்தில் அமைக்கவேண்டுமோ என்பதைச் சமய சாஸ்திர முறைக்கும், சிற்பமுறைக்கும் இடவசதிக்கும், புராதன கட்டடபாதுகாப்புக்கும், சேரும் பணத்திற்கும், பணத்தை உபகரிக்கும் அன்பர்கள் வெளியிடும் அபிப்பிராயங்களுக்கும் ஏற்ற முறையிற்பின்னால் நிச்சயிக்கலாம்

### உறுதுணை

இப்பொழுது புது வருடம் ஆரம்பமாகி விட்டது. இவ்வருடத்தில் நாம் உண்பதிலும் உறங்குவதிலும் உலக விவகாரங்களிலும், சுய நலத்திலும் மாத்திரம் காலம் போக்காது ஏதாவது புண்ணிய கைங்கரியங்களைச் செய்ய வேண்டுமென உறுதியுடன் தீர்மானித்தல் வேண்டும். சைவமக்கள் தாம் இவ்வாண்டிற் செய்யவேண்டிய புண்ணிய கைங்கரியங்களுள் ஒன்றாக இத்திருத் தொண்டினைச் சிரமேற் கொண்டு இது நன்கு நடைபெறுமாறு ஊக்கத்துடன் உழைப்பார்களாக. அங்ஙனம் உழைப்பவர்களுக்கு இக்கைங்கரியம் இம்மையிலும் மறுமையிலும் உறுதுணையாய் நின்று உதவுமென்பதற்கு ஐயமில்லை.

முதிர்ந்து வீழ்ந்தன வெடிந்தன
உடைந்தன முதிய
நெரிந்தன வாகிய கோபுரம்
நெடுமதில் பலவும்
தெரிந்து முன்னையிற் சீர்பெற
இயற்றினர் பண்டு
புரிந்து ளோர் பெறும்
புண்ணியம் அடைவரே.
பண்டு நால்வருக் கறமுரைத்
தருளிப்பல்உலகினில் உயிர்வாழ்க்கை
கண்டு நாதனார் கடலிடங்
கைதொழக் காதலித் துறைகோயில்
வண்டு பண்செயும் மாமலர்ப் பொழில்
மஞ்ஞை நடமிடு மாதோட்டம்
தொண்டர் நாள்தொறும் துதி செய
அருள்செய்கே தீச்சர மதுதானே.

—திருஞானசம்பந்தர்

## யாழ்ப்பாணம் ஐக்கிய லாபநிதி

1918-ம் ஆ. ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம ரூபா 34,36700. 100ரூபா விகிதமான 8000 பங்குகள்

**பங்குப்பணங் கட்டுமுறை:**
மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாதந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்

**தினசரிப் பற்று வரவு:**
எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

**தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்:**
க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னுங் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1விகிதம், 2 விகிதம், 4 விகிதம், 6விகிதமாகக் கொடுக்கப்படும்

**உண்டியல்கள்:**
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும்.
இந்தியா நோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

**கடன்:**
நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

வேண்டிய விபரங்களை என்மூலம் அறிந்து கொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்

[3658]

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம்—மயிலிட்டிதெற்கு திருமகள் நிலையம் நா. பொன்னையா அவர்களால் சுன்னாகம், திருமகள் அழுத்தகத்தில் 1949-ம் ஆ. மேமீ 8உ ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org